Vol.5, Issue 2 | Annual Subscription ₹480

@NewsRotary /RotaryNewsIndia

ஜூலை 2022

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary

ஹூஸ்டன் மாநாட்டிலிருந்து சில தருணங்கள்

இடதிலிருந்து, அமர்ந்திருப்போர்: PRIPs *கார்ல் ஸ்டென்ஹாமர், கல்யாண் பானர்ஜி,* RIPE *ஜெனிஃபர் ஜோன்ஸ்,* RI *தலைவர் சேகர் மேத்தா,* RIDN *கோர்டன்* R *மெக்கினல்லி,* PRIPs *ரிச்சர்ட் கிங் மற்றும் ராஜேந்திர சாபூ.* **நிற்பவர்கள் இடதிலிருந்து:** PRIPs *மார்க் மலோனி, ஜான் ஜெர்ம், இயன் ரிஸ்லி, பாரி ரஸ்ஸின்,* D K *லீ,* K R *ரவீந்திரன் மற்றும் ஹோல்கர் நாக்.*

RI *தலைவர் மேத்தா மற்றும் ராஷி.*

ரஷீதா பகத்

இடதிலிருந்து: *அமிதா,* RID *மகேஷ் கோட்பாகி, வினிதா மற்றும்* RID A S *வெங்கடேஷ்.*

உள்ளே

12 RIன் புதிய தலைவர் — ஜெனிஃபர் ஜோன்ஸ்
ரோட்டரியின் முதல் பெண் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

22 பதவிக்காலத்தின் சாதனைகளுக்காக உழைத்தவர்களுக்கு நன்றி: மேத்தா
ஹூஸ்டனில் RI தலைவர் சேகர் மேத்தா உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி, மிகச் சிறந்த திட்டங்களுக்காக ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்களைப் பாராட்டினார்.

26 ரோட்டரியிற்கு பிரதமர் மோடியின் பாராட்டு
ரோட்டரி மாநாட்டில் வீடியோமூலம் சொற்பொழிவு நடத்திய பிரதமர் நரேந்திர மோடி ரோட்டரியின் மையக் கொள்கைகள், இந்தியாவின் மேம்பாட்டு முன்னெடுப்புகள் பலவிதத்தில் ஒத்துப்போவதாகக் குறிப்பிட்டார்.

34 உலக அமைதிக்கு ரோட்டரியின் பங்கு
ஹைதராபாத் தலைமைப் பண்புக் கருத்தரங்கில், சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகளுக்கான மாநில அமைச்சர் ஜெனரல் V K சிங் ரோட்டரியின் சிறந்த பணியைப் பாராட்டினார்.

44 பெண்களுக்கு தொழிற்கல்வி அளிக்கும் RC பரோடா மெட்ரோ
வளர் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு, இல்லத் திறன்களை வழங்கும் பயிற்சித் திட்டத்தை நடத்திய சங்கம்.

52 காஷ்மீர் மருத்துவ முகாம் நடத்திய 2,500 அறுவை சிகிச்சைகள்
காஷ்மீரில் நடந்த பெரிய அறுவைச் சிகிச்சை முகாமில் இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரியன் மருத்துவர்கள் பங்கேற்றார்கள்.

60 புனேவில் வலிப்பு நோய் அறுவை சிகிச்சைகளுக்கு ரோட்டரி ஆதரவு
வலிப்பு நோய் கொண்ட நோயாளிகளுடைய வாழ்க்கையை மாற்றும் அறுவைச் சிகிச்சையை ஆதரிக்கும் RC புனே பனேர்.

70 பானைகளும் பாத்திரங்களும் சொல்லும் கதை
சுற்றுச்சூழலுக்கு இதமான, பாதுகாப்பான சமையல் பாத்திரங்களைப்பற்றி உரையாடும் நம்முடைய பசுமைப்பத்தி.

அட்டையில்:
RI தலைவர்
ஜெனிஃபர் ஜோன்ஸ்

புகைப்படம்:
மோனிகா லோஜின்ஸ்கா

Scan our QR code & visit our Website

Scan our QR code & read our Magazine

நேபாளக் கிராமத்தில் ரோட்டரி மந்திரம்

இன்றைக்கும் குளிக்காமல், தங்கள் ஆடைகளைத் துவைக்காமல் வாழும் மக்கள் உள்ளார்கள் என்பதைக் கற்பனை செய்வது சிரமம். RC மகாபௌத்தா, RID 3292, நேபாளம், பெரெ கிராமத்தில் உள்ள 236 வீடுகளுக்கும் குழாய் நீர் இணைப்பைக் கொண்டுவந்து, கழிப்பறைகளைக் கட்டி, மக்களுடைய வாழ்க்கைகளை மாற்றியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. உலகின் மிகச் சிறந்த 10 ரோட்டரி திட்டங்களில் இதுவும் ஒன்று என்பதில் ஐயமில்லை.

N *ஜகதீசன்,* RC *எலுரு* — D 3020



பெரெ கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் தன் குழந்தையைக் குளிக்கச்செய்கிற காட்சியைக் காண்பிக்கும் அட்டைப் படம் தனித்துவமானது. குழாய் நீர் வழங்கலுக்கு ஆவன செய்த RC மகாபௌத்தா சங்கத்துக்கு நன்றி. RI தலைவர் சேகர் மேத்தா அவர்களுடைய விடைபெறும் செய்தி மிகச்சிறப்பாக அமைந்திருந்தது.

இலங்கையில் நல்ல ஆட்சியைக் கோரும் ஒற்றுமைப் பேரணி ஒன்றை PRIP K R ரவீந்திரன் வழிநடத்தியதை அறிந்து மகிழ்ந்தோம். RID மகேஷ் கோட்பாகி ரோட்டரி மாநாடுகளின் முக்கியத்துவத்தை நன்கு விளக்குகிறார். RID A S வெங்கடேஷ் உறுப்பினர்களைத் தக்கவைத்தல் என்னும் முக்கியமான தலைப்பில் கவனம் செலுத்தியுள்ளார். அறங்காவலர் தலைவர், அறங்காவலருடைய செய்திகள் ஊக்கத்தை அளித்தன.

ரவிசங்கர் டகோஜு அவர்களின் எளிமை, உதவும் மனப்பான்மை பாராட்டவேண்டியது. உக்ரேன் ரத்தன் சிந்துவதைக் கண்டு மனம் வலிக்கிறது, புற்றுநோயில் உயிர் பிழைத்தவர்களுக்குச் செயற்கை மார்பகம், RID 3292 டிஸ்கான் மற்றும் தலைமைக் கருத்தரங்கில் திட்டங்கள் போன்ற அனைத்துக் கட்டுரைகளும் ரசித்துப் படிக்கும்படி அமைந்திருந்தன.

ஃபிலிப் முலப்பொனெ M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D D 3211

ஜூன் இதழ் சிறப்பாகப் படிக்கும்வகையில் அமைந்திருந்தது. ரோட்டரி திட்டங்களைப்பற்றிய சமீபத்திய தகவல்களை ஜூன் இதழின் அட்டைப் படம் என் நெஞ்சைத் தொட்டது. பெரெ கிராமத்தைச் சேர்ந்த மக்களுடைய துன்பங்களை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருந்தார். ஹைதராபாத் RI தலைமைக் கருத்தரங்கத்துடன் தொடர்புடைய அனைத்துப் படங்களும் உயர் தரத்தில் இருந்தன.

V *ஜெயப்பிரகாஷ்,* RC *சேலம் ஈஸ்ட்* — D 2982

Rtn *தேவராஜ் கிமெரெ தலைமையில்* RC *மகாபௌத்தா வாழ்க்கையை மாற்றும் ஒரு திட்டத்தை நிறைவேற்றியுள்ளது, பெரெ கிராமத்தில் இருக்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் நீரைக் கொண்டு வந்துள்ளது. இப்போது, கிராம மக்களுடைய வாழ்க்கைமுறை நல்ல விதத்தில் மாறியுள்ளது, அவர்களுக்குத் தூய நீர் எளிதாகக் கிடைக்கிறது, அந்தக் கிராமத்தில் யாரும் திறந்த வெளியில் மலம் கழிப்பதில்லை, இதற்காக ரோட்டரிக்கு நன்றி.*

S *மோகன்,* RC *மதுரை வெஸ்ட்* — D 3000

ஜூன் இதழில் தாய் மற்றும் குழந்தை மருத்துவமனை பற்றிய ஜெய்ஸ்ரீ அவர்களின் கட்டுரை, பார்வைக் குறைபாடு கொண்டோருக்கான சதுரங்கப் போட்டிகளைப் பற்றிய கிரண் ஜெஹ்ரா அவர்களின் கட்டுரை உள்பட மிகச் சிறந்த கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. இந்த இரண்டு மிகச் சிறந்த திட்டங்களுக்காக DG சுனில் பதக் மற்றும் RC புனே ஹெரிட்டேஜ் சங்கத்துக்கு நன்றி. புகைப்படங்கள் வண்ண மயமாகவும் தெளிவாகவும் அமைந்திருந்தன.

சின்மயா மகாபத்ரா
RC ராஜ்தானி
புபனேஸ்வர் — D 3262

ரோட்டரியில் 50 ஆண்டுச் சேவையை நிறைவு செய்த Rtnகள் ஜெயராமன் மற்றும் நரசிம்மன் ஆகியோருக்கான பாராட்டு நிகழ்ச்சியைப்பற்றி எழுதியதற்கு நன்றி. இது புதிய உறுப்பினர்களுக்கு மிகச் சிறந்த ஊக்கமாக அமையும்.

N அழகுசுப்ரமணி
RC சென்னை
KK நகர் — D 3232

மே இதழில், உலக அமைதியை வளர்த்தல் பற்றி RI தலைவர் சேகர் மேத்தா வழங்கியுள்ள செய்தி சரியான நேரத்தில் பொருத்தமாக அமைகிறது. இலங்கையின் துன்ப நிலைபற்றிய ஆசிரியர் குறிப்பு மிகச் சிறப்பானது. ஒரே ஆண்டில் ரூ.1.5 கோடி க்குமேல் செலவு செய்து, மூன்று மாதங்கள் மீதமிருக்கும்போதே 200 சமூக மேம்பாட்டுத் திட்டங்களை நிறை வேற்றிய RC பெங்களூர் லேக்சைட் சங்கத்துக்குப் பாராட்டுகள். உங்கள் தட்டில் எவ்வளவு கார்பன் என்ற பிரீத்தி மெஹ்ரா அவர்களுடைய கட்டுரை தகவல்கள் நிறைந்திருந்தது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

மே இதழில் மேத்தா அவர்களுடைய செய்தி ஊக்கம் அளித்தது. ஆசிரியர் குறிப்பு இலங்கையின் பேரழிவைச் சுட்டிக்காண்பித்தது. RC பெங்களூரு லேக்சைட் சங்கத்தின் சேவைத் திட்டங்கள் பன்னாட்டு லட்சிய பிம்பமாகும், ரோட்டரியை உலக

வழங்கி இந்த இதழ் புதிய உயரங்களை எட்டுகிறது. RC மகாபௌத்தா நடத்தும் பன்னாட்டு நல்கைத் திட்டம், இலங்கை ரோட்டரியன்கள் நல்ல ஆட்சிக்கான தேவையை வலுவாக ஆதரித்தல் ஆகிய கட்டுரைகள் ரோட்டரி செய்திகளின் உலகத் தன்மையைக் காண்பிக்கின்றன. RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி இருவருடைய பன்முகத்தன்மை கொண்ட அனுபவங்களைப் படிப்பது மகிழ்ச்சி அளித்தது. பெண்களுக்கு ஆற்றல் அளித்தல், டாக்டர் நாராயணி பாண்டா அவர்களின் தாராள மனப்பான்மையால் RC சம்பல்பூர் அளித்த தாய் மற்றும் குழந்தை மருத்துவமனைப் பரிசு மற்றும் 'பனிக்கட்டி மனிதர்' செவாங் நார்ஃபெல் செய்துள்ள மிகச் சிறந்த பணி ஆகியவற்றைப்பற்றிய கட்டுரைகள் ரோட்டரியின் மிகச் சிறந்த சேவைக்குச் சான்றுகள் ஆகும்.

Dr *அனில் லாடெ*
RC *பூனா டௌன்-டவுன்* — D 3131

பெரெ கிராமத்தைச் சேர்ந்த மக்களுடைய வீடுகளுக்குக் குழாய் நீரைக் கொண்டுவந்த ரோட்டரியின் உதவி, அதன்மூலம் அவர்களுடைய நோய்கள் தடுக்கப்பட்டு நலன் மேம்பட்டது ஆகிய தகவல்கள் சிறப்பாக அமைந்திருந்தன. இலங்கையின் துன்ப நிலையைப் பொறுத்தவரை, PRIP ரவீந்திரன் இலங்கைக்கு ஒரு பரிசுபோல் அமைவார் என்றும், அவர் தன்னுடைய நல்ல அலுவலகங்களையும் பொருளாதாரத்தில் தன்னுடைய சிறந்த அறிவையும் பயன்படுத்தி இலங்கை மக்களுக்கு உதவுவார் என்றும் நாம் நம்புகிறோம்.

K M K *மூர்த்தி*
RC *செகந்திராபாத்* — D 3150

அளவில் வெற்றி கரமான ஓர் அமைப்பாக இவை நிலைநிறுத்துகின்றன. சானிட்டரி பேட் வழங்கலில் PDG விஜய் ரதி ஈடுபட்டுள்ளது இந்தியாவில் அனைத்துச் சங்கங்களுக்கும் பொருந்துகின்ற தகவலாகும். RID 3090 வழங்கும் ஃபூல்காரி பயிற்சி, கைவினைப் பொருட்களை முன்னிறுத்துதல் பெண்களுக்கு ஆற்றல் அளிக்க உதவும். PRID ராஜேந்திர சாபூ நடனம் ஆடுதல்பற்றி ஆற்றல்மிக்க ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். கர்நாடக விவசாயிகள் பயிர்களுக்கு நீர் வழங்கப் பின்பற்றும் புதுமைச் சிந்தனை கொண்ட உத்திகள் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் பின்பற்ற வேண்டிய நல்ல எடுத்துக் காட்டாகும். RC மெட்ராஸ் மற்றும் UK சங்கங்கள் இணைந்து கழிப்பறைத் தொகுதிகளைக் கட்டியுள்ள முயற்சி பிற சங்கங்களுக்கிடையிலும் தூய்மை மற்றும் சுகாதாரச் செய்தியைப் பரப்பும்.

டாக்டர் ஜெயசேகரன் V P
RC பையனூர் — D 3204

சாம்பல் நிறம் எங்கே?

உக்ரேன் போரில் பல விதமான சாம்பல் நிறப் பக்கங்கள் என்ற தலைப்பிலான RI இயக்குநருடைய செய்தியைப் பொறுத்தவரை (மே இதழ்), RI அறிக்கை "ரஷ்யப் படைகள் திரும்பப் பெறப்படவேண்டும்" என்று கோருகிறது. இந்த ஆணையில் 'சாம்பல் நிறம்' பெரிதாக இல்லை. என் தாத்தா RC மெட்ராஸ் பதிவுத் தலைவராகப் பணியாற்றினார் (1929). அவர் அமைதியை விரும்பும் மனிதர்தான். ஆனால், அநீதி மற்றும் போரை ஏவுதல் அவருக்குத் தெரிந்தால் அதைச் சுட்டிக்காண்பிக்கத் தயங்கமாட்டார். உங்கள் துணைக் கண்டம் இப்படி மதில் மேல் பூனையாக இருப்பதை எண்ணி அவர் இன்று மகிழ்ந்திருக்கமாட்டார்.

ஜான் ஆர்ம்ஸ்ட்ராங், RC சிஸ்விக் மற்றும் பிரென்ட்ஃபோர்ட் — D 1130

RC பெங்களூர் லேக்சைட், RID 3190, செய்துள்ள பணியைக் கண்டு நான் ஊக்கம் பெறுகிறேன். அவர்களுடைய சாதனைகள் அனைத்தும் ரோட்டரியன்களை ஊக்குவிக்கும்.

ஜக்தீஷ் மலு, RC குல்பர்கா சன்சிட்டி — D 3160

எல்லைகளுக்கு இடையிலான நட்பு

இந்திய, பாகிஸ்தானிய ரோட்டரியன்கள் கர்தார்பூரில் சந்திப்பு என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. இந்தியாவிலிருந்து வந்திருந்த, 25க்கும் மேற்பட்டோரைக் கொண்ட குழுவின் பகுதியாகிய நாங்கள் பாகிஸ்தானிலிருந்து வரும் புதிய நண்பர்களைப் பெற்று மகிழ்ந்தோம். அவர்களை நம் நாட்டுக்கு அழைத்தோம். பாகிஸ்தானிலிருந்து சுமார் 100 ரோட்டரியன்கள் இந்த அமைதிச் சந்திப்பில் பங்கேற்றார்கள். இந்தப் பணி எங்களுக்குள் ஒரு நேர்விதமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

Dr பல்லவி மாஜி
RC பர்த்வான் — D 3240

We welcome your feedback.Write to the Editor: **rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details,along with hi-res photos, to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.**
WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

நம் கதைகளைச் சொல்லுவோம்

நான் ரோட்டரியில் சேர்ந்தது முதல், ஒவ்வொரு மாதமும் இந்த இதழுக்காக ஆவலுடன் காத்திருப்பேன், குறிப்பாக, நம் ரோட்டரி தலைவருடைய தொடக்கக் கட்டுரைக்காக. உண்மையில், டிஜிட்டல் பிரதியை நான் பாராட்டுகிறேன். ஆனால், ஓர் இடத்தில் அமர்ந்துகொண்டு இந்த இதழின் பளபளப்பான பக்கங்களைப் புரட்டும் தொடுதலுணர்வு எனக்கு இன்னும் பிடிக்கும். புகைப்படங்கள், நாம் அனைவரும் அறிந்த, அன்பு செலுத்துகிற நம்முடைய மிகச் சிறந்த அமைப்பைப்பற்றிய நினைவில் நிற்கும் கதைகள் நிறைந்த புதையல் பெட்டி இது. கடந்த பல ஆண்டுகளாக, நீங்கள் ஒவ்வொருவரும் நடத்திய சேவைத் திட்டங்கள், மாற்றிய வாழ்க்கைகளைப் பற்றி நான் நிறையக் கற்றுக்கொண்டுள்ளேன்.

தகவல் தொடர்புத் தொழில் வல்லுனர் என்றமுறையில், முதன்மை ஊடகத்தில் நம்முடைய கதைகள் தொடர்ந்து இடம்பெறுகிற, மருத்துவர்களுடைய மருத்துவ மனைகளில், காஃபிக் கடைகளில், இதுபோல் மக்கள் அமர்ந்து, காத்திருந்து, சுற்றிப் பார்க்கிற எல்லா இடங்களிலும் நம்முடைய முதன்மை இதழ் நிறைந்திருக்கிற நாளுக்காக நான் ஏங்கியுள்ளேன். நாம் செய்கிற அனைத்தைப்பற்றியும் ரோட்டரி உறுப்பினர்கள் இன்னும் நன்றாக அறிந்திருப்பது சிறப்புதான். ஆனால், இன்னும் பல மக்கள் நம் கதைகளை அறிந்திருந்தால் அது மேலும் சிறப்பில்லையா?

எதிர்வரும் ஆண்டில் ரோட்டரியை உலக அளவில் முன்னிறுத்துவதற்கான நம் திட்டங்களைப்பற்றி நான் சிந்தித்த போது, இவை அனைத்தும் என் மனத்தில் மேலெழுந்து நின்றன. அடுத்த 12 மாதங்களில், நாம் ரோட்டரி சேவையைக் காட்சிப் படுத்தும் திட்டங்களின்மீது வெளிச் சத்தைப் பாய்ச்சப் போகிறோம், நாம் அதை விபூக அடிப்படையில் செய்யப்போகிறோம். நிக்கும் நானும் நம்முடைய கவனப் பகுதிகளில் மிகுந்த தாக்கம் உண்டாக்கிய, நீடித்த, அளவைப் பெருக்கக்கூடிய ரோட்டரி திட்டங்கள் சிலவற்றில் கவனம் செலுத்துவோம்.

நாங்கள் முதல் நிலை இதழாளர்கள், எண்ணத் தலைவர்கள், தாக்கம் உண்டாக்குவோரை அழைக்கிறோம், அவர்களுடைய வழிகளைப் பயன்படுத்தி விழிப்புணர்வு உண்டாக்க நமக்கு உதவும்படி கேட்கிறோம், இதன் மூலம் நாம் சேவை செய்ய விரும்புகிற, ஆனால், தாங்கள் அதை ரோட்டரி வழியாகச் செய்யலாம் என்று இன்னும் உணராத மக்களை எட்டுவோம்.

சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் ரோட்டரி தலைமைப் பண்புடன் தன்னை முன்னிறுத்தி வருவதை நான் முக்கியமாகக் கருதுகிறேன். கோவிட்-19 நோய்ப்பரவலின் போது நம் உறுப்பினர்கள் அமைத்த எடுத்துக்காட்டு, நம் எதிர் காலத்தை நாம் எப்படி அமைப்போம் என்பதற்கு அடித்தளமாகும்.

இதன் பொருள், நாம் நம் கதைகளைச் சொல்ல டிஜிட்டல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவோம்.

நாம் சுற்றுச்சூழலைக் கருத்தில் கொள்ளவேண்டும். அதன் ஒரு பொருள், எப்போதும் பயணம் செய்யவேண்டியதில்லை, ஆனால், முந்தைய இரண்டு ஆண்டுகளில் நாம் செய்தது போல் பொருளுள்ள வழிகளில் தொடர்ந்து இணைந்திருப்போம்.

நாம் நம்முடைய தீர்மானங் களைப் பற்றிக் கூடுதலாகச் சிந்திக்க வேண்டும், நாம் சற்று வேறு விதமாகக் கலந்து பேசுவது எப்படி என்று யோசிக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, நாம் ஒரு திட்டத்தைப் பார்க்கப் பயணம் செய்தால், அருகில் உள்ள பகுதிகளையும் பார்க்கத் திட்டமிடுவோம்.

நீங்கள் சமூக ஊடகத்தில் அல்லது ஒரு ஜூம் அழைப்பின் போது கூட உங்களுடைய கதையை முன்னிறுத்தலாம். உங்கள் சங்கங்களிலும் மாவட்டங்களிலும் குறிப்பிடக்கூடிய திட்டங்களைக் காட்சிப்படுத்தும் வழிகளைப்பற்றிச் சிந்தியுங்கள்.

ரோட்டரி சேவையும் மதிப்பீடுகளும் நம்மீது செலுத்தும் தாக்கத்தை நாம் அனைவரும் உணர்கிறோம். இப்போது, அந்த உணர்வைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கான நம் வாய்ப்பு இது.



ஜெனிஃபர் ஜோன்ஸ்
RI தலைவர்

ரோட்டரியின் பெண் தலைவருக்கு வாழ்த்துக்கள்

ரோட்டரியின் முதல் பெண் தலைவரான ஜெனிஃபர் ஜோன்ஸ், புதிய காற்றை சுவாசிப்பது போல ரோட்டரி உலகிற்குள் நுழைந்துள்ளார் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர் மேடை மீது உலா வரும் போதோ அல்லது அறையில் அல்லது மாநாட்டு அரங்கில் இருக்கும்போதோ அவரை யாராலும் பார்க்காமல் இருக்க முடியாது. அவரது பரந்த புன்சிரிப்பு, பளிச்சிடும் கண்கள், மற்றவர்களிடம் நடந்துகொள்ளும் விதம் அவரின் ஆளுமையை வெளிப்படுத்தும். ரோட்டரி குடும்பத்தில் ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அவரது செயல்பாடுகளை நான் உற்று கவனித்து வருகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரி நியூஸ் இதழின் ஆசிரியர் என்கிற முறையில் ஈவான்ஸ்டனில் அவரிடம் நேர்காணல் நடத்தினேன். அவர் ரோட்டரியின் இயக்குநராக இருந்தபோது, என்னுள் எழுந்த ஒரு கேள்வியை அவரிடம் எழுப்பினேன். “ரோட்டரியை ஒரு பெண் தலைவர் அலங்கரிக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும்” என்று கேட்டேன். அதற்கு அவர், “ஐந்து ஆண்டுகளில் ரோட்டரியில் ஒரு பெண் தலைவராக இருப்பதை நீங்கள் பார்க்கலாம்” என்று பதிலளித்தார். 2016ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த நேர்காணலில் அவர் தெரிவித்த பதில் அன்று தலைப்புச் செய்தியானது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 2021ல் ரோட்டரியின் 2022–23ம் ஆண்டின் தலைவர் பதவியை ஒரு பெண் அலங்கரிக்கப்போகிறார் என்பது தெரியவந்தது. இப்போது அவர் களமிறங்கியுள்ளார்.

அந்த நேர்காணலின் போது என்னுடைய கேள்விக்கு அவர் சொன்ன மற்றொரு பதில் முக்கியமானது. நாம் ஒவ்வொரு முறையும் RIக்கு ஒரு பெண் எப்போது தலைவராக வருவார் என்கிற கேள்வியை நாம் அடிக்கடி கேட்டு வருகிறோம். ஆனால், அந்த இடத்தில் யாரையாவது நாம் வைத்திருந்தால் ரோட்டரிக்கு மட்டுமல்ல பெண் குலத்திற்கே பெருமையாக இருந்திருக்கும் என்றார். பாலினம் முக்கியமானது என்றாலும் ரோட்டரி அதற்கு அப்பாலும் பார்க்க வேண்டும். ரோட்டரியில் சேர பெண்களுக்கு தகுதியும் ஆண்களுக்கு இணையாகச் செயல்படும் திறனும் உள்ளது. நாம் ஒரு குறிப்பிட்ட மக்களை நிரப்ப முயற்சி செய்தால் நமக்கு நாமே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறோம் என்று அர்த்தம். நமது அமைப்புக்கு தகுதியான, சரியான நபர்களை நாம் தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். 2016ம் ஆண்டு ஜெனிஃபரின் நேர்காணலை இங்கு படிக்கலாம்: *https://rotarynewsonline.org/well-see-an-ri-woman-president-in-five-years/*

ரோட்டரிக்குள்ளேயும் சரி, வெளியேயும் சரி தலைமைப் பதவிக்கு தகுதியான, திறமையான பெண்கள் தேவை. இதில் இரண்டு வழிகள் இல்லை. ஆனால், அடிப்படை காரணம் என்னவென்றால், உலகில் எல்லா பிராந்தியங்களிலும், எல்லா நிறுவனங்களிலும் தகுதியான மற்றும் திறமையான பெண்கள் இருந்தாலும், அவர்களுக்கு தங்கள் வேலையை திறம்பட செய்வதற்கான சூழல் தேவை. பெண்களுக்கு சமவாய்ப்பும், அவர்களை பாரபட்சமான கண்ணோட்டத்தோடு பார்க்கும் பார்வையும் வேண்டும். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற சூழல் தேவை. இது பெண்களுக்கு மட்டுமல்ல, சமூகத்தில் உள்ள அனைத்துப் பிரிவினருக்கும் பொருந்தும். எதையும் பாலினம், மதம், இனம், சமூகம் மற்றும் பிராந்திய கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது. அவர்களுக்கு சமவாய்ப்புகள் தேவை, பாரபட்சம் இல்லாமல் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இங்குதான் ரோட்டரியின் புதிய தாரக மந்திரமான பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கம் செயல்பாட்டுக்கு வருகிறது. முரண்பட்ட இந்த உலகில், DEI அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த சமயத்தில் முதல் பெண் தலைவரை ரோட்டரி வரவேற்கிறது. உயர் தகுதியும், திறமையும் கொண்ட ஒருவர் தலைமைப் பதவிக்கு வந்துள்ள நிலையில் DEI தாரகம் மந்திரத்தை முழுமனதுடன் ஏற்று செயல்படுத்த இது நல்ல நேரம். அதற்கு நாம் உறுதியேற்போம்.

இளைஞிகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தை சேகர் மேத்தா, தமது பதவிக்காலத்தில் கொண்டுவந்து தீவிரமாக செயல்படுத்தியதை புதிய தலைவரான ஜெனிஃபர் ஜோன்ஸ் தொடர உறுதி பூண்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. மேலிடத்திலிருந்து வழிகாட்டுதல்கள் வந்தால் அற்புதங்கள் நிகழக்கூடும். பாலின சமத்துவத்துக்கான போராட்டம் நெடியது. அதில் வெற்றபெற வேண்டுமானால் அதற்கு ஆண், பெண் இருபாலரும் தோள் கொடுக்க வேண்டும். RIல் புதிய பெண் தலைவரான ஜெனிஃபர் ஜோன்ஸ் தமது எண்ணங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த வாழ்த்துவோம்.

ரஷீதா பகத்

Governors Council

RID 2981 Selvanathan V
RID 2982 Saravanan P
RID 3000 I Jerald
RID 3011 Ashok Kantoor
RID 3012 Dr Lalit Khanna
RID 3020 Bhaskar Ram V
RID 3030 Dr Anand A Jhunjhunuwala
RID 3040 Jinendra Jain
RID 3053 Rajesh Kumar Chura
RID 3054 Dr Balwant S Chirana
RID 3060 Shrikant Balkrishna Indani
RID 3070 Dr Dushyant Choudhary
RID 3080 Kalta VP
RID 3090 Gulbahar Singh Retole
RID 3100 Dinesh Kumar Sharma
RID 3110 Pawan Agarwal
RID 3120 Anil Agarwal
RID 3131 Dr Anil Lalchand Parmar
RID 3132 Rukmesh Pannalalji Jakhotiya
RID 3141 Sandip Agarwalla
RID 3142 Kailash Jethani
RID 3150 Talla Raja Sekhar Reddy
RID 3160 Vommina Naga Satish Babu
RID 3170 Venkatesh H Deshpande
RID 3181 N Prakash Karanth
RID 3182 Dr Jayagowri Hadigal
RID 3190 Jeetendra Aneja
RID 3201 Rajmohan Nair S
RID 3203 B Elangkumaran
RID 3204 VV Pramod Nayanar
RID 3211 K Babumon
RID 3212 Muthu VR
RID 3231 Palani JKN
RID 3232 Dr. Nandakumar N
RID 3240 Kushanava Pabi
RID 3250 Sanjeev Kumar Thakur
RID 3261 Shashank Rastogi
RID 3262 Pravudutta Subudhi
RID 3291 Ajoy Kumar Law

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

ரோட்டரி ஃபெளோஷிப்பில் உருவாகும் பிணைப்பு

ரோட்டரி ஃபெளோஷிப் என்பது பொதுவான ஆர்வத்தைப் பகிர்ந்து கொள்ளும் சர்வதேச குழுக்களாகும். உலகளாவிய ரீதியில் தனிநபர்களை ஒரு பொதுவான ஆர்வம், தொழில் அல்லது பொழுதுபோக்கு நடவடிக் கைகளில் இணைத்து, மேலும் நட்பு மற்றும் சமூகத்தை கட்டியெழுப்பு வதற்கான முதன்மை நோக்கத்துடன் ஒன்றிணைக்கின்றன. ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் உறுப்பினர்கள், மற்றும் அவர்களின் நண்பர்களை பகிரப்பட்ட ஆர்வங்கள் மற்றும் தொழில் களையும் கொண்டு ஒரு அர்த்தமுள்ள, ஈடுபாட்டுடனான, மற்றும் செழிப்பான உலகளாவிய சமூகத்தை உருவாக்கு வதற்கான பொறுப்பு ஃபெளோஷிப் தலைவர்களுக்கு உண்டு.

சாகசம், இசை ஆர்வம், விளையாட்டு, சுற்றுச்சூழல், மோட்டார் சைக்கிள் ஓட்டுதல், போன்று பல ஆர்வங்களுக்காக ஃபெளோஷிப் குழுக்களை அமைத்து ஆயிரக்கணக்கான ரோட்டரி உறுப் பினர்கள் சந்தித்து வருகின்றனர். ரோட்டரி மாநாட்டில் பல்வேறு ஃபெளோஷிப் ஊக்குவிக்கும் ஸ்டால்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

புதிய ஃபெளோஷிப்களுக்கான முன்மொழிவுகள் ஏற்கனவே உள்ள ஃபெளோஷிப் அல்லது RI மற்றும் TRF இன் திட்டங்களின் நோக்கங்களை நகலெடுக்கவோ அல்லது ஒரு சேவை திட்டத்தை மேம்படுத்து வதற்கான வழிமுறையாகவோ இருக்க முடியாது. ரோட்டரி ஃபெளோஷிப் பற்றி *www.rotary.org/fellowships*ஐப் பார்வையிடவும். உங்கள் புதிய ஃபெளோஷிப் மற்ற ஃபெளோஷிப்புடன் முரண்படவில்லையா என்பதைச் சரிபார்க்க *rotaryfellowships@rotary.org*ஐ அணுகவும்.

புதிய ரோட்டரி ஃபெளோஷிப்கள் அங்கீகாரத்திற்காக RIல் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. ஒரு சர்வ தேச குழுவை நிர்வகிப்பதற்கான விவரங்களை, குறிப்பாக கட்டமைப்பு, துணைச்சட்டங்கள், பொருத்தமான உறுப்பினர் நிலுவைத் தொகைகள், உறுப்பினர்களுக்கிடையேயான தொடர்பு, தேர்தல் மற்றும் பொருப் பாளர்களை மாற்றுதல் போன்ற விஷயங்களில் உங்கள் யோசனையை ஏற்கனவே உள்ள ஃபெளோஷிப்புடன் விவாதிக்கவும். மேலும் தகவலுக்கு *rotaryfellowships@rotary.org* தொடர்பு கொள்ளவும்.

ஃபெளோஷிப்கள் ரோட்டரியில் நட்பு மற்றும் உறுப்பினர் தக்கவைப்பை ஊக்குவிக்கும். உங்களின் பல புதிய நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஃபெளோஷிப் ஆர்வங்களை நீங்கள் கண்டறிந்தவுடன் அவர்களை ரோட்டரியில் சேர நீங்கள் அழைக்க முடியும். நட்பு மற்றும் ஃபெளோஷிப் புதிய பரிமாணத்தில் நாம் ஒன்றாக ரோட்டரியை கற்பனை செய்யலாம்.

Dr மகேஷ் கோட்பாகி
RI இயக்குனர், 2021–23

களின் செய்திகள்

புதிய ஆண்டு, புதிய தொடக்கங்கள்

ரோட்டரியின் தனித்துவமான அம்சங்களில் ஒன்று, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 அன்று உலகம் முழுவதும் உள்ள அனைத்து சங்கங்களிலும் பொறுப்பில் உள்ளவர்கள் மாறுவது. இது ஒரு சங்கத்தை பெரிதாகச் சிந்திப்பதற்கும், நீண்ட கால இலக்குகளை அமைப்பதற்கும் தடையாக இருக்கிறது என்று சிலர் வாதிட்டாலும், தலைமையின் இந்த மாற்றம் கடந்த கால வெற்றிகளை அடிப்படையாக கொண்டு புதிய சிந்தனைக்கான வாய்ப்பை வழங்குகிறது என்பதை உள்ளே இருப்பவர்கள் நன்கு அறிவார்கள். கூடுதலாக, தலைமைத்துவ மேம்பாடு நம் அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும், இது அதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

சங்கத்தில், புதிய ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில், ஒரு புதிய குழு பொறுப்பேற்றுள்ள தருவாயில் நமது இலக்குகளையும் அதை அடைவதற்கான உத்திகளையும் மதிப்பாய்வு செய்யவும் மற்றும் மறுமதிப்பீடு செய்யவும் இது சிறந்த நேரமாகும். கடந்த கால வெற்றிக் கதைகள் மதிக்கப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும் மற்றும் அதனை கொண்டு அடுத்த வெற்றிகள் கட்டமைக்கப்பட வேண்டும். கடந்த காலத் தவறுகளை தயக்கமின்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும், அதிலிருந்து கற்றவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

பெரும் சவால்கள் மற்றும் நிச்சய மற்ற நிலைகளுக்கு மத்தியில் கடந்த ஆண்டில் அவர்கள் செய்த பணிகளுக்காக ஒவ்வொரு சங்கத்தையும் நான் பாராட்டு கிறேன். சென்ற ஆண்டில் பல ரோட்டேரியன்கள் வெளிப்படுத்திய ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் கண்டது உண்மையிலேயே என் மனதுக்கு இதமாக இருந்தது.

மாற்றத்திற்கான நேரம் வந்து விட்டது. இதுவரை செய்யாத ஒன்றைத் திட்டமிட புதிய ஆண்டு ஒரு நல்ல நேரம். புதிய யோசனைகளை ஒப்புக்கொள் வதற்கும், அங்கீகரிப்பதற்கும் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருக்கும் காலம் இதுவாகும். இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வோம். நமது சமூகத்தைச் சுற்றும் முற்றும் பார்த்து, எதை மேம்படுத்தலாம் என்று கற்பனை செய்வோம். வசதி குறைந்தவர்களிடம் பரிவு காட்டுவோம். இந்த பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை சமத்துவமாக மாற்ற ஒருவர் செய்யக்கூடிய விஷயங்களை கற்பனை செய்து பார்ப்போம். இந்தக் கற்பனை நம்மை இதுவரை முயற்சிக்காத பகுதிகளுக்கு அழைத்துச் செல்லட்டும். குறைவாகப் பயணித்த சாலையில் செல்வோம். பயணம் சுவாரஸ்யமாகவும் இருக்கும்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23

Board of Trustees

A S Venkatesh **RI Director & Chairman, Rotary News Trust**	RID 3232
Dr Mahesh Kotbagi **RI Director**	RID 3131
Dr Bharat Pandya **TRF Trustee**	RID 3141
Rajendra K Saboo	RID 3080
Kalyan Banerjee	RID 3060
Shekhar Mehta	RID 3291
Panduranga Setty	RID 3190
Ashok Mahajan	RID 3141
P T Prabhakar	RID 3232
Dr Manoj D Desai	RID 3060
C Basker	RID 3000
Kamal Sanghvi	RID 3250
Gulam A Vahanvaty	RID 3141

Editor
Rasheeda Bhagat

Deputy Editor
Jaishree Padmanabhan

Administration and Advertisement Manager
Vishwanathan K

Rotary News Trust
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

நாம் கொடுப்பவை ஒன்று திரண்டு பெரிதாகும்

கணக்காளரான நான், உலகை உள்ளீடுகள், வெளியீடுகள் என்கிற கண்ணாடியின் வழியாகப் பார்க்கிறேன். இன்று நாம் துல்லியமாகத் திட்டமிட்டால் நாளை வெற்றி பெறலாம். என் தொழில் எனக்குக் கற்றுத்தந்த இன்னொரு விஷயம், உள்ளீடுகள், வெளியீடுகளாகிய எண்கள் சில நேரங்களில் மிகச் சிறந்த கதைகளைச் சொல்லலாம்.

அந்தக் கதைகளில் ஒன்று, ரோட்டரி அறக்கட்டளை: அது 26.50 என்ற மிதமான உள்ளீட்டில் தொடங்கி உலகுக்கு என்ன தந்திருக்கிறது என்பது மிகச் சிறந்த ஒரு கதை.

1918ல், மிசோரியில் உள்ள கன்சாஸ் நகரத்தில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டின் மீதித் தொகையாகிய அந்தத் தொகை, 1916–17 ரோட்டரி தலைவர் ஆர்ச் கிளம்ஃப் அவர்களுடைய அறிவுறுத்துதலின்படி, உலகுக்கு நல்லதைச் செய்யும் நோக்கத்தைக் கொண்ட ஒரு நிதிக்கு வழங்கப்பட்டது. அந்த நிதி 1947வரை மிதமாக வளர்ந்தது. அந்த ஆண்டில் ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் இறந்தார், அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நன்கொடைகள் குவிந்தன. அந்த ஆண்டு, அறக்கட்டளை 18 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி ஆதரித்தது: வருங்காலத்தில் வரப்போகும் சிறப்புகளுக்கான முதல் அடையாளம் அது.

பின்னர், அறக்கட்டளை விரிவடைந்தது, குழுப் படிப்புப் பரிமாற்றம் போன்ற திட்டங்களையும் மனிதத்தன்மை நல்கைகளையும் வழங்கியது. இவை உலகெங்குமுள்ள உறுப்பினர்கள், சமூகங்களின் வாழ்க்கைகளில் நல்ல பாதிப்பை உண்டாக்கின. 1979ல், ஒரு மிகப் பெரிய நல்கை ஃபிலிப்பைன்ஸில் 6.3 மில்லியன் குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாதத்துக்கு எதிராகத் தடுப்பு மருந்து அளிக்க உதவியது. இது 1985ல் போலியோபிளஸ் அமைக்கப்பட வழி வகுத்தது.

இன்று, அறக்கட்டளை பல மில்லியன் டாலர் தொண்டு அமைப்பாக வளர்ந்துள்ளது. நம்முடைய வலுவான நிதி அளித்தல் மாதிரி, மாவட்டங்கள் தாங்கள் எந்த ரோட்டரி அம்சங்களை ஆதரிக்க விரும்புகிறார்கள். இன்று, அறக்கட்டளை பேரிடர் நேர உதவி, நோய்த் தடுப்பு, அமைதிக் கல்வி, பிற பகுதிகளில் உலகை நல்ல முறையில் பாதிக்கிறது.

இந்த ஆண்டு, அறங்காவலர்கள் 430 மில்லியன் திரட்ட இலக்கு அமைத்துள்ளார்கள். எதிர்பார்ப்புகள் கூடுதலாக உள்ளதை நான் அறிவேன். ஆனால், நம் உறுப்பினர்களால் இதைச் சாதிக்க இயலும் என்பதையும் நான் அறிவேன். நாம் நம்முடைய உயர்ந்த, ஆனால் எட்டக்கூடிய இலக்கை எட்டுவோம், நம் அறக்கட்டளையை முன்னெடுத்துச் செல்வோம்.

இயன் ரிஸ்லி
TRF அறங்காவலர் தலைவர்

TRFக்கு நம்மை அர்ப்பணிப்போம்

ரோட்டரியர்கள் ரோட்டரியின் இதயம் என்றால், ரோட்டரி அறக்கட்டளை (TRF) ரோட்டரியின் முதுகெலும்பாக உள்ளது. ரோட்டரியின் பல நல்ல வேலைகள் TRF மூலம் சாத்தியமாகிறது. TRFன் திட்டங்கள் பல லட்ச மக்களுக்கு பயனளிக்கின்றன; ரோட்டரி அறக்கட்டளை கிரீடத்தில் ஒளிரும் வைரம்.

TRFன் திட்டங்கள், ரோட்டேரியன்கள் அமைதிக்காக பணியாற்றுவதற்கான மிகப்பெரிய வாய்ப்புகளில் ஒன்றாகும். ரோட்டரி அறக்கட்டளை, அதன் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தும் நல்ல வேலைகள் மூலம், ஒரு சிறந்த உலகை உருவாக்கும் ரோட்டரியின் கனவை நனவாக்க ஒரு முன்னோக்கு பார்வையை வழங்குகிறது.

புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கும் வேளையில், அறக்கட்டளைக்கு நம்மை மீண்டும் அர்ப்பணிக்க வேண்டிய நேரம் இது. Programmes of scale-ன் 3வது விண்ணப்பங்கள் தொடங்கப் பட்டுள்ளன. இவை நன்றாக செயல் முறையில் இருக்கும் ஒரு சங்கம் அல்லது மாவட்டத்தின் திட்டத்தை விரிவாக்கி மேலும் மக்களுக்கு உதவ ரோட்டரி அறக்கட்டளையிடமிருந்து ஒரு 3–5 வருட காலத்திற்குள் $2 மில்லியன் ஒரு போட்டி மானியமாக விநியோகித்து ஆதரிக்கின்றன. இது நாம் கவனம் செலுத்தும் பகுதிகளில் இன்னும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த உதவுகிறது.

பல ஆண்டுகளாக, அளவிடக்கூடிய முடிவுகளுடன் நிலையான மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் மாற்றத்தை உருவாக்க பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2022–23 ப்ரோக்ராம்ஸ் ஆஃப் ஸ்கேல் போட்டி மானிய விண்ணப்பம் ஆகஸ்ட் 1, 2022 வரை திறந்திருக்கும். மிகவும் தேவைப்படும் இந்தச் செயலில் பங்கேற்பதைக் கருத்தில் கொள்ளுமாறு நம் மண்டலங்களின் சங்கங்கள் மற்றும் மாவட்டங்களை நான் ஊக்குவிக்கிறேன். இணைப்பு *https://my.rotary.org/en/take-action/apply-grants/programs-scale-grants.*

ரோட்டரி என்னவாக இருக்கும், எப்படி இருக்கும், இருக்க வேண்டும் என்று நாம் கற்பனை செய்து பார்க்கும் வேளையில் , நமது ரோட்டரி அறக்கட்டளையை ஆதரிப்பதற்காக நம்மையே அர்ப்பணிப்போம்.

டாக்டர் பரத் பாண்ட்யா
TRF அறங்காவலர்

District Wise TRF Contributions as on May 2022

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus	Endowment Fund	Other Funds	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
			India				
2981	108,381	2,230	15,000	336,137	461,749	184	3.5
2982	56,781	6,870	2,526	16,431	82,609	244	7.5
3000	33,653	1,611	330	47,376	82,971	41	0.8
3011	38,885	10,957	0	322,212	372,055	70	1.7
3012	47,988	18,603	80,331	506,653	653,574	154	4.1
3020	88,889	36,066	44,997	4,620	174,572	220	5.2
3030	118,627	2,141	63,185	15,704	199,657	256	5.4
3040	34,986	284	0	89,130	124,401	10	0.4
3053	68,205	1,911	30,027	182,334	282,478	66	2.4
3054	15,129	3,221	0	244,969	263,319	38	0.5
3060	201,138	10,539	933	164,320	376,930	2089	43.4
3070	53,785	127	0	32,399	86,311	269	8.7
3080	98,375	7,754	22,171	17,192	145,493	298	9.4
3090	55,709	2,379	29,000	0	87,088	219	10.5
3100	51,430	200	0	3,937	55,566	107	4.9
3110	31,338	68	1,014	33,117	65,537	125	3.6
3120	79,556	1,010	0	0	80,566	429	12.6
3131	482,401	37,285	82,013	1,368,295	1,969,994	2207	47.1
3132	45,153	5,222	5,493	12,029	67,898	93	2.8
3141	503,626	25,150	139,032	1,831,762	2,499,570	1416	24.0
3142	382,363	6,941	57,998	277,866	725,169	940	27.8
3150	110,483	44,357	183,000	122,448	460,288	881	22.3
3160	147,479	4,673	17,264	0	169,416	65	2.7
3170	184,518	17,449	36,587	197,871	436,425	536	9.2
3181	101,991	5,948	203	116	108,257	413	12.7
3182	71,734	9,718	4,000	39,487	124,940	306	9.8
3190	376,519	39,560	30,411	336,616	783,107	1533	24.9
3201	164,133	68,120	0	435,386	667,639	610	10.7
3203	52,806	22,268	7,086	335,960	418,119	188	4.6
3204	49,972	6,423	0	1,036	57,431	131	6.8
3211	72,837	1,024	0	53,020	126,881	185	4.0
3212	99,411	2,645	1,036	9,811	112,903	200	4.0
3231	25,885	14,504	9,867	10,784	61,040	160	4.7
3232	148,945	104,894	202,100	1,545,427	2,001,366	500	7.0
3240	177,799	12,647	0	77,864	268,310	637	19.5
3250	58,917	3,576	1,036	22,108	85,636	548	15.0
3261	13,136	1,833	300	210,532	225,801	40	1.4
3262	23,660	3,872	0	0	27,532	80	2.1
3291	174,518	5,789	47,804	23,785	251,895	480	12.8
India Total	**4,651,142**	**549,872**	**1,114,743**	**8,928,735**	**15,244,491**	**16,968**	**10.8**
3220 **Sri Lanka**	87,496	24,417	2,010	103,165	217,088	248	10.9
3271 **Pakistan**	9,555	5,431	0	18,685	33,670	11	0.6
3272 **Pakistan**	16,882	11,158	0	2,117	30,157	15	0.8
3281 **Bangladesh**	119,933	69,787	26,118	431,901	647,740	253	3.1
3282 **Bangladesh**	42,113	24,093	1,000	43,252	110,458	159	4.3
3292 **Nepal**	158,722	21,525	51,321	133,814	365,381	893	15.3
South Asia Total	**5,085,842**	**706,282**	**1,195,191**	**9,661,669**	**16,648,984**	**18,547**	**10.3**

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

Source: RI South Asia Office.

RIன் புதிய தலைவர் — ஜெனிஃபர் ஜோன்ஸ்

டையனா ஷோபர்க்

கடந்த பிப்ரவரி மாதம் டல்லாஸ் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில், நடைபெற்ற பயிற்சி கருத்தரங்கில், ரோட்டரி சங்கத் தலைவர்களை, 2022–23ம் ஆண்டின் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள சார்ஜென்டுகள் சிறிய அறைக்குள் அழைத்துச் சென்றனர். அக்குழுவினர் உள்ளே நுழைந்தபோது சங்கத் தலைவர்கள் ஜெனிஃபரை சூழ்ந்துகொண்டு கை குலுக்கினர், ஆரத்தழுவிக் கொண்டனர். மாவட்ட ரோட்டரி உறுப்பினர்கள் உற்சாகம் பொங்க அவரை வரவேற்கின்றனர்.

குழுவினர் வரிசையாக நிற்கின்றனர். அவர்களில் சிலர் ஜெனிஃபர் மற்றும் அவரது கணவர் நிக் கிரயாசிச்சுடன் சுயபடம் (செல்ஃபி) எடுத்துக்கொள்ள காத்திருக்கின்றனர். அவர்களில் ஒரு இளம் பெண், ரோட்டரியில் பெண்களுக்கான தலைவராக இருப்பதற்கு வாழ்த்துக்கள் மற்றும் நன்றி என்று உரத்த குரலில் சொல்கிறார்.

இந்த காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த 5890 மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர் ரோண்டா வால்ஸ் கெர்பி, ஜெனிஃபர் ஒரு ராக் ஸ்டார் என்று கூறினார்.

புகைப்படம் எடுக்கும் நிகழ்ச்சி முடிந்தது, ஜென்னிஃபர், ஹூஸ்டனில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் ஏலம்விடப்படும் பல ஸ்டார் வார்ஸ் சேகரிப்பாளர்களின் ஹெல்மெட்டில் (தலைக்கவசம்) கையெழுத்திட்டார். அவர் ஒரு ஹெல்மெட்டை அணிந்த போது அங்கிருந்த ரோட்டேரியன்கள் தங்கள் செல்போனில் அதை படம்பிடித்தனர்.

ஜெனிஃபர் எல்லோரையும் சிறப்பாக உணரவைக்கிறார். அதனால்தான் எல்லோரும் அவரை தங்களது சிறந்த நண்பராகக் கருதுகின்றனர் என்கிறார் எரிக் லீ. 2016ம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச உறுப்பினர்கள் கூட்டத்தில்தான் லீ முதன் முதலாக ஜெனிஃபரை சந்தித்தார். அப்போது அவர் உள்வரும் மாவட்ட ஆளுநராக இருந்தார். ஜெனிஃபர் அப்போது RI-யின் உள்வரும் துணைத்தலைவராக இருந்தார். அது முதல் அவர்கள் அடிக்கடி சந்திக்க தொடங்கினர்.

வார இறுதியில் அவருடன் சூறாவளிப் பயணம் மேற்கொள்ளும் போது, “அவர் எல்லோரிடமும் எளிமையாக நெருங்கிப் பழகுகிறார்” என்று மக்கள் சொல்வதை லீ கேட்டிருக்கிறார். பல ஆண்டுகளாகவே ஜெனிஃபர்தான் ரோட்டரியின் முதல் பெண் தலைவர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் அவர் புதுமையான தலைவராக இருப்பார்.

ரோட்டரிக்கு இப்போதைக்கு தேவைப்படும் தலைவர் அவர்தான்

அந்த அறையே கலகலப்பாக இருந்தது. ஜெனிஃபரை வாழ்த்துவதும், உற்சாகமாக நகைச்சுவை ததும்ப பேசுவதுமாக இருந்தனர் அவருடைய நண்பர்கள். ஜெனிஃபர் மற்றும் அவரது கணவர் கிரயாசிச் இருவரும் சோர்வாக இருந்தனர். முதல்நாள் மோசமான வானிலை காரணமாக விமானநிலையத்தில் ஏறக்குறைய 9 மணி நேரம் காத்திருந்ததும் இதற்கு காரணமாக இருக்கலாம். டல்லாஸ் வந்த அவர்கள், தங்கள் உடமைகளைப் பெறுவதில் இருந்த சிக்கலையும் தீர்க்க வேண்டியிருந்தது. அடுத்த நாள் பணிகள் தொடங்குவதற்கு முன்னதாக ஓய்வெடுக்க அவர்கள் 11 மணி அளவில் படுக்கைக்குச் சென்றனர்.

55 வயதான ஜெனிஃபர் ஜோன்ஸ், ஒன்டோரியோ மாநிலம், விண்ட்ஸரில் பிறந்தார். கல்லூரி நாட்களுக்குப் பின் கரிபீயனில் இருக்கும் டர்க்ஸ் மற்றும் கைகோஸ் தீவுகளில் பணிபுரிந்தார். பின்னர் மன்ஹட்டனில் வாழ்ந்து வந்தார் மூன்று குழந்தைகளில் மூத்தவரான அவர், எலுமிச்சை பழரசக்கடை நடத்தி அதன் மூலம் கிடைக்கும் தொகையை அறக்கட்டளைக்கு அளித்து வந்தார். தமது வீட்டின் முற்றத்தில் தசைநார்ச் சிதைவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக திருவிழா நடத்தியதையும் அவர் நினைவுகூர்ந்தார். வளர்ந்து வந்த நிலையில் பெற்றோர் அவர்களுக்கு சமூக சேவை செய்ய அனுமதியளித்தனர். இப்போது அவரது தாய், தந்தை மற்றும் ஒரு சகோதரர், அவரின் மனைவி ஆகியோர் ரோட்டேரியன்களாக உள்ளனர். அவரது மற்றொரு சகோதரர், ஜெனிஃபர் ஜோன்ஸின் தலைமைத்துவத்தை மையப்படுத்தி ஓவியங்களை வரைந்துள்ளார்.

ஜெனிஃபர் மற்றும் கிரயாசிச் இருவரும் விண்ட்ஸரைச் சேர்ந்தவர்கள். ஆனால், இருவரும் சந்தித்தது கரீபியனில். பல்கலைக்கழகத்தில் படித்து முடித்து விட்டு, வானொலி நிலையத்தில் செய்தி அறையில் பணிபுரிந்து விட்டு எஞ்சிய நேரத்தில் மக்கள் உல்லாசத்துக்காக வந்து தங்கும் ஒரு ஹோட்டலில் பணிபுரிந்தார். மருத்துவரான கிரயாசிச், படிப்பு முடிந்தவுடன் டொரன்டோவில் பயிற்சி முடித்து ஸ்கூபா டைவிங்குக்காக கரீபியன் தீவுகளுக்கு வந்தார். அங்கு அவர்கள் இருவரிடையே நட்பு ஏற்பட்டது. அதன் பின் இருவரும்

விண்ட்ஸருக்குத் திரும்பினர். அங்கு இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

ரோட்டரி மாவட்டம் 6400ன் ஆளுநராக தெரிவுசெய்யப்பட்ட கிரயாசிச் பலவகைகளில் ஜெனிஃபருக்கு நேரெதிரானவர். அவர் அமைதியானவர், எதிலும் தீவிரமானவர் மற்றும் நேருக்கு நேர் உரையாடலையே விரும்புபவர். தொழிலுக்கு ஏற்ற பண்பாளர். ஜெனிஃபர் ஜோன்ஸ், துடிதுடிப்பானவர். சிறந்த தொடர்பாளர். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்கிறோம் என்கிறார் கிரயாசிச்.

ஜென்னிஃபர் 20வது வயதின் பிற்பகுதியில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார். வங்கி அதிகாரிகளிடம் தனது திட்டத்தை எடுத்துச் சொல்லி பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் உதவியுடன் ஆயிரக்கணக்கான டாலர்கள் மதிப்புள்ள உபகரணங் களை வாங்கினார். நான் எனக்கான பாதையை வகுத்துக் கொண்டேன். சில சமயங்களில் அது ஆபத்தாக முடிந்தபோதிலும், புதிய அனுபவங் களை பெற்றுத்தரும் என்கிறார் அவர்.

ரோட்டரியுடன் ஏற்பட்ட அனுபவத்தை கூறுகிறார். 1980களின் பிற்பகுதியில் வானொலி செய்தியாளர் என்ற முறையில், ஆண் உறுப்பினர்கள் நிறைந்த ரோட்டரி சங்க நிகழ்ச்சிக்கு செய்தி சேகரிக்கச் சென்றிருந்தேன். அந்த சமயத்தில் ஏற்பட்ட அனுபவம் எனக்கு பய உணர்ச்சியை ஏற்படுத்தியது. நான் 20களின் ஆரம்பத்தில் இருந்தேன். அப்போது தொலைக்காட்சி நிறுவனங்கள் அதிகாரவர்க்கத்தின் கையில் இருந்தன. 1996ம் ஆண்டு நான், மீடியா ஸ்ட்ரீட் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தைத் தொடங்கிய சில மாதங்களில், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி நிலைய மேலாளர் என்னை சந்திக்க விரும்பினார். அப்போது எனக்கு வாழ்வு கிடைத்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தேன். அந்த சந்திப்புதான் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பரிசாகும். அவரை சந்தித்துவிட்டு வந்தபின் என் வாழ்க்கைப் பாதையில் ஒரு புதிய மாற்றம் ஏற்படும் என்பதை நான்

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் கணவர் நிக் க்ரயாசிச் அவர்களுடன்.

டாலஸ் ரோட்டரி சங்கத்தில் தலைவர் ஜெனிஃபர்.

நினைத்துக்கூட பார்க்கவில்லை என்றார் ஜெனிஃபர்.

அடுத்த நாள் டல்லாஸ் பயிற்சி கருத்தரங்கில் சூப் மற்றும் சாலட் அருந்திய நேரத்தில் 1980 கூல் அண்ட் தி கேங்க் கொண்டாட்டம் பாடல் ஒலிப்பெருக்கியில் அலறியது. அரங்கில் இருந்த அனைவரும் இசைக்கு ஏற்ப கைகளை தட்டி நடன மாடத் தொடங்கினர். ஜெனிஃபர் மேடையில் இருந்தவாறே குச்சியை தலைக்கு மேலே உயர்த்தி நடன மாடுகிறார். அவருடன் selfie எடுத்துக் கொள்ளவும், அவரை கட்டித் தழுவவும் ஒரு கும்பல் வரிசை கட்டி நிற்கிறது. பின்னர் ஜெனிஃபர் நடுவில் நிற்க, மற்றவர்கள் வரிசையாக நின்று படம் எடுத்துக் கொள்கின்றனர். பாடல் முடிவடைந்த போது ரோட்டரி முன்னாள் இயக்குநர் டான் மெபஸ், அவரை மேடைக்கு அழைத்து அறிமுகப்படுத்துகிறார்.

அவரது பேச்சைக் கேட்டு அரங்கில் இருந்தவர்கள் பரவசம் அடைந்தனர். ஜோர்டானில் ஒரு குழந்தைக்கு நடந்த இதய அறுவைச் சிகிச்சையை அவர் குறிப்பிட்ட போது அரங்கில் இருந்தவர்கள் துளியும் சப்தம் இல்லாமல் கேட்டனர். அவர் பேசி முடித்ததும் கூட்டத்தினர் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றனர். ஜெனிஃபர் உடனே, தனது அடுத்த பயணத்துக்கான விமானத்தை பிடிக்க வேண்டியிருந்தது. அங்கிருந்து வேகமாக வெளியேறுகிறார்.

நான்கு மணி நேரத்திற்கு பின்னர் லாஸ் ஏஞ்சலீஸ் நகருக்கு வந்த அவர், மற்றொரு தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்களுக்கான பயிற்சி கூட்டத்தில் பங்கேற்றார். அன்றிரவு மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் பங்கேற்கும் விருந்தோம்பல் நிகழ்ச்சி. அலங்கரிக்கப்பட்ட ஒலிப் பெருக்கிகளிலிருந்து ஹவாய் இசை ஒலிக்க, ரோட்டேரியன்கள் மதுபானம் கலந்த பழச்சாறுகளை குடித்துக் கொண்டிருந்தனர். ஜெனிஃபர் அரங்கத்திற்குள் நுழைந்தபோது, அவரை சந்திக்கும் ஆர்வத்தில் ரோட்டேரியன்கள் அந்த இடத்தில் ஒன்று திரண்டனர். ஹவாயில் மாவட்டம் 5,000-தின் 2022–23ம் ஆண்டுக்கான ஆளுநர் ரண்டி ஹர்ட், அவரை நீண்ட மலர்மாலை கொடுத்து வரவேற்றார். “அவரிடம் உள்ள ஆற்றலை பற்றி மட்டுமே என்னால் நினைக்க முடிகிறது” என்று ஒருவர் கூறினார்.

ஜெனிஃபரை சந்தித்தபோது அவரது நலம் விரும்பிகளில் ஒருவரான லக்கேசியா கிங் அவரை ஆரத்தழுவிக் கொள்கிறார். அவர் அன்பானவர் மட்டுமல்ல, நேர்மையானவர் என்றார் ஹோனலூலு கிழக்கு ரோட்டரி சங்கத்தின் உள்வரும் தலைவரும், மாவட்டத்தின் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் குழுவின் தலைவருமான லகேசியா. மூட்டுபகுதி தசையில் ஜவ்வு கிழிந்ததற்காக அறுவைச்சிகிச்சை செய்துகொண்ட 8 வாரங்களில் ஜெனிஃபரை சந்திப்பதற்காக கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் ஹவாயிலிருந்து விமானத்தில் பறந்து வந்துள்ளார். காலம் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் அழைப்பு விடுக்கிறது. நம்மிடையே வேறுபாடுகள் இருந்தாலும் நாம் அவற்றை ஆதரிக்க வேண்டும் என்றார் கிங்.

இறுதியில் ஜெனிஃபர் பின்னால் இருந்த அறைக்குச் செல்கிறார். அங்கு அலோஹா (ஹவாய் நாட்டு கலாசாரம்) பின்னணியில் வேறு ஏழு பெண்களுடன் நடனம் ஆடுகிறார்.

அவர் விருந்தோம்பலுக்காக இன்னும் சில அறைகளுக்குச் சென்று கடைசியில் அரிஸோனா மாவட்ட ரோட்டேரியன்களுடன் அரட்டை அடித்துவிட்டு வெளியேற முற்படும்போது, ஒரு வயதான பெண்மணி, ரோட்டரியின் முதல் பெண் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு நன்றியும் வாழ்த்துகளும் தெரிவிக்கிறார். அதற்கு ஜெனிஃபர் ஆனால் நான் கண்டிப்பாக கடைசியில்லை என்று பதில் கூறினார்.

ஜெனிஃபர் மற்றும் கிரயாசிச் இருவரும் 2000ம் ஆண்டில், தங்களது முதல் சர்வதேச சேவை பயணத்தைத் தொடங்கினர். அவர்கள் வீட்டில் அருகில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர்கள் இருவரும் சேர்ந்து கலந்து கொண்டனர். ‘‘என்னை ரோட்டரியில் சேருமாறு அவள் ஒருமுறை கூட வற்புறுத்தவில்லை’’ என்கிறார் கிரயாசிச். அவர்கள் ஐந்து வார பயணமாக பிரேசிலில் உள்ள அமேஸானுக்குச் சென்றனர். அங்கு கிரயாசிச் ஒரு மருத்துவ கிளினிக்கை நடத்தினார். ஜெனிஃபர், கிளினிக்கை நடத்துவதற்காக நிதி திரட்ட விடியோ தயாரித்தார். மேலும் உள்ளூர் பத்திரிகையாளர்களுக்காக ஒரு பயிற்சி திட்டத்துக்கும் ஏற்பாடு செய்தார். ‘‘ஒருமுறை நாங்கள் சர்வதேச ரோட்டரி சேவை பயணம் சென்றது என்னுள் ஆழமாக எதிரொலித்தது’’ என்று அவர் கூறினார். இது தான் நான் அதிகம் செய்ய விரும்புகிறேன் என்று எனக்கு புரிந்தது என்றார் அவர். மக்கள் தங்கள் கதைகளைச் சொல்ல உதவுகிறோம். அவர்கள் கூறியது என்ன? நாங்கள் செய்தது என்ன என்பதை பின்னால் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

2001–2002ல் விண்ட்ஸர்-ரோஸ் லாண்ட் ரோட்டரி சங்கத் தலைவராக ஜெனிஃபர் பணியாற்றினார். ஒவ்வொரு சந்திப்பின் போது அவர், ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைத் தேர்ந் தெடுத்து அவர்கள் எந்த வகையில் சங்கத்திற்கு முக்கியமான நபராக இருக்கிறார் என்று கூறுவார். ஒவ்வொரு வாரமும் மக்கள் அடுத்த நபர் யார் என்பதைத் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பார்கள் என்கிறார் அவர்.

உறுப்பினர்களை கவனித்துக் கொள்வதன் முக்கியத்துவம் தமக்கு ஒரு பாடமாக இருந்ததாக கூறிய அவர், அந்த முன்னுரிமை காரணமாகத் தான் இன்று நான் ரோட்டரி தலைவராக உயர்ந்திருக்கிறேன். நாங்கள் நகைச்சுவையாகவும் பேசுவோம், நல்ல பணிகளையும் செய்வோம். நாங்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டோம். சில நேரங்கள் மக்கள் இதில் சேருவதற்கும், தங்கியிருப்பதற்கும் புதிய

ஒரு ரொட்டேரியனுடன் ‘செல்ஃபி’.

காரணங்களையும் நாங்கள் கண்டுபிடிப்போம்.

அந்த சமயத்தில் அவரது மாவட்டத்தில் பெண் ஆளுநர்கள் இருந்ததில்லை. அவர் வயது 40க்கு கீழ் இருந்ததால் அவர் அதை அடைய முயற்சித்தார். ரோட்டரியில் எனது முழு ஆற்றலையும் செயல்படுத்த விரும்பினேன். நான் ரோட்டரியை மிகவும் விரும்பினேன் என்கிறார் அவர்.

2007–2008ல் ஆளுநராகப் பணியாற்றிய பிறகு அவர், உள்ளூரில் தொழில்-வர்த்தக சபை தலைவராகவும், விண்ட்ஸர் பல்கலைக்கழக நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்தார். ரோட்டரியின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருப்பதற்கு இது ஒரு முன்னோடியாக இருந்தது என்று கூறிய அவர், ஒவ்வொன்றும் ஒரு கட்டுமானத்துக்கு அடித்தளமாக இருந்தது என்றார்.

2009ம் ஆண்டு, ஜெனிஃபருக்கு 42 வயதான நிலையில் அவருக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது கண்டறியப் பட்டது. அதற்காக அவர் கீமோதெரபி மற்றும் கதிரியக்கச் சிகிச்சை பெற்றுவந்தார். அவர் சற்று குணமடைந்து வந்த நேரத்தில் 2010 ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற உள்வரும் மாவட்ட ஆளுநர்களுக்கான சர்வதேச கூட்டத்தில் பேச வருமாறு அழைக்கப் பட்டார். ‘‘உங்களால் முடிந்தால் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசுங்கள்’’ என்று அப்போது ரோட்டரி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரே கிளிங்கின்ஸ்மித் அவரை ஊக்கப் படுத்தினார். புற்றுநோயியல் நிபுணருடன் கலந்து பேசிய பின் நிகழ்ச்சியில் பங்கேற்க முடிவு செய்தார். புற்றுநோய் காரணமாக முந்தைய ஞாயிற்றுக்கிழமை தலைமுடியை இழந்திருந்த நான் விக் வைத்துக் கொண்டு நிகழ்ச்சியில் பங்கேற்றேன் என்கிறார் ஜெனிஃபர்.

நான் பேசியபோது சில தடுமாற்றங்கள் ஏற்பட்டன. ஆனாலும் எனது பேச்சு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. என் வாழ்க்கையில் அது ஒரு சிறு புள்ளியாகத் தெரிந்தபோதிலும் அதையாரும் பொருட்படுத்தவில்லை. அந்த நேரத்தில் அது எனக்கு தேவைப்பட்டது. எனக்கு மதிப்பு இருந்தது. என்னால் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பங்களிப்பை செய்ய முடிந்தது. நான் நம்பிக்கையற்று இருந்த நிலையில் அவர் எனக்கு முழு நம்பிக்கையை அளித்தார்.

எட்டு முறை கீமோதெரபி சிகிச்சைக்கும், 21 முறை கதிரியக்க சிகிச்சைக்கும் சென்றேன். என்னால் முடியாத நிலையில் எனது ஊழியர்கள் என் தொழிலை நடத்திச் சென்றார்கள். அதுவும் முக்கியமானது. எனது உடல்நிலை மேம்பட்டதும், நான் மீண்டும்

என்னை பணியில் ஈடுபடுத்திக் கொண்டதுடன் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும் கவனித்தேன். நான் முன்பிருந்ததைப் போலவே செய்திருந்தால், அவர்கள் அடைந்திருக்க வேண்டிய தலைமைப் பதவியை அல்லது வளர்ச்சியை நான் தடுத்திருக்கக் கூடும். எனவே நிறுவனத்தின் அன்றாட பணிகளை அக்குழுவினரிடமே விட்டுவிட்டு ரோட்டரியிலேயே முழு நேரத்தையும் செலுத்த முடிவு செய்தேன் என்றார் ஜெனிஃபர்.

நான் மீண்டும் புற்றுநோய் வருவதை விரும்பவில்லை. ஆனால், இவை அனைத்தும் நடக்கவில்லை என்றால், நான் இன்று இருக்கும் இடத்தில் இருந்திருக்கமாட்டேன் என்கிறார் அவர்.

கோவிட்-19 தொற்றின் போது மார்ச் 2020ல் உலகமே முடங்கிக் கிடந்தது. ஆனால், ஜெனிஃபர், ரோட்டரி நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக ஒரு மாத கால பயணம் மேற் கொண்டிருந்தார். இந்தியா வந்திருந்த அவர், பின்னர் ரோட்டரி அமைதி ஃபெல்லோ திட்டத்தில் பங்கேற்பதற்காக நேபாளம் சென்றார். தமது பயணத்தை நியூஸிலாந்தில் முடித்துக் கொண்டார். தென்-பசிபிக் தலைவர்கள் பயிற்சி கருத்தரங்களில் அவர் பங்கேற்றார். விமானத்திலிருந்து வீட்டிற்குச் செல்லும் வரை முகக்கவசம் அணிந்தபடி அவர் மக்களைச் சந்தித்தார். ஆனால், இப்போது மீண்டும் சில வாரங்களில் பயணத்தைத் தொடர்ந்து கென்யாவின் நைரோபியில் மாவட்ட மாநாட்டில் பங்கேற்க திட்டமிட்டார்.

பின்னர் திடீரென உலகில் மாற்றம் ஏற்பட்டது. கனடாவிற்கும் அமெரிக்காவுக்குமான எல்லை மூடப்பட்டதான செய்தி எனது நினைவுக்கு வந்தது. என் வாழ்நாளில் அதுபோன்ற செய்தியை நான் கேள்விபட்டதில்லை என்றார்.

ஜெனிஃபர் மற்றும் கிரயாசிச் இருவரும் அவர்கள் வீட்டிலிருந்து அரை மணிநேர பயணத்தில் லேக் எரி என்னுமிடத்தில் ஒரு குடிலில் தனிமைப்படுத்தி தங்கவைக்கப்பட்டனர். நான்

அதிகாலை 3 மணிக்கு விழித்துக் கொண்டு, என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள எனது செல்போனில் செய்திகளைத் தேடியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்த சமயத்தில் நாம் அனைவரும் எதுவுமே தெரியாமல் இருந்தது கொடூரமானது என்றார் அவர்.

அந்த சமயத்தில் ஜெனிஃபர் ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலராக இருந்தார். பேரிடர்காலத்தில் சேவைத் திட்டங்களுக்காக நிவாரண உதவி கோரி ரோட்டரியினர் பலரும் விண்ணப்பித்து காத்திருந்தது பெருமையாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. நான் அதிகம் செய்ய விரும்பினேன். முன்னதாக 2019ல் ஜாக் நிக்கோலாஸுடன் இணைந்து கோல்ஃப் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிதி திரட்டியதைப் போல ஏதாவது செய்ய நினைத்தேன். உடனே அப்போது ரோட்டரி தலைவராக இருந்த மார்க் மலோனியைத் தொடர்புகொண்டு எனது டெலிதான் யோசனையைத் தெரிவித்தேன்.

எனது யோசனைக்கு சில வாரங்களிலேயே பலன் கிடைத்தது. நான் ரோட்டரி உலகில் எனக்கிருந்த தொடர்புகள் மூலம் விடியோக்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டேன். உண்மையில் மக்களுக்காக நாம் என்ன செய்ய முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள நாங்கள் விரும்பினோம். நெருக்கடியான காலகட்டத்தில் நிதி திரட்டுவது முக்கியமானது தானே! ஆனால், அதைவிட முக்கியமானது உலகம் முழுவதும் உள்ள மக்களை இணைப்பதற்கும் நாங்கள் செயல்வீரர்கள் என்பதை காட்டுவதற்கு எங்களுக்கு ஒருவாய்ப்பு கிடைத்தது. நாங்கள் அனைவரும் எங்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தாலும், எங்களால் சிலவற்றைச் செய்ய முடிந்தது என்றார் ஜெனிஃபர். (இந்த நிகழ்ச்சிக்கு 65,000த்துக்கும் மேலானவர்கள் திரண்டிருந்தனர். ரோட்டரியின் முன்னாள் தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் முன்னாள் இயக்குநர் ஜான் ஸ்மார்ஜ் இருவரும் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சி மூலம் 5,25,000 டாலர் அறக்கட்டளைக்காக நிதி திரட்டப்பட்டது.)

விடியோ வழங்கியவர்களில் அன்னிலா கர்ராசிடோ என்பவரும் ஒருவர். 2019–20ல் மிஸ்ஸிஸிப்பியில் ரோட்டரி இளைஞர் பரிமாற்றக் குழுவில் மாணவராக இருந்தவர், தொற்றுக்காலத்தில் வெனீசுலாவில் உள்ள தமது வீட்டிற்கு திரும்ப முடியாமல் இருந்தார். அமெரிக்காவில் அவர் சிக்கித் தவித்தபோது, இளைஞர்களுக்கான சர்வதேச தொடர்புகள் மூலம் தனிமைப் படுத்தப்பட்ட இளைஞர் பரிமாற்ற திட்ட மாணவர்களுடன் அவர் உரையாடினார். ஆன்லைன் சந்திப்பிலான உரையாடலின்போது ஜெனிஃபர் அவரிடம், டெலிதான் நிகழ்ச்சிக்காக இளைஞர்கள்

மேலே: *ஜான் லென்னனின் 'இமாஜின்' பாடலை ரோட்டேரியன்களுடன் டான்வில், கலிபோர்னியாவில் பாடுகிறார்.*

இடது: *ஜெனிஃபர் தன் உதவியாளர் ப்ராட் ஹோவர்ட் மற்றும் அவர் மனைவி மார்ஸியாவுடன்.*

கீழே: *லாஸ் ஏஞ்சல்ஸ் ரோட்டேரியனருடன் ஜெனிஃபர் .*

பங்கேற்கும் ஒரு நிகழ்ச்சியை தயாரித்தளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு, அன்னிலா யார் இவர், எதற்காக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார்? என்று என் நிகழ்ச்சிக்கு தொகுப்பாளரிடம் கேட்டேன். அதற்கு அவர், ஜெனிஃபர், ரோட்டரியின் முதல் பெண் தலைவராக வருவார் என்று மக்கள் சொல்வதாகச் சொன்னார் என்று நினைவுகூர்ந்தார்.

இதைத் தொடர்ந்து அன்னிலாவிற்க்கும் ஜெனிஃபருக்கும் இடையே நல்ல தொடர்பு இருந்தது. அவர்கள் இருவரும் நேரில் சந்தித்ததில்லை என்றாலும் இருவருக்கும் இடையே உறவு பலப்பட்டது. அன்னிலா ஏற்பாடுசெய்த கூட்டத்தில் ஜென்னிஃபர் பேசினார். பின்னர் சர்வதேச மன்றக் கூட்டத்தில் பேச வருமாறு அன்னிலாவுக்கு அவர் அழைப்பு விடுத்தார். டிக்டாக் மூலம் ஜெனிஃபர் பற்றிய செய்திகளை அவர் பகிர்ந்துள்ளார். பின்னர் மெய்நிகர் மூலம் நடைபெற்ற ஒரு நேர்காணலில் தனது அலை பேசியை தூக்கிப்பிடித்து ஜெனிஃபரை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஸ்டிக்கர்களை வாட்ஸ்ஆப் மூலம் காட்டியுள்ளார். நான் அவரின் தீவிர ரசிகை என்று நினைக்கிறேன். அவரது செயல்பாடுகள் என்னை ஈர்க்கின்றன. நான் என்ன செய்ய நினைக்கிறேனோ அதை அவர் தொடர்ந்து செய்ய ஊக்குவித்து வருகிறார். நான் ஒரு தலைவராக இருந்தாலும் நானும் ஒரு பெண். ஒரு பெண்ணால் சிறப்பாகச் செயல்படமுடியும் என்றால் என்னாலும் அது முடியும் என்றார்.

மற்றவர்களை ஈர்க்கும் திறமை ஜெனிஃபரிடம் இருந்தது. அவர் லாஸ் ஏஞ்சலீஸ் சென்ற போது, ரோட்டரி மாவட்டம் 5170 சார்பில், கலிபோர்னியாவில், டான்வில்லி என்ற இடத்தில் ஒரு விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்றார். விருந்துக்கு முன்னதாக பெருநன்கொடையாளர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மேற்கு அமெரிக்கா பற்றிய விளக்கக் காட்சியின் போது ஜெனிஃபர் உரையாற்றினார். அப்போது கூட்டத்தினரிடையே பேசிய கூபர்டினோ ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஜோ ஹாமில்டன், ஜெனிஃபர் என்றாவது ஒருநாள் ரோட்டரியின் தலைவராக வருவார் என தமக்கு 2013லேயே தெரியும் என்றார். அந்த வார இறுதியில் அவர் பங்கேற்ற கூட்டங்களில் இது பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் அனைவரும் ஜெனிஃபருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள வரிசையாக காத்திருந்தனர். தொற்றுக்கு முன்பு இந்தியாவுக்கு வருகை தந்த பொழுது வாங்கிய இந்திய பாரம்பரிய உடையில் மிக நேர்த்தியாக ஜெனிஃபர் காட்சியளித்தார்.

அந்த வார இறுதியே ஒரு பந்தய ஓட்டம்போல் இருந்தது. கடந்த 48 மணி நேரத்தில் ஜெனிஃபர் இரண்டு விமானங்களில் பயணித்து மூன்று நகரங்களில் மூன்று முக்கிய நிகழ்ச்சிகளில் உரையாற்றினார். அது மட்டுமல்ல, ஏராளமான ரோட்டேரியன்களுடன் 'செல்ஃபி' எடுத்துக் கொண்டார். (பாப்பராசி போல இது ஒரு ரோட்டராசி என்கிறார் நகைச்சுவையுடன் கிரயாசிச்)

அப்படியிருந்தும் ஜெனிஃபர் ஒரு கருப்புத் திரையின் முன்பாக நின்று கொண்டு, தமது தலைமைத்துவ கருப்பொருளான 'இமாஜின் ரோட்டரி'யை விவரிக்கிறார். உக்ரைனில் போர் தீவிரம் அடைந்துள்ள நேரம் இது. மேலும் இந்த பேச்சு ரோட்டரியின் சமாதான முயற்சிக்கு அப்பால் தற்போது நடைபெறும் சம்பவங்களை இணைக்கிறது. நாம் இன்று செய்வதன் முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது என்றார்.

ஜெனிஃபர், மாவட்ட ஆளுநர்கள் மற்றும் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆளுநர்களை மேடைக்கு அழைத்து தலைமையேற்று உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கண்ணீரை வரவழைக்கும் ஜான் லென்னானின் "இமாஜின்" பாடலைப் பாடுகிறார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் கைகோர்த்து, ஜெனிஃபர் பதவிக் காலத்தில் ரோட்டரியின் சக்தியை கற்பனை செய்துகொண்டு ஆடினர்.

புகைப்படங்கள்:
மோனிகா லோஸின்ஸ்கா
© ரோட்டரி

Rotarians!

Visiting Chennai for business?

Looking for a compact meeting hall?

Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

Rotary at a glance

Rotary clubs	:	37,135
Rotaract clubs	:	11,304
Interact clubs	:	17,895
RCCs	:	12,203
Rotary members	:	1,209,069
Rotaract members	:	230,611
Interact members	:	411,585

As on June 15, 2022

Membership Summary

As on June 1, 2022

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians (%)	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	135	6,327	8.47	59	53	239
2982	77	3,485	7.23	47	98	73
3000	132	5,501	9.18	97	293	214
3011	121	4,772	27.01	75	120	36
3012	149	4,063	24.49	69	81	61
3020	80	5,026	7.58	33	168	350
3030	98	5,387	15.48	128	335	366
3040	108	2,715	14.18	57	83	181
3053	75	3,046	18.09	36	50	126
3054	171	7,284	20.22	106	195	566
3060	105	5,192	15.43	64	77	150
3070	124	3,421	15.96	47	43	59
3080	104	4,577	14.33	145	164	116
3090	93	2,478	6.46	45	92	127
3100	102	2,342	11.70	14	27	146
3110	142	3,870	11.78	14	19	106
3120	90	3,760	16.81	63	34	55
3131	142	5,779	24.43	120	244	143
3132	87	3,663	11.08	34	125	167
3141	112	6,500	27.40	142	187	103
3142	102	3,838	21.44	83	147	83
3150	115	4,615	12.89	142	144	118
3160	79	2,764	9.80	29	20	82
3170	144	6,662	15.69	96	255	173
3181	87	3,516	9.27	35	196	116
3182	86	3,554	9.54	44	128	104
3190	162	6,966	19.49	198	259	72
3201	158	6,283	10.14	125	103	81
3203	95	4,888	8.14	74	234	37
3204	68	2,347	9.12	23	31	13
3211	153	5,216	8.70	7	27	133
3212	131	5,001	12.06	82	216	153
3231	95	3,615	8.24	33	83	419
3232	169	8,230	18.63	128	223	96
3240	105	3,665	16.56	65	409	222
3250	105	3,986	20.75	64	74	185
3261	91	3,411	18.97	17	25	44
3262	129	4,308	14.69	75	121	164
3291	164	4,389	24.27	137	101	669
India Total	**4,485**	**176,442**		**2,852**	**5,284**	**6,348**
3220	73	2,311	16.01	90	139	75
3271	121	2,477	17.40	127	185	25
3272	161	1,824	17.49	70	22	47
3281	308	7,678	17.80	276	154	207
3282	182	3,853	10.98	202	49	47
3292	155	6,125	17.98	174	136	127
S Asia Total	**5,485**	**200,710**		**3,791**	**5,969**	**6,876**

Source: RI South Asia Office

பதவிக்காலத்தின் சாதனைகளுக்காக உழைத்தவர்களுக்கு நன்றி: மேத்தா

ரஷீதா பகத்

நான் திரும்பிப் பார்க்கையில் ஆயிரக்கணக்கான காட்சிகள் என் கண் முன் பளிச்சிடுகின்றன. ரோட்டரிக்கு அது அற்புதமான ஆண்டாக இருந்தது. மாற்றத்தை உருவாக்கும் என் அருமைச் சகோதரர்களே மேலும் வளர்வோம் அதிக சேவை செய்வோம் என்னும் உயர்ந்த அபிலாஷைகளுக்கு ஏற்ப வாழ்ந்துள்ளீர்கள். நாம் பல ஆண்டுகளாக இல்லாதவகையில் வேகமாக வளர்ந்துள்ளோம். அதுவும் தொற்றுக்காலத்தில். பல ஆண்டு களாக குறைந்து வரும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை ரோட்டேரியன்கள் தடுத்து நிறுத்தி, கடுமையாக உழைத்து ஒரே ஆண்டில் 45,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளனர் என்றார் ஹூஸ்டனில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டின் தொடக்க அமர்வில் உரையாற்றிய ரோட்டரித் தலைவர் சேகர் மேத்தா.

RI *தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி.*

இறுதியாக, மூன்று ஆண்டுகளில் நாம் ஒருவரை ஒருவர் மாநாட்டின் மூலம் நேரில் சந்திக்க முடிகிறது. இது நம்பமுடியாதது, ஆனால், நாம் எல்லோரும் இங்கு கூடியிருந்து மாநாட்டு நிகழ்ச்சிகளை உற்சாகமாக கண்டுகளிக்கிறோம். பழைய நண்பர்களையும், புதியவர்களையும் நேருக்கு நேர் சந்திக்க முடிகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல முக்கியத் தலைவர்களின் பேச்சைக் கேட்க நமக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ரோட்டரியின் எதிர்காலத்தைப் பற்றி நாம் விவாதிக்கும் அதே நேரத்தில், கடந்த காலத்தில் ரோட்டரி செய்துள்ள சாதனைகளையும் நாம் திரும்பிப் பார்க்க வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த ஆண்டு உறுப்பினர்கள் வளர்ச்சி வலுவாக உள்ளது. குறிப்பாக இந்தியாவில் உறுப்பினர்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. அதற்காக ரோட்டேரியன்களுக்கு எனது பாராட்டுகள். ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டு வாருங்கள் என்ற தாரக மந்திரம் நன்கு வேலை செய்துள்ளது. ஓராண்டில் மாவட்ட ஆளுநர்கள் கூடுதலாக 20,000 உறுப்பினர்களைச் சேர்த்துள்ளனர். இதில் 75 சதவீதம் ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டுவாருங்கள் முயற்சி மூலம் பெறப்பட்டவை. ஐந்து ஆண்டுகளில் பெறவேண்டிய வளர்ச்சியை நாம் ஓராண்டில் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கொரியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களிலும் அபார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஐரோப்பாவில் கொசோவா மற்றும் அல்பேனியாவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளோம். உலக அளவில் வளர்ச்சியில் கவனம் செலுத்தினால், உறுப்பினர்கள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க முடியும் என்று உறுதியாக நம்புவதாக சேகர் மேத்தா தெரிவித்தார்.

வளர்ச்சியை பதிவு செய்ததுடன் சில சிறப்புத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திய ரோட்ராக்டர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

பலத்த கைதட்டல்களுக்கு இடையே பேசிய ரோட்டரித் தலைவர் சேகர் மேத்தா, ரஷிய தாக்குதலால் பாதிக்கப்பட்ட உக்ரைன் மக்களுக்கு உதவுவதற்காக ரோட்டேரியன்கள் லட்சக்கணக்கான டாலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். அருகில் உள்ள நாடுகளைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் திறந்த மனதுடன் உதவிசெய்துள்ளனர். போரினால் இடம்பெயர்ந்த மக்களை நானும் ராஷியும் போலந்தில் சந்தித்தோம். அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரோட்டேரியன்கள் செய்து வரும் உதவிகளையும் நேரில் பார்த்தோம்.

தனது நாட்டிற்காகப் போராட கணவனை விட்டுவிட்டு குழந்தைகளுடன் வெளியேறிய உக்ரைன் நாட்டைச் சேர்ந்த ஓல்காவின் கதை மனதைத் தொடும் வகையில் இருந்தது. ஓல்கா ஒரு பெண் மட்டுமல்ல, பல பெண்களின் கதையும் இதுதான்.

உலகம் முழுவதிலுமான சேவைகளை பட்டியலிட்ட சேகர் மேத்தா, ஒரு உதாரணத்தை சுட்டிக் காட்டினார். தாம் கொரியாவில் இருந்தபோது பூமியை காப்பாற்ற ரோட்டேரியன்கள் கைகோர்த்து செயல்பட்டது வியப்பை அளித்ததாக அவர் குறிப்பிட்டார். 10 ரோட்டேரியன்கள் மற்றும் 10 ரோட்ராக்டர்கள் என மொத்தம் 20 பேர் 24 மணிநேரம் கடலில் மூழ்கியவாறு 40 டன் குப்பைகளை வெளியேற்றியதாகவும் அவர் கூறினார். ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதாகவும், சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிஸிஸ் சிகிச்சை மையங்கள், இரத்த வங்கிகள், கண் மருத்துவ மனைகள் என பல்வேறு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ள தாகவும், குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் கூறினார். ஜாம்பியாவில்

RI *தலைவர் மேத்தா, ராஷி,* PRID *ப்ரின் ஸ்டைல்ஸ், ஆர்பி என்னும் மாநாட்டின் சின்னத்துடன்.*

RI *தலைவர் மேத்தா மற்றும் அவரது குடும்பத்தினர்.*

மலேரியா நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் நடந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா மற்றும் பிறநாடுகளிலும் அடிப்படைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுத்தறிவு இயக்கத்தை செயல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் தொற்றுக்காலத்தில் எழுத்தறிவு திட்டம் குழந்தைளின் வீடுகளுக்கே எடுத்துச் செல்லப்பட்டது. இதன் மூலம் லட்சக்கணக்கான குழந்தைகள் பலன்பெற்றனர்.

நமது அமைப்பின் உண்மையான திறனுக்கு எடுத்துக்காட்டு மகளிர் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள். பாலின சமத்துவத்தை ஏற்படுத்து வதற்கான முயற்சியை ரோட்டரி முன்னெடுத்துள்ளது. இளைஞிகள் மற்றும் பெண்களின் நிலையை மேம்படுத்தாத நாடு உலகில் இல்லை என்றே நான் நம்புகிறேன். மனிதநேயத்துடன் செயல்படும் பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். மாதவிடாய் சுகாதாரத் திட்டம் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் பெரும்பாலான பெண்கள் சானிடரி நாப்கின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் நான் சார்ந்த ரோட்டரி மாவட்டம், சங்கத்தில் (கொல்கத்தா மாநகர ரோட்டரி சங்கம்) பெண்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி அளித்து வருகிறது. இப்படி சிறப்பு பயிற்சி பெற்ற பெண்களில் சிலரை கொல்கத்தா போலீஸார், தங்கள் போலீஸ் படையில் சேர்த்துக் கொண்டுள்ளனர்.

உணர்ச்சிப் பெருக்குடன் பேசிய ரோட்டரித் தலைவர் மேத்தா, கடந்த மார்ச் 8ம் தேதி சர்வதேச மகளிர் தினத்தன்று எகிப்பதைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை வெகு அழகாக காட்சிப் படுத்தியது மனதில் நிற்கிறது. அங்கு நாங்கள் 21 வயதான பார்வையற்ற பெண்ணை சந்தித்தோம். அவரைப் போன்ற மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள ரோட்டேரியன்கள் திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து வருகின்றனர். என்னைப் பொருத்தவரை இதுதான் மகளிர் மேம்பாடு என நினைக்கிறேன்.

ஹைதராபாதில் நடைபெற்ற தலைமைத்துவ மாநாட்டில் பல சேவைத் திட்டங்களைப் பார்த்தேன் பாதுகாப்பாக பள்ளிக்குச் சென்றுவர 500 மாணவிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. மேலும் தையல் பயிற்சிபெற்ற 500 பேருக்கு அவர்கள் சுயதொழில் செய்து சம்பாதிக்கும் வகையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. பள்ளிக் குழந்தைகள் உட்கார்ந்து படிப்பதற்காக 500 பெஞ்சுகள் வழங்கப்பட்டன. இதில் 1,500 மாணவிகள் அமர்ந்து பாடங்களை கவனிக்க முடியும். அவர்கள் பள்ளிகளில் தரையில் அமரவேண்டியதில்லை. அவர்கள் உடல்நலம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்க பெண்கள் படிக்கும் பள்ளிகளில் 100 கை கழுவும் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்த மாணவிகளுடன் நான் உரையாடிய போது, அவர்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்து வதற்காக சேவை செய்ய முடிந்ததை பாக்கியமாக கருதினேன்.

கொல்கத்தாவைச் சேர்ந்த ஆசிரியரான பையாலி போஷக் என்பவரைவிட வேறு யார் ரோட்டரிக்கு பிராண்ட் அம்பாசிடராக இருக்க முடியும்? ரோட்டரியின் ஆதரவில் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய அவர், மகளிர் மேம்பாட்டுக்காக ரோட்டரி சேவை செய்து வருகிறது என்கிற தகவலை உலகுக்கு உணர்த்தியிருக்கிறார். மகளிர் மேம்பாடு என்பது ஜோதியாக ஒளிவீசுகிறது. அந்த தீபச்சுடர் இப்போது ஒரு பெண்ணின் கையில் (உள்வரும் தலைவர் ஜெனிஃபர்

ஜோன்ஸ்) கிடைத்திருப்பதன் மூலம் மேலும் பிரகாசிக்கட்டும். மகளிர் மேம்பாட்டுக்காக அவர், யுனிசெப் உடன் புதிய கூட்டாண்மை அமைத்துச் செயல்படுவார்.

ரோட்டரிக்கு சவால்கள் வரும்போது அதை நாங்கள் எதிர்கொள்ளத் தயாராகிறோம். போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் நாம் முன்பைவிட இப்போது முடிவை நெருங்கிவிட்டோம். போலியோ ஒழிப்பு நடவடிக்கை 3 தசாப்தங்களாக தனியார்-அரசு கூட்டணி மட்டுமல்ல, லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை காப்பாற்றுவதற்கான ஒரு பெரு முயற்சி. இந்த உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

ரோட்டரியினர் அமைதிக்கான நடவடிக்கையின் முன்னோடிகள். நமது போலியோ ஒழிப்புத் திட்டம் மூலம் போரைத் தவிர்ப்பது போன்ற நல்ல செயலைச் செய்துள்ளோம். முதல் உலகப்போரில் நாம் 20 மில்லியன் மக்களை இழந்து விட்டோம். போலியோ திட்டத்தின் மூலம் 19 மில்லியன் மக்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளோம். உலகில் அமைதியைக் கொண்டுவர இதைவிட சிறந்த உதாரணமாக எது வாக இருக்க முடியும்? என்று மேத்தா கேட்டார். ஒட்டுமொத்த போலியோ ஒழிப்பில் இன்னும் சவால்கள் நீடிக்கின்றன. அதேநேரத்தில் அவற்றை வெல்வதற்கான உத்திகளும் நம்மிடம் உள்ளது. ஆனால், இந்த பந்தயத்தில் இறுதிக்கோட்டை எட்டுவதற்கு உங்களது ஒத்துழைப்பு தேவை.

ரோட்டரி புதிய பகுதியில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் சவாலையும் ஏற்றுள்ளது. ஸ்காட்லாந்தில் நடைபெற்ற பருவநிலை உச்சிமாநாட்டில் நூற்றுக்கும் மேலான நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். நான் இணைந்து தலைமையேற்று நடத்திய விவாதத்தில் காலநிலை மாற்றத்தை தணிப்பதிலும், தகவமைப்பதிலும் சதுப்பு நிலங்கள் முக்கிய பங்கு வகிப்பது குறித்து பேசப்பட்டது. நாங்கள் நடத்திய விவாதங்கள் செயலுக்கு வழிவகுக்கும் என்று முடிவுசெய்தபின், ரோட்டரி இப்போது 10 நாடுகளில் சதுப்பு நிலங்களை அமைப்பதற்குத் தயாராக உள்ளது. இது பூமியை பாதுகாக்கும் நடவடிக்கையாகும். பத்து நாடுகளில், ஐந்து நாடுகளுக்கான உலகளாவிய மானிய முன்மொழிவுகள் ஏற்கெனவே சமர்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் மேத்தா.

தமது பதவிக்காலத்தின் சாதனைகளுக்கு ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்ராக்டர்களே முக்கிய காரணம் என்று மேத்தா புகழாரம் சூட்டினார். உங்கள் கடின உழைப்புக்கும், மேலும் வளர வேண்டும், மேலும் சேவைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துக்கும் நன்றி. உலகம் முழுவதும் 30 நாடுகளின் தலைவர்களுடன் நானும் ராஷியும் உரையாடியது குறித்து பெருமை கொள்கிறோம்.

உகாண்டாவைச் சேர்ந்த 100 குழந்தைகளுக்கு ரோட்டரி மூலம் இதய அறுவைச்சி கிச்சை நடத்தப்படும் என்பதை ரோட்டரியின் சார்பாக அந்த நாட்டு அதிபரிடம் உறுதியளித்தேன். அந்த உறுதிப்பாட்டின்படி செயல்பட்டு வருகிறோம். ஏற்கெனவே 28 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்துள்ளது. RID 3030 செஷல்ஸ் நாட்டைச் சேர்ந்த 30 குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை செய்ய முன்வந்துள்ளது. பல்வேறு கல்வி, இதய அறுவைச்சிகிச்சை, செவிலியர்கள் திறன் வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கண் மருத்துவமையங்கள், டயாலிஸிஸ் மையங்கள் ஏற்படுத்தவும் ரோட்டரி உறுதிபூண்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள 50 நாடுகளின அரசாங்கத்துக்கும் நாங்கள் அளித்துள்ள உறுதிமொழியை இணைந்து செயலாற்றி நிறைவேற்று வோம். ரோட்டரிக்கு மேலும் பெருமை சேர்ப்போம் என்றார் சேகர் மேத்தா.■

ரோட்டரியிற்கு பிரதமர் மோடியின் பாராட்டு

ரஷீதா பகத்

ஹூஸ்டன் மாநாட்டின் தொடக்க அமர்வில் பேசிய நட்சத்திர பேச்சாளர்களில் ஒருவரான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, விடியோ உரைமூலம் ரோட்டரியின் முக்கிய கொள்கைகள், குறிக்கோள்கள், இந்தியாவில் அதன் வளர்ச்சி மற்றும் உலக அளவில் அதன் தாக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டுப் பேசினார்.

இந்த வளர்ச்சி அல்லது முன்னேற்றங்கள் உலக அளவில் எந்த அளவுக்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை உதாரணத்துடன் அவர் விளக்கினார். இந்தியா அதிக மக்கள்தொகை கொண்ட ஒரு நாடு. இந்தியாவால் கோவிட் தொற்றை எதிர்த்துப் போராடி வெற்றிபெற முடியாது என்று மக்கள் பேசினர். ஆனால், இந்திய மக்கள் அது தவறு என்பதை நிரூபித்து விட்டனர்.

நமது நாட்டு மக்களுக்கு ஏறக்குறைய 2 பில்லியன் கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இதேபோல 2025ம் ஆண்டுக்குள் காச நோயை (TB) ஒழிக்க செயலாற்றி வருகிறோம். அதாவது சர்வதேச இலக்கான 2030க்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே இதை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய இந்திய நம்பிக்கைகள் மற்றும் ரோட்டரியின் சுயநலமில்லாத சேவை நெறிமுறைகளை இணைத்துப் பேசிய பிரதமர் மோடி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நமது துறவிகளும், ஞானிகளும் அனைத்து மனித உயிரினங்களும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ பிரார்த்தனை செய்தனர். நமது கலாசாரத்தில் சிறந்த ஆன்மாக்கள் மற்றவர்கள் நல்வாழ்வுக்காகவே உழைத்து வருகின்றனர், வாழ்ந்து வருகின்றனர். மற்றவர்கள் நலனுக்கான வாழ்க்கை என்ன என்பதை புத்தரும், மகாத்மா காந்தியும் இந்த மண்ணில் செயலில் காட்டியுள்ளனர்.

இன்றைய உலகில் நாம் எல்லோரும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கிறோம். ஒருவருடன் ஒருவர் தொடர்பில் இருக்கிறோம். ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட உலகத்தில் வாழ்கிறோம். இந்த உலகில் எந்த ஒரு அணுவும் முழு உலகத்தை எடுத்துச் செல்ல முடியாது என்று சுவாமி விவேகானந்தர் சரியாகச் சொன்னார். நமது கிரகம் வளமானதாகவும், நிலையானதாகவும் இருக்க வேண்டுமானால் தனியார், அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் இணைந்து செயல்பட வேண்டியது முக்கியமானது.

ரோட்டரியின் செயல்பாடுகள்

குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், பூமியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு விஷயங்களில் ரோட்டரி கவனம் செலுத்தி வருகிறது. நிலையான வளர்ச்சிதான் இன்றைய தேவை. பல நூற்றாண்டுகள் பழமையான நமது நெறிமுறைகளால் ஈர்க்கப்பட்டு 1.4 பில்லியன் இந்தியர்கள் இயற்கையை நேசிப்பதுடன், நமது பூமியை தூய்மையாகவும் பசுமையாகவும் மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். புதுப்பிக்கதக்க எரிசக்தி மீது இன்று அனைவரது கவனமும் திரும்பியுள்ளது. அந்த வகையில் சர்வதேச சோலார் (சூரியசக்தி) கூட்டணியை உருவாக்க இந்தியா முன்னணியில் உள்ளது.

மக்களுக்கு சுத்தமான குடிநீர், சுகாதார வசதிகளை செய்து தருவதில் ரோட்டரி தீவிரமாக செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது. எனது தலைமையிலான மத்திய அரசு தூய்மை இந்தியா திட்டத்தை 2014ல் தொடங்கியது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் ஏறக்குறைய முழுமையான சுகாதாரத்தை வழங்கியுள்ளோம். இந்த திட்டம் ஏழைகளுக்கு, குறிப்பாக பெண்களுக்கு பயனுள்ளதாக இருந்தது.

ரோட்டரிக்கும் இந்தியாவும் இடையே இணையான மற்றொரு செய்தியையும் மோடி சுட்டி க்காட்டினார். பனிப்போருக்குப் பிறகு வளர்ந்து வரும் உள்ளூர் பொருளாதாரங்களுக்கான உங்கள் செயல்பாடு பொருத்தமானது. "ஆத்மநிர்பார்" இயக்கம் மெல்ல மெல்ல இந்தியாவில் உருவெடுத்து வருகிறது, இதன் நோக்கம் இந்தியா தற்சார்புள்ள நாடாக மாறுவதுடன், சர்வதேச வளர்ச்சி க்கும் பங்களிப்பதாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பில் உலகில் இந்தியா வேகமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. பல சர்வதேச சவால்களுக்கு நாம் தீர்வுகாண முயற்சித்து வருகிறோம். இவை சில உதாரணங்கள் மட்டுமே என்று குறிப்பிட்ட பிரதமர் மோடி, இந்தியாவின் முயற்சிக்கு ரோட்டரி குடும்பத்தினர் முழு அளவில் ஆதரவு அளிக்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சர்வதேச யோகாதினத்தை அனுசரிப்பதில் இந்தியர்களுடன் உலகளாவிய ரோட்டரி சமூகத்தினர் இணைந்துகொள்ள வேண்டும் என்று மோடி வலியுறுத்தினார். ரோட்டரி குடும்பத்தினர் யோகா தினத்தை பெரிய அளவில் அனுசரித்து அதை உறுப்பினர்களிடையே மேம்படுத்த முடியுமா? என்று கேட்ட பிரதமர், அப்படிச் செய்தால் அதன் பலனை நாம் காணமுடியும் என்றார்.

ரோட்டேரியன்கள், தங்களின் தனிப்பட்ட துறைகளில் வெற்றி கண்டவர்கள். பூமியை சிறந்த வாழ்விடமாக மாற்ற முன்வந்ததற்காக ரோட்டேரியன்களுக்கு வாழ்த்துக் களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் பிரதமர் மோடி.■

நாக்பூரில் பெண்களுக்கு திறமை வளர்க்கும் பயிற்சி

ரோட்டரி செய்திக் குழு

RC நாக்பூர் விஷன், RID 3030 இன் சுந்தரி திட்டம், உள்ளூர் அறக்கட்டளையான சிட்னாவிஸ் மற்றும் மஹாராஷ்டிரா அரசாங்கத்தால் நடத்தப்படும் பெண்கள் அதிகார மளிக்கும் திட்டமான மஹிலா ஆர்த்திக் விகாஸ் மஹாமண்டலுடன் இணைந்து 100 பெண்களுக்கு அழகுப் பராமரிப்பில் பயிற்சி அளித்து வருகிறது. நாக்பூருக்கு அருகிலுள்ள நான்கு கிராமப்புற மையங்களில் இந்த மூன்று மாத திட்டம் நடத்தப் படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படும் ஐந்து பேட்ச்களில் ஒன்றின் பெண்கள் கோவிட் நோயால் தங்கள் குடும்ப தலைவர்களை இழந்தவர்கள், மற்றொரு குழுவில் 20 பெண்கள் செவித்திறன் குறைபாடுடையவர்கள் என்று சங்கத்தலைவர் விக்ரம் நாயுடு கூறினார். வாடிக்கையாளருடன் நல்லுறவை உருவாக்க பெண்களுக்கு மொழி மற்றும் மென்திறன்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சிட்னாவிஸ் வாடாவில் சுந்தரி திட்ட பயனாளிகள்.

சுந்தரி திட்டத்தில் பயிற்சி பெற்ற முதல் இரண்டு பேட்ச்களை சேர்ந்த 40 பெண்கள் DG ரமேஷ் மெஹரிடமிருந்து பாடநெறி நிறைவு சான்றிதழ்களைப் பெற்றனர். இந்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வீட்டிலேயே அழகு சேவைகளை வழங்கும் ஸ்டார்ட்-அப் நிறுவனத்துடன் இணைந்து சங்கம் செயல்படுகிறது.■

ஹூஸ்டனில் தெற்காசிய ரோட்டரி

RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் தன் குடும்பத்தினர்.

RI தலைவர் மேத்தா மற்றும் RIPN கோர்டன் மெக்கினல்லி ரோட்டரி கொடியை அசைக்க அருகில் RI இயக்குனர்கள் மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ், RIDE முகமது ஃபயிஸ் கிட்வாய் ஆகியோரும் உள்ளனர்.

வலதிலிருந்து: PRIP K R ரவீந்திரன், வானதி, PDG ஜான் மற்றும் மீரா டேனியல், RIPE ஜெனிஃபர் ஜோன்ஸ், அவர் கணவர் DGND நிக் க்ரயாசிச், RID A S வெங்கடேஷ், PRIP ராஜேந்திர சாபூ, PDG சாம் படிபன்ட்லா மற்றும் உஷா சாபூ.

விருந்து

மீரா RIPE ஜெனிஃபரிற்கு நினைவு பரிசு அளிக்கிறார். உடன் PDG ஜான் டேனியல், DGND க்ரயாசிச், RIDE கிட்வாய் மற்றும் அவர் மனைவி உஸ்மா ஆகியோரும் உள்ளனர்.

RI தலைவர் மேத்தா, ராஷி மற்றும் அவர்களின் பேரன் வீர்.

PRID கமல் சங்வி, வினிதா வெங்கடேஷ், சோனல் சங்வி மற்றும் அமிதா கோட்பாகி.

1.PRID சங்வி மற்றும் சோனல்; 2.RIPE ஜெனிஃபர் மற்றும் க்ரயாசிச்; 3.RI தலைவர் மேத்தாவுடன் ராஷி, PDG டேனியல், RID கோட்பாகி, PDG படிபண்ட்லா மற்றும் RIDE கிட்வாய்; 4.PRIP ரவீந்திரன், PDG ரவி வட்லாமணி, RID வெங்கடேஷ் மற்றும் வினிதா; 5.உஷா மற்றும் PRIP ராஜேந்திர சாபூ, சோனல் மற்றும் அமிதா. 6.PRIP கல்யாண் பானர்ஜியுடன் TRF அறங்காவலர் அஜிஸ் மேமன். 7.PDG J P வியாஸின் மனைவி நீட்டா, நீலு மற்றும் DGE லலித் கன்னா (D 3012); TRF அறங்காவலர் (தேர்வு) பரத் பாண்ட்யா; DGE நீட்டு க்ரோவர் (3040), மாதவி பாண்ட்யா; PDG ராஜீவ் சர்மா, அவர் மனைவி ரேஷ்மி மற்றும் PDG ஆஷிஷ் அஜ்மேராவின் மனைவி Dr ரானு.

7

6

3

5

4

1.RIPE ஜெனிஃபர் ஜோன்ஸ்; 2.TRF அறங் காவலர் குலாம் வஹன்வதியுடன் RID 3141 DGE சந்திப் அகர்வல்லா மற்றும் அவர் மனைவி மாலினி; 3.RIDE கிட்வாய், RID A S வெங்கடேஷ் மற்றும் வினிதா; 4.PRIP பாரி ரஸ்ஸின் மற்றும் அவர் மனைவி எஸ்தர்; 5.RIDN அனிருதா ராய் சௌத்ரி மற்றும் அவர் மனைவி ஷிப்ரா; 6.RIPN கோர்டன் மெக்கினல்லி மற்றும் அவர் மனைவி ஹீத்தரை RID 3160 DGE ஓமினா சதீஷ் பாபு மற்றும் அவர் மனைவி A சுலோச்சனா, RID கோட்பாகி மற்றும் PDG டேனியல் முன்னிலையில் கௌரவிக்கின்றனர்; 7.(இடதிலிருந்து) PDGs கிஷோர்குமார், படிபண்ட்லா, PRIP பானர்ஜி மற்றும் RIDN சௌத்ரி; 8.RID கோட்பாகியுடன் RIDE ட்ரு கெஸ்லர் தன் குடும்பத்தினருடன்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

RID மகேஷ் கோட்பாகி நெடுஞ்சாலை மற்றும் சாலை பாதுகாப்பு துறை அமைச்சர் ஜெனரல் V K சிங்கிற்கு நினைவு பரிசு வழங்குகிறார். உடன் RI தலைவர் சேகர் மேத்தாவும் உள்ளார்.

உலக அமைதிக்கு ரோட்டரியின் பங்கு

ரஷீதா பகத்

ஹைதராபாத் தலைமைத்துவ மாநாட்டில் பேசிய முக்கியப் பிரமுகர்களில் முன்னாள் ராணுவத் தலைமைத் தளபதியும், நெடுஞ் சாலைகள் மற்றும் சாலைப்பாது காப்புத்துறை அமைச்சருமான V K சிங்கும் ஒருவர். அவர் பேசுகையில், ''அமைதிதான் ஒரே தீர்வு'' என்றார். ரோட்டேரியன்கள் மற்றும் அவர்களின் ஒருங்கிணைந்த தன்மைகள், செயல்பாடுகளை அவர் பாராட்டினார். இந்தியாவில் நடைபெற்ற ரோட்டரி சந்திப்பு நிகழ்ச்சிகள் பலவற்றில் தாம் கலந்து கொண்டதாகவும், ரோட்டரியினர் செய்துள்ள சேவைகள் பற்றி நன்கு அறிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். நீங்கள் பாரபட்ச மின்றியும், வெளிப்படைத் தன்மையுடனுடனும் திட்டங்களை முறையாகச் செயல்படுத்துவதால் சமூகத்தில் உள்ள மக்களின் நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கிறீர்கள். இது ரோட்டரி கலாச ரத்தின் தனித்துவமான ஒன்று என்றார்.

காஜியாபாதில் செயல்படுத்தப் பட்ட ஒரு திட்டத்தை அவர் குறிப் பிட்டார். காஜியாபாத் நகரில் உள்ள அரசுப் பள்ளி மாணவிகள் 2,000 பேருக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டமாகும் அது. நான் ரோட்டேரியன் ஒருவரிடம், இத்திட்டத்துக்கான பயனாளிகளை எப்படி அடையாளம் காண்கிறீர்கள் என்று கேட்டேன். இது பற்றிய தரவுகளை சேகரிக்க எங்களுக்கு ஒருமாதம் ஆயிற்று. முறையான விசாரணைக்குப் பிறகே பயனாளி களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சைக்கிள் வழங்குகிறோம் என்றார். அவரது பதில் எனக்கு திருப்தி அளித்தது. வருமானவரித் துறையினர், வருவாய்த்துறையினர் ஆய்வுபோல் இது உள்ளது என்றார்.

ஒவ்வொரு சமூகத்தையும் சரியான திசையில் வழிநடத்த சரியான நபர்கள் தேவை. ஒரு சிங்கத்தின் தலைமையிலான ஆட்டு மந்தை, சிங்கத்தைப் போல் செயல்படும் என்று ராணுவத்தில் சொல்வார்கள். நீங்கள் வீடு திரும்பும்போது ரோட்டேரியனாக இருப்பதற்கு உங்களுக்கு அதிர்ஷ்டம் வேண்டும் என்கிற செய்தியை எடுத்துச் செல்லுங்கள். இதன் மூலம் சமூகத்தை சரியான திசையில் வழிநடத்த முடியும். ரோட்டரி இதைச் செய்தால் நாட்டில் வறுமை ஒழிப்பு, திறன் வளர்ப்பு, தொழில் முனைவோரை உருவாக்கி சமூகத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட துறைகளில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்துவிடும்.

உலகில் இன்று பலவிதமான வாய்ப்புகள் உள்ளன. ஒருவரையொருவர் சண்டையிட்டுக் கொள்வதால் பல மணி நேரங்கள் வீணாகின்றன. நாம் ஒன்றுபட்டு செயல்பட்டால் நாம் முன்னேறுவது மட்டுமல்ல, நாட்டையும் முன்னேற்ற முடியும் என்றார். நமது ராணுவத்திடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? உங்களிடமிருந்து ராணுவம் என்ன எதிர்பார்க்கிறது. இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்றார்.

இந்திய ராணுவத்தில் 32 ஆண்டுகள் பணியாற்றியவன் என்ற முறையில், ஆயுதப் படையினர் முறையாகப் பயிற்சி பெற்று, நெறி முறைகளைப் பின்பற்றி தேசத்துக் காகவும், நாட்டு மக்களுக்காகவும் தியாக உணர்வுடன் செயலாற்றி வருகிறார்கள் என்பதை என்னால் பெருமையாக கூறிக்கொள்ள முடியும். உலகிலேயே இந்திய ராணுவத்தில்தான் அதிக அளவில் அதிகாரிகள் உயிரிழக்கிறார்கள். ஏனெனில் இந்திய ராணுவத்தில் பணியாற்றும் அதிகாரிகள்தான் படைக்கு தலைமையேற்று எதற்கு பயப்படாமல் எதிரிகளிடமிருந்து தேசத்தை பாதுகாக்க துப்பாக்கி குண்டை சந்திக்கிறார்கள்.

மாநாட்டில் பங்கேற்ற மாநிலங்களவை உறுப்பினரும் PDG-யுமான விவேக் தன்கா பற்றி குறிப்பிட்ட அமைச்சர், விவேக் தன்கா எனக்கு குடும்ப நண்பர். நான் அரசியலுக்கு வந்தபோது அவரைப் போன்றவர்கள் என்னிடம், அரசியல் உங்களுக்கு சரிபட்டு வருமா என கேள்வி எழுப்பினர். ராஜஸ்தானில் கடும் வெப்பத்திலும், சியாச்சினில் கடும் குளிரிலும் நாம் மாறுபட்ட சூழலில் பணிபுரிகிறோம். அதேபோல அரசியலும் மாறுபட்ட சூழ்நிலை கொண்டது. அதைப் புரிந்துகொண்டு, மக்களுக்காக சேவை செய்கிறோம் என நினைத்து நாம் செயல்பட்டால் அரசியல் வாழ்க்கை கடினமானது அல்ல என்றார்.

இன்றைய உலகில் வன்முறையும், மோதல்களும் அதிகரித்து வருவது குறித்து பேசிய ஜெனரல் சிங், நிகழும் அனைத்து மோதல்களிலும் ஒன்று நிச்சயம். உண்மைதான் மிகப்பெரிய இழப்பாகும். தவறான தகவல்கள், பிரசாரம் மற்றும் வார்த்தைப் போர்களால் எதையும் உறுதியாக நம்பமுடியவில்லை. எனவே சரியான முடிவை எடுப்பது கடினமாகும்.

உக்ரைன் மீதான ரஷிய தாக்குதல் சமயத்தில் பிரதமர் நரேந்திர மோடி, இருதரப்பினருடனும் பேச்சு நடத்தி இந்திய மாணவர்களை பத்திரமாக மீட்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டார். யேமனிலும் நான் இதைக் கண்டேன். ஏனெனில் அவர் சவூதி மன்னருடன் பேசி, இந்திய மக்கள் வெளியேற தினசரி 2 அல்லது 3 மணி நேரம் அவகாசம் கேட்டார். இதைத் தொடர்ந்து இந்திய மக்கள் பாதுகாப்பாக அழைத்துவரப்பட் டனர். ஒரு தேசம் என்ற வகையில் நாம் இதர நாடுகளுடன் நல்லுறவு வைத்திருந்தால் மோதல்கள் போன்ற சோதனையான கட்டத்தில் நமது மக்களை பத்திரமாக மீட்க முடியும்.

உலகில் 193 நாடுகளில் இந்தியர்கள் உள்ளனர். நாம் தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளோம். குண்டுகள் நம்மீது விழும்போதுதான் நாம் வெளியேற நினைக்கிறோம். பெற்றோர்கள் மற்றும் வேறு நபர்களிடமிருந்து வரும் அறிவுரைகளை நாம் கேட்பதில்லை. கடைசி காலகட்டத்தில் தான் நாம் செயல்படுகிறோம் என்றார்.



அமர்வுக்கு தலைமை தாங்கிய RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி பேசு கையில், செயல்படாத அமைதியை போதிப்பதில் ரோட்டரிக்கு நம்பிக்கை இல்லை. மாறாக நிலையான அமைதிக்காக பாடுபட மக்களை ஊக்குவிப்பதன் மூலம் சில அமைதி நடவடிக்கைகளை ரோட்டரி முன்னெடுத்துள்ளது. இலங்கையில் அல்லது ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற பல போர்களின்போது, மோதல்களுக்கு நடுவே போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஒரே அமைப்பு ரோட்டரிதான்.

உலகில் சண்டைகள், உள்நாட்டுக் கலவரங்கள் காரணாக 70 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவது கவலை அளிக்கும் விஷயமாகும். பாதிக்கப்பட்டவர்களில் பாதிக்கும் மேலானவர்கள் குழந்தைகளாவர். ரோட்டரியில் இருக்கும் நாம் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. அமைதிக்கான முயற்சிகளில் ஈடுபடும் தருணம் வந்துவிட்டது. உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் குழந்தைகள். 6 குழந்தைகளில் ஒன்று வறுமையில் வாடுகிறது. ஊட்டச்சத்து குறைபாடு கள் காரணமாக ஒவ்வொரு வருடமும் 5 வயதுக்கு உட்பட்ட 6 மில்லியன் குழந்தைகள் இறக்க நேரிடுகிறது. இதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

ரோட்டரி அமைதி பெல்லோஃஷிப் ஆக இருக்கும் ருக்மணி ஐயர், எல்லைகளுக்கு அப்பால் அமைதி என்னும் தலைப்பில் குழு விவாதம் நடத்தினார். இதில் கியூபாவுக்கான தூதர் அலெக்சாண்டரோ மரின், எகிப்து தூதர் வால் முகமது ஹமீத், பராகுவே தூதர் பிளெமிங் ரௌல் ராமோஸ், பல்கேரிய தூதர் எலெனோரா திமித்ரோவா ஆகியோர் பங்கேற்றனர்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

பெண் குழந்தைகளை கவனிக்க வேண்டிய அவசரமான காலம் இது

ரஷீதா பகத்

CRY-Child Relief and You போன்ற அமைப்புகள் ஏன் தேவை? இந்த நாட்டில் அனைவரும் சமமானவராக இல்லை என்பதால்தான். நமது குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், தரமான வாழ்க்கைக்கு சமமான வாய்ப்புகள் கிடைப்பதில்லை என்கிறார் ஹைதராபாத் தலைமைத்துவ மாநாட்டில் ரோட்டரி இயக்குநர் A S வெங்கடேஷ் தலைமையில் நடைபெற்ற மகளிரை மேம்படுத்துதல், அதிகாரமளித்தல் தொடர்பான அமர்வில் உரையாற்றிய CRY அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி(CEO) பூஜா மர்வாஹா.

CRY-அமைப்பு குழந்தைகளின் நலன், உரிமைகள், பாதுகாப்புக்காக செயல்பட்டுவரும் அரசு சாராத தொண்டு நிறுவனம். 1979 ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் நாடு முழுவதும் 19 நகரங்களில் குழந்தைகள் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, குழந்தைகள் பங்கேற்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது.

கோவிட் தொற்று காலத்தில் ஸ்மார்ட்போன் வசதி இல்லாமல் ஆன்லைன் மூலம் கற்றலைத் தொடரமுடியாமல் எண்ணற்ற இந்திய குழந்தைகள் பாதிக்கப்பட்ட அவல நிலையை அவர் எடுத்துரைத்தார். 25 சதவீத குழந்தைகளே ஸ்மார்ட்போன் மூலம் கல்வி கற்க முடிந்தது என்றும் மீதமுள்ள 75 சதவீதத்தினருக்கு அத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். கோவிட் தொற்றுக்காலத்தில் பள்ளிகள் நீண்டகாலம் மூடப்பட்டிருந்ததால், இணையதள வசதியும் ஸ்மார்போனும் கிடைக்கப்பெற்றவர்கள் மட்டுமே ஆன்லைன் மூலம் கல்வி கற்க முடிந்தது. அதாவது இணையதள வசதி 4 சதவீதமாகவே இருந்தது. இதனால் கற்றல் வெகுவாக பாதிக்கப்பட்டது. ஸ்மார்ட்போன் வசதியும் குறைந்த எண்ணிக்கையில் இருந்ததால் 75 சதவீத குழந்தைகள் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு கல்வியை சரிவர தொடர முடிய வில்லை. ஒட்டுமொத்தமாக 600 பள்ளி நாட்களை அவர்கள் இழந்து

ஹைதராபாத் மாநாட்டில் ரோட்டரி தங்களுக்கு அளித்த Tabletகளுடன் பள்ளி மாணவிகள்.

விட்டார்கள். இந்தக் குழந்தைகளுக்கு பள்ளியும் இல்லை, படிப்பதற்குத் தேவையான உள்ளீடுகளும் இல்லை, கற்றலும் இல்லை என்ற நிலைதான் இருந்தது. இப்போது நாங்கள் அவர்களுக்காக பயிற்சி வகுப்புகள் நடத்துகிறோம். இந்த தொற்றுக்காலத்தில குழந்தைகள் நான்கு ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். அவர்கள் கிட்டத்தட்ட பள்ளியில் படிப்பதைக் கைவிடும் நிலையில், அவர்களுக்காக மீண்டும் பாடம் நடத்தி வருகிறோம் என்றார்.

இந்தியாவில் உள்ள 75சதவீத குழந்தைகள் சார்பாக உணர்ச்சி பூர்வமாக பேசிய மர்வாஹா, இந்திய குழந்தைகளை பொருத்தவரை இது ஒரு அவசர காலம். இப்போது குழந்தைகளுக்கு நாம் தேவைப் படுகிறோம். கோவிட் தொற்றால் அல்ல, கோவிட் அவர்களை பள்ளியிலிருந்து வெளியேற்றி விட்டது. பெரும்பாலான ஏழைக் குழந்தைகள் பள்ளியில் பாது காக்கப்படுகிறார்கள். அவர்கள் பள்ளியில் இருப்பதால் அவர்கள் திருமணம் செய்து கொள்ள வில்லை அல்லது வேலைக்கு அனுப்பப்படு வதில்லை. அவர்கள் மதிய உணவு பெறுகிறார்கள் அதாவது அவர்கள் குடும்பத்துக்கு ரேஷன் கிடைக்கிறது. இப்போது ஊட்டசத்தும் இல்லை. பள்ளிப் படிப்பையும் கைவிடும் நிலை உள்ளது. எனவே அவசர கால அடிப்படையில் அவர்கள் அனைவரையும் மீண்டும் பள்ளிக்கு அனுப்பிவைக்க நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்றார் அவர்.

பள்ளி செல்லமுடியாத 19 மில்லியன் குழந்தைகள்

பெண் குழந்தைகள் பின்தங்கிய நிலையில் இருப்பது ஏன் என்று அவர் விவரித்தார். நமது நாட்டில் 19 மில்லியன் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில்லை. பெரும்பாலான பெண் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளி அளவில் காணாமல் போய் விடுகிறார்கள். ஆரம்பப் பள்ளி நிலையில் 1ம் வகுப்பில் சேருவோர் 98 சதவிகிதமாக உள்ளது. ஆனால், 8ம் வகுப்பை நெருங்கும் போது அவர்கள் இடை நிறுத்தத் தொடங்குகிறார்கள். 57 சதவீதம் மட்டுமே 8ம் வகுப்புக்குச் செல்கிறார்கள். ஏறக்குறைய 47 சதவீதம் பேரை நாம் இழக்கிறோம்.

பெண் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிக்குள் நுழைவதற்கு தடையாக இருக்கும் சில காரணிகளை அவர் விவரித்தார். முதல் தடை போதுமான பள்ளிகள் இல்லாதது. பெரும்பாலான பெண் குழந்தைகள் தங்கள் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் என்ன வகுப்புகள் இருக்கிறதோ அத்துடன் படிப்பை முடித்துக் கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு கிராமத்தில் உள்ள பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை இருந்தால் பெண் குழந்தைகள் அதன் பிறகு படிப்பை இடைநிறுத்தி விடுகிறார்கள். கிராமப் பள்ளிகளில் 10ம் வகுப்புவரை இருந்தால் பொருளாதாரத் தடைகளுக்கு நடுவே அவர்கள் அந்த படிப்பை தொடருவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், நம்நாட்டில் இந்தத் தடை களைவிட மிகப் பெரிய தடை நமது தலையிலும் இதயத்திலும் இருக்கிறது. மாநாட்டின் முந்தைய அமர்வில் ஒரு சுவாமிஜி முதல் இரண்டு வரிசையில் பெண்களைப் பார்க்க விரும்பாததால் முன்வரிசையில் அமர்ந்திருந்த பெண்களை வெளி யேறுமாறு கூறியது அதிர்ச்சியளிக் கிறது. முன்வரிசையில் ஆண்கள் அமரவைக்கப்பட்டனர். அப்படி யானால் பெண்கள் என்ன மனத் தூய்மை இல்லாதவர்களா? இது தான் மிகப்பெரிய தடை. உலகின் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் பெண்களாக இருக்கும் நிலையில் அவர்களை வேறுபடுத்தி பார்ப்பது ஏன்?

பெண்கள் பள்ளி வேண்டும்

மீண்டும் பெண் கல்வியின் முக்கியத்துவதை குறிப்பிட்ட அவர், கிராமங்களில் மேனிலைப் பள்ளிவரை கற்கும் வசதி வேண்டும். மேலும் பெண்கள் பள்ளி தனியாக இருக்க வேண்டும். பெரும்பாலான பகுதிகளில் உள்ள பள்ளிகள் இருபாலர் பள்ளியாக இருப்பதால் பெற்றோர்கள் பெண் குழந்தைகளை அப்பள்ளியில் சேர்ப்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். எனவே கிராமங்களில் பெண்கள் பள்ளிகள் தனியாக இருப்பது அவசியமாகும்.

மேலும் பெண்கள் கல்வியைத் தொடர பொருளாதாரம் ஒரு தடையாக இருப்பதால் இலவச கல்வி அளிக்கப்பட வேண்டும். பெண்களை படிக்கவைப்பது புத்தி சாலித்தனம் அல்ல, ஏனெனில் அவள் திருமணமாகி வேறு குடும்பத்துக்கு செல்லவேண்டியவள்தானே என்ற எண்ணம் பலரிடம் உள்ளது. இது அபத்தமானது.

இதுபோன்ற எண்ணங்களால் பெண் குழந்தைகள் பாதிக்கப் படுகிறார்கள். பலநேரங்களில் ஆசிரியர்கள், குறிப்பாக ஆசிரியைகள் மாணவிகளிடம், நீங்கள் திருமணத்துக்குப் பின் வீட்டு வேலை தான் செய்யப் போகிறீர்கள். எனவே உங்களால் படிக்க முடியா விட்டால், அல்லது படிப்பு வராவிட்டால் கவலைப்படாதீர்கள். பள்ளிக்கு வரவேண்டாம் என்று சொல்வதை பார்க்க முடிகிறது.

மேலும் வீட்டில் இளைய சகோதரனை பராமரிக்க வேண்டிய நிலையில், பெற்றோர்களிடம் பணவசதி குறைவாக இருக்கும் நிலையில், ஆண்களின் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது. பெண் குழந்தைகள் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்த வேண்டியுள்ளது. துரதிருஷ்டவசமாக பெண் குழந்தைகள் சரியாக வளர்க்கப் படுவதுமில்லை, ஊக்கப்படுத்தப் படுவதும் இல்லை. இவை இரண்டும் செய்யப்பட்டால் நிச்சயம், பெண்கள், ஆண்களை விட சிறப்பாக செயல்படுவார்கள்.

உடல் ரீதியான தண்டணை, வகுப்பறையின் சூழல் அல்லது போதிய ஆசிரியர்கள் இல்லாதது ஆகியவை பெண்கள் இடை நிற்றலுக்கு காரணமாக அமைந்துள்ளதாக CRY அமைப்பின் ஆய்வில் தெரியவந்துள்ளதாக மர்வாஹா தெரிவித்தார். இத்தகைய தடைகளை கடந்து வந்து, அவர்கள் வசிக்கும் பகுதியில் பள்ளிகள் இருக்குமானால், அவர்களுக்கு பாதுகாப்பு இருக்குமானால், பெண் குழந்தைகளின் இடைநிற்றலைத் தடுக்க முடியும். ஆனால், பெரும் பாலான பள்ளிகள் கிராமத்திலிருந்து

10 அல்லது 15 தொலைவிலேயே அமைந்துள்ளன. பெண்கள் கல்வி கற்பதற்கு பயணத்தூரமும், பாதுகாப்பும் பெரும் தடையாக உள்ளன.

ரோட்டரிக்கு பாராட்டு

இந்தியா முழுவதும் பள்ளிகளில் பெண்களுக்கு என தனியாக கழிப்பறை வசதி செய்துதரும் ரோட்டரியின் முயற்சிக்கு மார்வாஹா பாராட்டுத் தெரிவித்தார். மிக முக்கியமான பிரச்னைக்கு நீங்கள் (ரோட்டரி) தீர்வுகண்டு வருகிறீர்கள். பள்ளிகளில் கழிப்பறைகளும், நல்ல குடிநீர் வசதியும் இருந்தால் பெண்களின் இடைநிற்றலை தடுக்க முடியும் என்றார்.

CRY மற்றும் வார்விக் பல்கலைக் கழகத்து இடையிலான கூட்டாண்மையை அவர் விவரித்தார். எங்கள் அமைப்பின் அடிப்படை தகவல்களை அவர்கள் ஆய்வு செய்தபோது, பாதுகாப்பு நிறைந்த பகுதிகளில் பெண் குழந்தைகளில் அதிக அளவில் பள்ளிக்கு வருகிறார்கள். பாதுகாப்பற்ற சூழல் உள்ள இடங்களில், குற்றச்செயல்கள் அதிகம் உள்ள பகுதிகளில் இடைநிற்றல் அதிகரிக்கிறது. அதன் விளைவாக பெண்கள் சிறுவயதிலேயே திருமணம் செய்து கொள்வது தெரியவந்துள்ளது என்றார்.

ஆனால், தரமான சாலைகளும், பேருந்து போக்குவரத்து வசதியும் இருந்து அல்லது பெண்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் சைக்கிள்கள் வழங்கப்பட்டால் நிலைமை சீரடையும். அணுகலும், பாதுகாப்பும்தான் தாரக மந்திரங்கள்.

குழந்தைத் திருமணம் வேண்டாம்

அவர் மேலும் கூறுகையில், குழந்தைகளாக இருக்கும்போதே திருமணம் செய்வதும் இடை நிற்றலுக்கு முக்கிய காரணமாகும். ஆனால், இதற்கு ஆதாரம் கிடைப்பது கடினமானது. ஏனெனில் குழந்தைத் திருமணங்கள் சட்டவிரோதமாக நடைபெறுவதால் அவை பதிவு செய்யப்படுவதில்லை. சமூகம் என்ற வகையில் நாமும், நாடும் நவீனமான கோவில்கள் கட்டுவது, ராக்கெட் மற்றும் ஏவுகணை தயாரிப்பது உள்ளிட்ட ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொண்டு கல்விக்குச்

PDG TVR *மூர்த்தி* CRY CEO *பூஜா மார்வஹாவிற்கு*
RID A S *வெங்கடேஷ் முன்னிலையில் நினைவுப்பரிசு அளிக்கிறார்.*

செலவழித்தால், 12ம் வகுப்புவரை இலவச கல்வியை வழங்கினால் உண்மையில் அது தேசத்துக்கு பயனளிக்கும்.

பெற்றோர்கள், பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி கல்வி பயில வேண்டும் என்பதற்காக ராஷ்ட்ரீய கிஷோரி யோஜனா உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால், 90 சதவீத பெற்றோர்களுக்கு இதுபோன்ற திட்டங்கள் இருப்பதே சரிவர தெரிவதில்லை. ஆனால், ஒரு சமூக அமைப்பு என்ற வகையில் நாங்களும், நீங்களும், மக்களிடம் நிதியுதவி அளிக்கிறோம் என்று மட்டும் சொல்லாமல், இத்திட்டங்கள் குறித்து அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்த முக்கியமான காரணம் கல்விக்கு பணம் செலவழிக்க முடியாத நிலை. பல குடும்பங்களில் வறுமையின் காரணமாக பெண் குழந்தைகளை படிக்க வைப்பதில்லை அல்லது பாதியிலேயே படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். வீட்டை நிர்வகித்து, குழந்தைகளை வளர்ப்பது செலவு மிகுந்தது என்று சிலர் சொல்லக்கூடும். அதற்காக நாங்கள் ஒரு ஆய்வு மேற்கொண்டோம். அதன் முடிவுகள் எங்களுக்கு திகைப்பூட்டின.

ஒவ்வொரு கல்வி ஆண்டும் அதிகரிக்கும்போது பெண் குழந்தைகளின் திறனும் அவர்கள் இலக்குகளை அடைவதற்கான சதவீதமும் அதிகரிக்கிறது. CRY அமைப்பைச் சேர்ந்த குழுவில் இடம்பெற்ற பொருளாதார நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சிலர், பெண்கள் கல்வியைத் தொடர்வதால் ஏற்படும் தாக்கத்தை அளவீடு செய்துள்ளனர். முதல் கட்டமாக திருமணம் தாதமப்படுத்தப் படுகிறது.

13 வயதில் திருமணம் செய்து கொள்ளும் பெண், 14 வயதில் குழந்தைபெற்று விடுகிறாள். இந்த சமயத்தில் அவளுக்கு ரத்த சோகை நோய் ஏற்படும். குழந்தையும் எடை குறைவாக இருக்கும். இதனால் குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் ஏற்படும். அவளால் பணம் சம்பாதிக்கவும் முடியாது. இதனால் குழந்தைக்கு ஊட்டச்சத்து கிடைகாமல் இறக்கவும் நேரிடும். மேலும் இதுபோன்ற சமயங்களில் குறைப்பிரசவம் உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படலாம். இது அந்த பெண்ணின் ஆரோக்கியத்தை பாதிக்கும். ஊட்டசத்து குறைபாடுள்ள குழந்தைகள் அப்படியேதான் வளர்வார்கள்.

இந்த தீயசுழற்சியின் விளைவாக நம்நாட்டில் ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை ஆப்பிரிக்காவில் உள்ள சப்-சஹாரா நாடுகளில் உள்ள எண்ணிக்கையைவிட அதிகமாகும் என்று அரசு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதுபோன்ற மோசமான செய்திகளைச் சொல்லவேண்டாம் என மக்கள் என்னிடம் கூறுகிறார்கள். ஆனால், உண்மை என்னவெனில் வங்கதேச த்தில் குழந்தைகள் இறப்பு விகிதம் நம் நாட்டைவிட குறைவாக இருப்பதுதான்.

பெண்கள் படித்தால் தேசம் வளர்ச்சியடையும்

ஒரு பெண்ணுக்கு ஒரு ரூபாய் வீதம் முதலீடு செய்து அது ரூ.15 ஆக நமக்குத் திரும்பக் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முதலீடு ஒரு ரூபாய்தான் லட்சக்கணக்கில் அல்ல. நம்மால் அது முடியும். ஆனால், பெண் குழந்தைகள் விஷயத்தில் நாம் மிகவும் கஞ்சத்தனமாக இருக்கிறோம். இதனால் 19 மில்லியன் பெண் குழந்தைகள் கல்வி கற்க முடியாத நிலை உள்ளது. பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் கிடைக்கும் நன்மைகள் அதிகம். திருமணத்தை தாமதப்படுத்தினால், அவர்கள் வேலைக்குச் செல்வார்கள், பணம் சம்பாதிப்பார்கள், தேசத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பார்கள். சமூகமும் அவர்களை ஏற்றுக்கொண்டு சமபங்கு அளிக்கும். நிலை உருவாகும்

மக்கள் தொகையில் பாதிக்கு மேல் இருக்கும் பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொண்டுவிட்டால், இந்தியா போன்ற நாடுகளில் பள்ளிகளுக்காக முதலீடு செய்ய பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவது பெரிய செலவினமாக இருக்காது. உண்மையில் CRY முன்வைக்க விரும்பும் வாதமும் அதுதான்.

இந்த அமர்வுக்கு தலைமையேற்ற RI இயக்குனர் வெங்கடேஷ் பேசு கையில், பெண் குழந்தைகளை கல்வி கற்க வைப்பதில்தான் நம் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. பெண் குழந்தைகளை படிக்கவைத்து, வளர்த்து, அவர்களையும் நாட்டின் தேசிய நீரோட்டத்தில் கலக்கச் செய்ய வேண்டும். ரோட்டரியின் RILM எழுத்தறிவுத் திட்டத்தின் ஒரு அங்கமாக ஆஷா கிரன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இடைநின்ற பெண்கள் மீண்டும் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க இது வழிவகை செய்கிறது. அந்த விதத்தில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம் என்றார்.

CRY அமைப்பின் குறிக்கோள் மற்றும் நோக்கம் என்ன என்று நான் பூஜா மர்வாஹாவிடம் கேட்டேன். அதற்கு அவர், இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அதன் வளர்ச்சியில் பங்குதாரராக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் நிறுவனர்களின் குறிக்கோளாகும். நன்கொடை பெறுவது எங்கள் இலக்கல்ல, நாட்டில் பள்ளி செல்லாத பெண் குழந்தைகள் எண்ணிக்கையை வெகுவாக குறைக்க வேண்டும், கல்வி கற்காத பெண்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோளாகும் என்றார்.

ரோட்டரி எழுத்தறிவு இயக்கத்தின் அங்கமான ஆஷா கிரண் மூலம் இடைநின்ற பெண் குழந்தைகள் மீண்டும் பள்ளிக்குச் செல்வது வரவேற்கத்தக்க அம்சமாகும். இது தேசத்தை கட்டியெழுப்புவது மற்றும் பெண்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய தரமான கல்வியை உறுதிசெய்வதாகும். எனவே RILM மற்றும் BYJU'S ஆகிய இரண்டின் கூட்டு முயற்சி மூலம் அரசுப் பள்ளி மாணவ-மாணவிகள் கல்வி கற்க ஏதுவாக அவர்களுக்கு பாடங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட இலவசமாக கையடக்க கணினிகளை வழங்கி வருகிறது என்றார்.■

ரோட்டரி தலைமை மாநாட்டின் சில சுவாரஸ்ய துளிகள்

ரஷீதா பகத் மற்றும் ஜெய்ஸ்ரீ

RI *தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி* House of Friendship-*ல்.*

ஹைதராபாத் நவாபி நகரில் RI தலைமை மாநாடு துவங்கியதும், RI தலைவர் சேகர் மேத்தா தொடக்க அமர்வில் உரையாற்றுகையில், நான் ஹைதராபாத்தில் இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், அதற்ககு பல காரணங்கள் உண்டு. முதலில் இந்த நகரம், இந்த இடம், இதை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டவர்கள் (PRID) கமல் சங்வி மற்றும் (PDG) ரவி வட்லாமணி, ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர், இவர்கள் அனைவரும் என்னை ஒரு தசாப்தத்திற்கு பின்னோக்கி அழைத்துச் செல்கின்றனர். நான் RI இயக்குநர்கள் குழுவில் இருந்தபோது, நாங்கள் ஹைதராபாத் எழுத்தறிவு உச்சிமாநாட்டை நடத்தினோம், இது இந்தியாவில் நடைபெற்ற மிகப்பெரிய ரோட்டரி நிகழ்வாகும், மேலும் இதே நோவோடெல் கன்வென்ஷன் ஹோட்டலில் நடைபெற்றது குறிப்பிடதக்கது.

அவரது மகிழ்ச்சிக்கான இரண்டாவது காரணம், நிகழ்வில் கிட்டத்தட்ட 3,000 பேர் கூடியிருப்பது கோவிட்டிற்கு நாம் கொடுக்கும் பெரிய பதிலடியாகும். இங்கு கூடியிருப்பதன் மூலம், மனிதர்கள் மனம் தளராதவர்கள் என்றும், எவ்வளவு பெரிய சவாலாக இருந்தாலும் அதை நாம் சமாளிப்பவர்கள் என்றும் நிரூபித்துள்ளோம்.

மூன்றாவது காரணம், இங்கே கடலென திரண்டிருக்கும் ரோட்டேரியன்களின் பார்த்து நான் சிலிர்க்கிறேன். இந்த ஆண்டு உலகளவில் ரோட்டரியில் நடைபெறும் இரண்டாவது பெரிய நிகழ்வு இதுவாகும்; ஹூஸ்டனில் நடைபெறும் மாநாடு மிகப்பெரியதாகும். மிகவும் கடினமாக உழைக்கும் ரோட்டேரியன் குடும்பத்துடன் எனது சொந்த நாட்டில் இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

உக்ரைனில் இருந்து செல்லப் பிராணிகள் மீட்பு!

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகளுக்கான இணை அமைச்சர், ஜெனரல் V K சிங், போர் மண்டலங்களில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்பதில் ஒரு அனுபவமிக்கவர், அவர் கூறுகையில் கடந்த பல ஆண்டுகளாக நான்

பணியாற்றிய அனைத்து மீட்பு பணிகளிலும் சமீபத்திய மீட்பு பணி (உக்ரைனில் இருந்து) மிகவும் சுவாரஸ்யமானது. ஏனென்றால், மக்களுடன் சேர்ந்து நாங்களும் செல்லப்பிராணிகளை... நாய்கள், பூனைகள், எலி போன்றவற்றை வெளியேற்ற வேண்டியிருந்தது.''

உக்ரைனில் சிக்கியுள்ள பெரும் பாலான இந்தியர்கள் மருத்துவ மாணவர்கள், அவர்களிடம் நான் கேட்கும் முதல் கேள்வி, நீங்கள் மருத்துவம் படிக்க உக்ரைனுக்கு வந்தீர்களா அல்லது செல்லப்பிராணிகளை வளர்க்க வந்தீர்களா? இது மிகவும் கடினமான சூழ்நிலை மற்றும் அவர்களின் செல்லப்பிராணிகள் மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதலை என்னால் காண முடிந்தது. எனவே பூனைகள், நாய்கள் மற்றும் முயல்களை மீட்டு இந்தியாவிற்கு கொண்டு வந்தோம்.

''நாங்கள் காப்பாற்றிய செல்லப் பிராணிகள் மிகவும் குளிரான பருவ நிலையில் வாழ்ந்தவை இந்தியாவின் இந்த பெரும் வெப்பத்தில் உயிர் பிழைக்க வேண்டும்'' என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

புகைப்படம் எடுத்து கொள்ள அலங்கரிக்கப்பட்ட ஆட்டோவில்.

சந்திப்பு மற்றும் உரையாடல்

துடிப்பான இசை மற்றும் ஆடம் பரமான பிரேசிலிய உடைகளை அணிந்த நடனக் கலைஞர்கள் கோலாகலமாக நடனமாடி ஹவுஸ் ஆப் ப்ரென்ட்ஷிப் தொடக்க விழாவிற்கு தொனியை அமைத்தனர். அதனை தொடங்கி வைத்த RI தலைவர் மேத்தா, ராஷியுடன் இணைந்து பிரமாண்ட அணிவகுப்பை முன்னின்று வழி நடத்தினர். ''மூன்று நாட்களும் கூட்டம் அலை மோதியது,'' என்று புன்னகைக்கிறார் HoF கமிட்டி தலைவர் PDG மாதவ் சந்திரன். நிராகரிக்கப்பட்ட பீப்பாய்கள், பிளாஸ்டிக் கேன்கள், பாட்டில்கள் மற்றும் பெயிண்ட் வாளிகள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட மகிழ்ச்சியான இசையால் மும்பையின் தாராவி சேரிகளைச் சேர்ந்த இளைஞர்களை உள்ளடக்கிய இசைக்குழு, தாராவி ரீலோடட் பார்வையாளர்களை ஈர்த்தது

புகைப்பட சாவடி மிக பிரபலமாக இருந்தது. வணிக சாவடிகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது என்கிறார் சந்திரன். ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட வீடு விற்பனையாளர் ட்ரீம்ஸ்கேப், மாநாட்டின் தலைப்பு ஸ்பான்சராக இருந்தனர் மற்றும் அதன் நிறுவனர் நாகராஜு நதிகுடா சாவடிகளுக்கு வந்த ரோட்டேரியன்களின் ஆர்வமுள்ள கேள்விகளுக்கு மகிழ்ச்சியாக பதில் அளித்தார். அவர் AKS உறுப்பினராவதற்கும், RID 3150ன் முதல் கார்ப்பரேட் சங்கமாக RC ட்ரீம்ஸ்கேப்பை உருவாக்குவதற்கும் தனது உறுதிப்பாட்டை அறிவித்தார்.

''மாநாட்டு அனுபவத்தை சிறப்பானதாகவும், அனைவருக்கும் மறக்கமுடியாததாகவும் மாற்ற நாங்கள் அனைத்தையும் செய்துள்ளோம்'' என்று சந்திரன் புன்னகைக்கிறார்.■

உக்ரைனிலிருந்து மீட்டு வரப்பட்ட இந்திய மாணவர் மற்றும் அவர் செல்லப்பிராணி.

Rtn Shekhar Mehta
RI President

Rtn Ramesh Meher
District Governor

GLIMPSES OF

RC Nagapur North donates 100 smokeless chulas

RC Nagpur North is doing meaningful projects for the last 36 years. After learning about the Beltarodi cylinder blast and the losses people suffered, the club members met government officials to get a clear picture of the things urgently required to rehabilitate the victims. In the presence of DG Ramesh Meher, the club distributed 102 smokeless stoves worth ₹3 lakh and 100 food kits worth ₹70,000 to the affected families.

This project was executed in association with the management and parents of students of The Achievers School, Rotaract Clubs of SMV and NFSC. The club members visited the mishap site and enquired about the needs of the affected families. Club president Hashu Ambwani, treasurer Vinay Dara, joint secretary Nand Tahiliyani, youth director Swapnil Band, Anns Kimaya Pyaramwar and Gayathri Band assured the victims of all the help in the near future. ■

Rotary Utsav at RC Hinganghat

Agala Rotary Utsav 2022 was organised by RC Hinganghat at the Taka ground. The five-day festival presented by Gima White Gold from April 28-May 2 consisted of stage events that not only entertained the public but also enhanced the PR of Rotary. Legislator Sameer Kunawar was the chief guest at the inaugural ceremony. Club president Jitendra Kedar performed the puja with his wife Sonali in the presence of event chairman Pitambarji Chandani, vice-chairman Kedar Joglekar, club secretary Pundlik Bakane, Utsav secretary Satish Dangre, Jitendra Varma, Shakir Khan Pathan, AG Smita Thakare, Srinivas Lele, Dr Ashok Mukhi, AG Murali Lahoti and other members.

The Utsav drew visitors from all over the town and nearby villages on all five days. The large gathering enjoyed a variety of spectacle including diverse food stalls, shopping pavilions with display items ranging from hearing aids to bikes and cars, and club events. A group dance with a social theme was held on the first day with a total of 83 participants. The next day Prashant Mohota hosted a show called *Kya Bolti Public*. On the fourth day of the Utsav, the club held a morning programme, *Jiyo Zindagi Khul Ke*, which included activities such as Zumba dance games for a healthy lifestyle. In the evening a patriotic event titled *Akhil Bhartiya Kavi Sammelan* opened a platform in which Sunil Somiya, Devendra Parihar, Sunita Saroj and Murali Lahoti exhibited their poetical skills.

Each day featured a different signature event. A singing competition for school students titled *Hinganghat Idol* attracted 83 contestants from over 16 schools. Mansi Singh was the winner, followed by Samyak Moon and Talshri Danav. The jury panel consisted of Nagpur singers — Vaishali Jamunkar, Kunal Bhati and Jobanputra. The festival and its events got wide coverage in the local dailies and on TV channels.

The members of the Rotary family showcased their skills and talents on the final day. A yoga camp got an enthusiastic response. The festival was a huge success for the club as it brought a lot of joy to the public who were able to see something like this after two years of pandemic. ■

DISTRICT 3030

जीवन RID 3030 RY 2021-22
LIVE LIFE.... GIVE LIFE

SERVE TO CHANGE LIVES

A gala festival at Chopda

Showcasing the organising skills of RC Chopda, the Rotary Utsav 2022 was a grand success. The event was inaugurated by district magistrate Abhijit Raut from Jalgaon. The Utsav was divided in four zones: Business, Cultural Activity, Food and Play zones. In business zone companies from various sectors — agriculture, automobile, home appliances, electronics, e-bike, garments, food items etc — represented their products. Cultural activities were performed by school children. The Food zone was a major attraction, followed by the play zone which drew a large number of children. During four days of Rotary Utsav more than one lakh people visited the event. The major highlights were the talk shows on current affairs, awards ceremony and the cultural programmes by students.

All the club members, sponsors and stall owners took active interest in the Utsav. Club president Pankaj Borole, secretary Pravin Mistri, project chairman Rupesh Patil, co-chairman Chtan Tatia and treasurer Tejas Jain took efforts to make the Utsav a spectacular event in Chopda. ■

All roads led to Rotary Utsav in Wardha

Over the last 26 years, RC Gandhi City Wardha has been organising the four-day Rotary Utsav which provides a great platform for more than 250 companies to showcase and sell their products.

The grand event hosted a range of competitions for the public in Wardha and surrounding villages, besides helping local enterprises to thrive. Apart from this, Rotary Utsav creates a healthy environment for children by providing amusement space which had play swings and sports equipment for entertainment. The club presented a wide range of cuisines, a major highlight of the event. Every member of the club took part with enthusiasm.

Fundraising is the main objective of the Rotary Utsav and the proceeds are used for implementing a range of club projects throughout the year. The club showcased seven focus areas of Rotary at this festival:

1. **Promoting peace –** Some stalls were kept reserved for groups like the Art of Living and Brahma Kumaris to display their services.
2. **Fighting disease –** A vaccination centre was set up at the entrance for Covid prevention. Also, a mammography camp for women was conducted.
3. **Providing water and hygiene –** The huge ground littered with garbage and food waste was cleaned, thus protecting the health of the local residents; Water coolers were installed to provide drinking water for the visitors to the Rotary Utsav; and dustbins were put up to maintain cleanliness at the place.
4. **Saving mother and child –** A stall created awareness of mother's milk bank which nurtures the infants.
5. **Supporting education –** Some stalls were reserved for speech and higher education guidance by lecturers from educational institutes.
6. **Growing local economics –** Some stalls were made available for the 'Bachat guts' to boost the local economy. All the other stalls were allotted to the businessmen from the local area.
7. **Protecting environment –** A cleanliness campaign was conducted by Rotarians through FM Radio Mirchi which stressed on the need to maintain cleanliness in Wardha. ■

பெண்களுக்கு தொழிற்கல்வி அளிக்கும் RC பரோடா மெட்ரோ

ரோட்டரி செய்திக் குழு

RC பரோடா மெட்ரோவின் தொழிற்கல்வி சேவைக் குழுவானது (2021–22), 10ம் வகுப்பிற்கு முன்பே பள்ளியில் இருந்து விலகிய அல்லது குடும்ப காரணங்களுக்காக 10ம் வகுப்பிற்கு மேல் படிக்க முடியாமல் போன 28 இளம்பெண்களுக்கு வேலை வாய்ப்பு, சுயதொழில் மற்றும் திறமையான இல்லத்தரசி களாகவும் திகழ தேவைப்படும் திறன்களை வழங்குவதற்காக ஒரு பயிற்சித் திட்டத்தை நடத்தியது. இந்திய அரசாங்கத்தால் 2019–21ம் ஆண்டில் நடத்தப்பட்ட தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பின்படி, குஜராத்தில் 1ம் வகுப்பில் கல்வி கற்கத் தொடங்கிய ஒவ்வொரு 100 பெண்களில் 45 பேர் மட்டுமே 12ஆம் வகுப்பை எட்டியுள்ளனர் என்று சங்கம் கண்டறிந்துள்ளது. இதற்கான பல்வேறு காரணங்கள் வீட்டில் பணிச்சுமை, வீட்டிற்கும் பள்ளிக்கும் இடையே உள்ள தூரம், தண்ணீர் மற்றும் கழிப்பறை வசதிகள் இல்லாதது போன்றவை.

வதோதராவிற்கு அருகில் உள்ள தாஜிபுரா கிராமத்தில் சமூக நலன் சார்ந்த சில நிகழ்ச்சிகளை நடத்தும் போது, பெண்களுக்கான இத்தகைய பயிற்சித் திட்டத்தின் அவசியத்தை மருத்துவர்களான ஷர்மிஷ்தா தேசாய் மற்றும் மனீஷா ஷுகுல் ஆகியோர் கண்டறிந்தனர். சில பருவப் பெண்களுடன் பேசும்போது அவர்கள் மேலும் படிக்க விரும்புவதைக் கண்டறிந்தனர். கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியின் முதல்வர், உயர்நிலைப் பள்ளி வசதிகள் இல்லாததால், இந்தப் பெண்கள் மேல்படிப்பைத் தொடர முடியாத நிலை உள்ளதை குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார். ரோட்டரியர்களால் நடத்தப்படும் பயிற்சித் திட்டத்தின் மூலம் சிறுமி களுக்கு சில திறன்களை வழங்கு வதற்கு அவர் உதவ தயாராக இருந்தார்.

எனவே, ஷர்மிஷ்தா மற்றும் மனீஷா இருவரும் இந்த சிறுமிகளின் குடும்ப மற்றும் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒரு குறுகிய

சாலட் தயாரிக்க கற்றுத்தரப்படுகிறது.

ஜுஸ் தயாரிக்கக் கற்றுத்தரப்படுகிறது.

சான்றிதழ் படிப்பு ஆகும். பரோடா அருகே உள்ள தாஜிபூர் பள்ளியில் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. RC பரோடா மெட்ரோ தலைவர் வ்ரஜேஷ் ஜிண்டால் துவக்கி வைத்தார். பரோடா மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்தின் ஹோம் சயின்ஸ் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் சில ரோட்டேரியன்கள் ஆசிரியர்களாக இருந்தனர்.

சத்தான உணவு, நிகழ்வு மேலாண்மை, சாலட் தயாரித்தல் மற்றும் காய்கறி நறுக்குதல், தனிப்பட்ட சுகாதாரம், கர்ப்பம் மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு, குழந்தைகள் மற்றும் வயதான குடும்ப உறுப்பினர்களைப் பராமரித்தல், வீட்டு பராமரிப்பு, ஆளுமை மேம்பாடு, தகவல் தொடர்பு, நுகர்வோர் கல்வி, வளங்கள் மேலாண்மை, வீட்டு அலங்காரம் மற்றும் 'கழிவு களிலிருந்து சிறந்தவற்றை' பெறுதல் ஆகியவை பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 28 சிறுமிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுது பொருள்கள் போன்றவை வழங்கப் பட்டன.

கால பயிற்சித் திட்டத் தொகுதியைத் தயாரித்தனர், சங்கத்தின் உறுப்பினர் குழு தகுந்த நிதியைக் கண்டறிந்தது, மேலும் 'வாழ்க்கையை மாற்ற சேவை செய்யுங்கள்' என்ற இந்த ஆண்டு RI கருப்பொருளை மனதில் வைத்து பிப்ரவரியில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

"இந்தப் பருவப் பெண்களின் பயிற்சி மற்றும் அதிகாரமளித்தல் நிகழ்காலத்தை மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்தையும் மாற்றும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் பணியாற்றியுள்ளோம்" என்று திட்ட ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான டாக்டர் ஷர்மிஷ்தா கூறினார்.

மற்றொரு ஒருங்கிணைப்பாளரான டாக்டர் மனீஷா கூறுகையில், இந்த திட்டம் இந்துஸ்ரீ-குஷால் கிரிஹினி (திறமையான இல்லத்தரசி) என்று பெயரிடப்பட்டுள்ளது மற்றும் இப்படிப்பு 6 நாள்

ஷர்மிஷ்தா தேசாய் (வலது) மற்றும் ஷிவாங்கி பாரிக் காகித பைகள் தயாரிக்க கற்றுத்தருகின்றனர்.

காய்கறி செதுக்குதல் வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது.

DG *சந்தோஷ் ப்ரதான் (இடது) மற்றும்* PRID *மனோஜ் தேசாய் ஒரு மாணவியுடன்.*

பெண்கள் காகித பைகளை தயாரிக்கின்றனர்.

RID 3060 DG சந்தோஷ் பிரதான் மற்றும் அவரது மனைவி சுனேத்ரா, PRID மனோஜ் தேசாய், சங்கத்தலைவர் ஜிண்டால், செயலாளர் சந்தீப் குரோவர் மற்றும் பிற சங்க உறுப்பினர்கள் பாராட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

"பங்கேற்பாளர்களின் கருத்துக்கள் மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது. தாங்கள் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டதாகவும், இந்த வழியில் தங்களுக்கு உதவிய நம் சங்கத்தின் ரோட்டேரியன்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நம் சங்கத்தின் அடுத்த நிலை நிகழ்ச்சியில் பங்கேற்க ஆர்வமாக இருந்தனர் என டாக்டர் மனீஷா கூறினார்.

இந்த திட்டத்தைச் செய்வதற்கு சங்க உறுப்பினர்கள் பள்ளியின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது பள்ளிக்கும், மாணவர் களுக்கும் பல வசதிகள் மற்றும் உபகரணங்கள் தேவை என்பதை நாங்கள் உணர்ந்தோம். பள்ளியின் மின்சார வச தியை சரி செய்வதற்காக 12,000 ரூபாய் நமது சங்கத்தலைவர் நன்கொடையாக அறிவித்துள்ளார். மின் பொருத்துதல்கள் மட்டுமின்றி, வகுப்பறைகளுக்கான அலமாரிகள் மற்றும் மேஜைகளையும் அவர் நன்கொடையாக வழங்கினார்" என்று Dr ஷர்மிஷ்தா கூறினார்.■

சொக்க வைக்கும் பிரேசில்

மகேஷ் கோட்பாகி

RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் அமிதா கனேலா ரோட்டரியினருடன்.*

"பிரேசில்" என்ற வார்த்தை போர்த்துகீசிய வார்த்தையான பிரேசில்வுட் என்பதிலிருந்து வந்தது, இந்த மரம் ஒரு காலத்தில் பிரேசிலிய கடற்கரையில் ஏராளமாக வளர்ந்தது. பிரேசில் உலகின் ஐந்தாவது பெரிய நாடாகும், பிரேசிலியா இந்த மிகப்பெரிய தென் அமெரிக்க நாட்டின் தலைநகரம். அதன் மிகவும் பிரபலமான மற்றும் மக்கள் தொகை கொண்ட நகரம் சாவ் பாலோ. கால்பந்து பைத்தியம் பிடித்த நாடான இது புனித சிலுவை நிலம் என்றும் அழைக்கப்படுகிறது. அப்பெயர் அதன் முன்னாள் போர்த்துகீசிய குடியேற்றவாசி களால் வழங்கப்பட்டது. ஏனெனில் இது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான "கிறிஸ்து தி ரீடீமர்" இருக்கும் நாடு. இருப்பினும், அந்நிய ஆக்கிரமிப்பிற்கு முன்பு, பழங்குடியினர் தங்கள் நாட்டை பிண்டோராமா என்று அழைத்தனர்.

RI தலைவர் சேகர் மேத்தாவின் பிரதிநிதியான என்னை RID 4680, பிரேசிலின் எனது ரோட்டரியன் நண்பர்கள் நள்ளிரவில் இந்தியக் கொடியுடன் வந்து விமான நிலையத்தில் வரவேற்றனர். அடுத்த ஒரு வாரத்தில், நட்பை வளர்ப்பதில் மொழி ஒரு தடையாக இருக்க முடியாது என்பதை அறிந்தேன். கனேலா மற்றும் கிராமோடா ஆகிய இரண்டு அழகிய நகரங்களில் இருந்து 'ஸ்க்ரோல் ஆஃப் ஹானர்' பெற்றது RIPR ஆன எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

மலைகள் மற்றும் நீண்ட மணல் கடற்கரைகள் கொண்ட அமேசான் காடுகள் நாடு முழுவதும் பரந்து விரிந்து உள்ளது. அவை ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன; உணவகங்கள் கோகோ, காபி, சாக்லேட் மற்றும் கிரில்ஸ் மூலம் நம் சுவை மொட்டுகளை தூண்டுகின்றன. 81 வயதான நெய் குடின்ஹோ, என் முழு பயணத்தின் போதும் எனக்கு உதவினார். PRID மரியோ சீசர் மார்டின்ஸ் டி காமர்கோ, பல மூத்த தலைவர்களுடன் இணைந்து நடத்திய ஆடம்பரமான இத்தாலிய விருந்து, அந்த மாபெரும் மாலையை மறக்க முடியாததாக மாற்றியது. புகைப்படம் எடுக்கும் போது சிரிப்பது போல் இருக்க "சீஸ்" என்று அடிக்கடி சொல்வோம். ஆனால் பிரேசிலியர்கள் அந்த வார்த்தையை பயன்படுத்த தேவையில்லை. ஏனெனில் அவர்கள் எப்போதும் சிரிக்கும், மகிழ்ச்சியான ஆத்மாக்கள்.

எழுத்தாளர் RI இயக்குனர்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது — ஒரு கூட்டுப் பொறுப்பு

ஜெய்ஸ்ரீ

இந்த கிரகத்தில் உள்ள நாம் ஒவ்வொருவரும் நமது சுற்றுச்சூழல் நமது கூட்டுப் பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் இது. விவேகமான அணுகுமுறையுடன் அதை எல்லா வழிகளிலும் பாதுகாப்பதில் ஒவ்வொருவருக்கும் பங்கு உள்ளது, என்று காலநிலை ஆர்வலர் வந்தனா ஷிவா ஹைதராபாத் தலைமை மாநாட்டில் RI இயக்குனர் விர்பி ஹொன்கலா தலைமையில் நடந்த 'சுற்றுச்சூழலுக்கு ஆதரவு' என்ற கூட்டத்தில் உரையாற்றினார். "இது வெறும் 'காலநிலை பேரழிவு" அல்ல, மாறாக நமது பூமிக்கு ஒரு 'சுகாதார பேரழிவு'. நமக்கு இன்னொரு கிரகம் இல்லை என்றார். மரங்களை வெட்டுவதைக் கண்டித்த அவர், இயற்கையின் கூறுகள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்றும், இந்த கிரகத்தில் நாம் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளில் இவை தாக்கத்தை ஏற்படுத்து வதாகவும் எச்சரித்தார்.

இந்தியாவின் மிகவும் சக்தி வாய்ந்த வனப்பாதுகாப்பு நடவடிக் கையான சிப்கோ இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், வந்தனா, "மரத்தைப் பாதுகாக்க அதை கட்டிப்பிடித்தது மிகவும் சக்தி வாய்ந்த செயல், சுற்றுச்சூழலை மையமாக வைத்து நாட்டிற்கு ஒரு புதிய நனவை அச்செயல் கொண்டு வந்தது. இவை மரச்சுரங்கங்கள் அல்ல, இவை நமது மண், நீர், சுவாசத்தின் ஆதாரங்கள் என்று பொறுப்பற்ற காடழிப்பைப் எதிர்த்து வாதாடினர் பெண் ஆர்வலர்கள். இந்த இயக்கம் 1973 இல் இமயமலையில் உள்ள தொலைதூர கிராமமான ரெனியில் உருவானது, மேலும் உலகெங்கிலும் பல எதிர்கால சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்களுக்கு ஒரு முன்னோடியாக மாறியது.

பயங்கரமான வெப்ப அலை, 2013 கேதார்நாத் பேரழிவு, சிப்கோ இயக்கம் தொடங்கிய ரேனி கிராமத்தை அழித்த ரிஷி-கங்கா பேரழிவு மற்றும் முன்னெப்போதையும் விட அடிக்கடி நிகழும் பல இயற்கை பேரழிவுகள் ஆகியவை நமது சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சி களில் இன்னும் உத்வேகமாக செயல்பட வேண்டும் என எச்சரிக்கை செய்கிறது. "காலநிலை மாற்றம் என்பது நம் காலத்தின் மிகப்பெரிய நெருக்கடியாகும், அது நாம் அஞ்சியதை விட மிக விரைவாக நடந்துக் கொண்டிருகிறது."

சமீபகாலமாக நோய்கள் அதிகரித்து வருவதை மேற்கோள் காட்டி வந்தனா, அதிக நச்சுத் தன்மையுள்ள விவசாயப் பொருட் களை உற்பத்தி செய்வதன் தாக்கம் புற்றுநோயை உண்டாக்கும்.நாம் நம் மண்ணை மாசுபடுத்தி, நம் விலைமதிப்பற்ற நிலத்தை பாலைவனமாக மாற்றுகிறோம். மற்றொரு ஆபத்து என்ன வென்றால், புதிய வகை விதைகள், தொழில்துறை விவசாயம் மற்றும் அதில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் ஏற்படுத்தும் எதிர்விளை வுகள். ஆனால் நமது பழங்கால ரகங்கள் மிகவும் சிறந்தவை மற்றும்

RI *இயக்குனர் விர்பி ஹொன்கலாவுடன் காலநிலை ஆர்வலர் வந்தனா சிவா (வலது).*

ஜெய்ஸ்ரீ

நன்றாக வளர்பவை. விதைகள் ஒரு இரசாயன நிறுவனத்தின் கண்டு பிடிப்பு அல்ல. விதைகள் பரிணாம வளர்ச்சியின் கதை, நம் முன்னோர்களின் கண்டுபிடிப்பு. நம் நிலம் 200,000 அரிசி வகைகளை உருவாக்கியுள்ளது,'' என்று அவர் சுட்டிக்காட்டினார், மேலும் விவசாய சமூகங்களுக்கு உதவுவதற்காக ரோட்டரியின் கூட்டுறவைப் நாடினார்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் அவர், அது மண்ணின் அனைத்து ஊட்டச் சத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும் என்றார். மண்ணில் சேர்க்கப்படும் கரிமப் பொருட்கள், தண்ணீரைத் தாங்கக்கூடிய மட்கியத்தை உருவாக்குகின்றன. ஒரு சதவீத மட்கியமானது ஒரு ஹெக்டேருக்கு 160,000 லிட்டர் தண்ணீரைத் தாங்கும். உலக மண்ணில் கிட்டத்தட்ட 97 சதவீதம் பாலைவனமாக்கும் விளிம்பில் உள்ளது. நம் முன்னோர்களின் ஞானத்தைப் பயன்படுத்தி அனைத்து இனங்களின் எதிர்கால சந்ததியினரும் வாழக்கூடிய ஒருஉலகை உருவாக்குவோம். நமது கிரகத்தின் ஆரோக்கியம் நமது ஆரோக்கியத்துடன் தொடர்புடையது, அதனால் பூலோகத்திற்கு ஏற்படும் ஒவ்வொரு தீங்கும் நமக்கு நாமே செய்து கொள்ளும் தீங்கு என்றார் வந்தனா.

அமர்வில் குழு விவாதத்தை நடத்திய DGE சந்தீப் அகர்வாலா, கிளாஸ்கோவில் நடைபெற்ற COP26, UN காலநிலை மாற்ற மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள சதுப்புநிலங்களை காப்பாற்றவும் மீட்டெடுக்கவும் RI தலைவர் சேகர் மேத்தாவின் உறுதிப்பாட்டை நினைவு கூர்ந்தார். "இந்த விவாதத்தில் பங்கேற்ற 20க்கும் மேற்பட்ட நாடுகள் ரோட்டரியுடன் இணைந்து செயல்பட ஒப்புக் கொண்டுள்ளன." சதுப்புநிலங்களுக்கு கார்பனை உள்ளடக்குவதில் அதிக ஆற்றல் உள்ளது மற்றும் வளிமண்டலத்தில் இருந்து க்ரீன்ஹவுஸ் வாயுக்களை விரைவாக அகற்ற உதவுகிறது என்று மும்பை சதுப்புநில பாதுகாப்பு பிரிவின் DFO, பேனலிஸ்ட் M ஆதர்ஷ் ரெட்டி கூறினார். நாட்வெஸ்ட் அறக்கட்டளையின் தலைவர் சுனில் N குமார் மற்றும் காலநிலை ஆர்வலர் லிசிப்ரியா கங்குஜம் ஆகியோர் மற்ற பேனலிஸ்ட்களாக இருந்தனர்.■

நடமாடும் கண் பராமரிப்பு

ரோட்டரி செய்திக் குழு

TRF உதவியுடன் நற்பணி

RI இயக்குநர் A S வெங்கடேஷ் சமீபத்தில் ஒடிஷா மாநிலத்தில் உள்ள சம்பல்பூருக்கு வந்திருந்த போது, RC ரூர்கேலா க்வீன்ஸ், RID 3261 இயக்கும் நடமாடும் கண் மருந்தகத்தைத் தொடங்கிவைத்தார். திருஷ்டி என்ற இந்த நடமாடும் மருந்தகம், கண் மருத்துவமனைகள் அருகில் இல்லாத கிராமப்புற மற்றும் பகுதியளவு நகரப்புறங்களில் உள்ள மக்களுடைய வீடுகளுக்கே கண் பராமரிப்பைக் கொண்டு வரும் நோக்கத்துடன் செயல்படுகிறது. இந்த வண்டியில் ஓர் ஆட்டோ ரீஃபேக்டோமீட்டர், கண் அழுத்தத் தைச் சரிபார்க்கும் ஒரு டோனோமீட்டர், மற்ற நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் பன்னாட்டுக் கூட்டாளர், RC புட்வால் சென்ட்ரல், நேபாளம், RID 3292. இதை ஆதரித்தவர்கள் TRF மற்றும் RIDகள் 3012, 3053 மற்றும் 3070.

இது எங்களுடைய முதல் பன்னாட்டு நல்கைத் திட்டம் என்கிறார் சங்கத்தின் தலைவர் ரஷ்மி அக்ரவால். GG பெறுவதில் தங்கள் சங்கத்துக்கு வழிகாட்டிய PDG ரஞ்சித் சிங் சைனி, DRFC தீபக் மேத்தா ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறார்.

கண் பரிசோதனை முகாம்கள் ரூர்கேலா உயர் தொழில்நுட்ப மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையின் ஆதரவுடன் தொடர்ந்து திட்டமிடப்படும்; அறுவைச் சிகிச்சைகள் உள்ளிட்ட அனைத்து சிகிச்சைகளும் இந்த மருத்துவமனையில் சிறு கட்டணத்தில் செய்யப்படும். மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படும். இந்த நடமாடும் மருந்தகத்தைத் தங்கள் சேவைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தும்படி நாங்கள் பிற ரோட்டரி சங்கங்கள், எங்கள் RCCக்களை அழைத்துள்ளோம் என்கிறார் ரஷ்மி.■

ஜெய்ஸ்ரீ

RI இயக்குனர் A S வெங்கடேஷ், சங்கத்தின் ஆலோசகர் அஜய் அகர்வால், DG சுனில் ஃபதக் மற்றும் DGND அகில் மிஷ்ரா, RC ரூர்கேலா க்வின்ஸ் உறுப்பினர்களுடன்.

Paul Harris Challenge Awards

Paul Harris Membership Challenge

Platinum		
Ranking	**District Governor**	**Members**
1	Ajay Madan (3080)	434
2	Prabhakar K (3150)	323
3	Ashok Kumar Mangal (3054)	307
4	Sridhar Jagannathan (3232)	302
5	Mahmood Fazal (3190)	255

Clockwise from Above: RID 3080 DG Ajay Madan (L) gets award from RI President Shekhar Mehta and RI Director Mahesh Kotbagi in the presence of PDGs Manmohan Singh and Praveen Goyal; RID 3160 DG Thirupathi Naidu (4th from L) being felicitated by President Mehta and RID Kotbagi in the presence of PRID Kamal Sanghvi, PDGs K Sreerama Murthy (2nd from L), Chinnapa Reddy (3rd from R) and DGE Vommina Satish Babu (2nd from R); RID 3262 DG Santanu Kumar Pani and Jharana being felicitated; RID 3060 DG Santosh Pradhan and Sunetra being felicitated by President Mehta in the presence of PDG Ravee Dhotre.

Gold

District Governor	Members
K Srinivasan (3211)	232
Col Mahendra Mishra (3040)	227
W M Nirmal Raghavan (3231)	224
Sanjay Malviya (3053)	219
Rama Rao M (3020)	219
Santosh S Pradhan (3060)	213
Gaurishkumar Dhond (3170)	212

Silver

District Governor	Members
Thirupathi Vykuntam Naidu (3160)	197
S Balaji (2981)	189
Anup Mittal (3011)	186
Sunil D Phatak (3261)	165
Dr Upinder Singh Ghai (3070)	161

Grow Rotary Silver Plaque

RI Districts	3070, 3170, 3204, 3262

Grow Rotary Gold Plaque

RI Districts	3053, 3080, 3291, 3040

Clockwise from Above: President Mehta felicitates RID 3204 DG Dr Rajesh Subash and Dr Deeshma; PRID Sanghvi felicitates RID 3070 DG Dr U S Ghai in the presence of President Mehta; RID 3054 DG Ashok Mangal and Pushpa receive the award from President Mehta. PDG Bina Desai is on the right; RID 3232 DG J Sridhar and DGN Ravi Raman receive the district award; President Mehta felicitates RID 3150 DG K Prabhakar (L).

காஷ்மீர் மருத்துவ முகாம் நடத்திய 2,500 அறுவை சிகிச்சைகள்

Dr ராஜீவ் ப்ரதான்

2012ம் ஆண்டு, PRIP ராஜேந்திர சாபூ, ஜம்முவில் உள்ள உதம்பூரில் ஒரு மருத்துவ முகாமைத் தொடங்கினார், அதற்கு நான் திட்டத் தலைவராக இருந்தேன். அப்போதைய துணை கமிஷனர் பாண்டுரங் போலே எங்கள் திட்டத்தை ஆதரித்தார். ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு, மகாராஷ்டிர மாநிலம் லத்தூரின் மாவட்ட ஆட்சியரான போலே மீண்டும் என்னை அழைத்து, உத்கிர் தாலுக்காவில் மருத்துவ முகாம் ஒன்றை ஏற்பாடு செய்ய ரோட்டரிக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்த முகாம் உலகளாவிய மானியம் இல்லாமல் ஒரு திட்டத்தைச் செய்வதற்கான புதிய மாதிரியைத் உருவாக்கியது.

இப்போது ஆகஸ்ட் 2021ல், காஷ்மீர் பிரிவு ஆணையராக இருந்த போலேவிடமிருந்து எனக்கு மற்றொரு அழைப்பு வந்தது. காஷ்மீரில் ஒரு மாபெரும் மருத்துவ முகாமை நடத்த ரோட்டரியின் உதவியை அவர் நாடினார். நாங்கள் திட்டமிட ஆரம்பித்தோம். PDG Dr கிரிஷ் குணே, RID 3131, ஒரு அறுவை சிகிச்சை நிபுணரும், பல மருத்துவப்பணிகளில் அனுபவமுள்ளவருமானவர், திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், கண் அறுவை சிகிச்சை நிபுணரான Dr மாதவ் அம்பேகர் இணை ஒருங் கிணைப்பாளராகவும் இருந்தனர். மருத்துவ முகாமிற்கு ரோட்டரியுடன் ஒருங்கிணைக்க முனைய நபராக Dr J தலத்தை நியமித்தனர்.

Dr அம்பேகர், Dr ரூபாலி அஷ்டபுத்ரே மற்றும் Dr அனில் சாகரே ஆகியோர் செப்டம்பரில் காஷ்மீர் சென்று அரசு மருத்துவ மனைகளில் மருத்துவ உபகரணங் கள், அறுவை சிகிச்சை அரங்குகள் குறித்து ஆய்வு செய்தனர். அவர் களின் அறிக்கையின் அடிப்படை யில் நாங்கள் எங்கள் பணியை தொடங்கினோம், திட்டத் தேதிகள் (மே 11–18) என நிர்ணயிக்கப்பட்டன.

நான்கு இடங்களில் முகாம்கள்

பாரமுல்லா, சோபூர், குப்வாரா மற்றும் கந்தர்பால் ஆகிய நான்கு இடங்களில் அறுவை சிகிச்சை முகாம் செய்ய யூனியன் பிரதேச

மயக்க மருந்து நிபுணர் Dr சேகர் கோக்னுல்கர் (வலது) மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் Dr அபய் ஷெட்டே (இடதிலிருந்து 2வது), உள்ளூர் மருத்துவர்களுடன்.

அரசு முடிவு செய்த நிலையில், வாராந்திர ஜூம் கூட்டங்கள் மூலம் நாங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். முகாமின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக Dr தலாத் மற்றும் அவரது குழுவினர் பல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டனர். எங்களுக்கு அதிகமான அறுவை சிகிச்சை அரங்கங்கள், மேஜைகள் மற்றும் உபகரணங்கள் தேவைப்பட்டன. இறுதியாக, 14 அறுவை சிகிச்சை மேஜைகள் கிடைக்கப்பெற்றன மற்றும் முக்கியமான உபகரணங்கள், நுண்ணோக்கிகள் மற்ற மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்டன; மற்ற வருவாய் மாவட்டங்களில் இருந்து சுமார் 150 அறுவை சிகிச்சை மற்றும் நர்சிங் ஊழியர்கள் அழைத்து வரப்பட்டனர். அறுவை சிகிச்சைக்கு முந்தைய மற்றும் பிந்தைய மருந்துகளும் வாங்கப் பட்டன. ஆஷா பணியாளர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் காஷ்மீர் முழுவதும் 9,000 நோயாளிகளை அறுவை சிகிச்சைக்காக அடையாளம் கண்டனர். DGs ஓம் பிரகாஷ் மோதிபவாலே (3132), பங்கஜ் ஷா (3131), Dr U S காய் (3070) மற்றும் சந்தோஷ் பிரதான் (3060) ஆகியோர் முகாமுக்கு நிதியுதவி அளித்தனர்.

ஒரு மாபெரும் ரோட்டரி குழு

காஷ்மீர் முழுவதும் நான்கு முகாம்களில் 42 மருத்துவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலோர் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் மருத்துவப் பணிபுரிந்தவர்கள். PDGs ஹரிஷ் மோத்வானி, ரவீந்திர சாலுங்கே, சுபோத் ஜோஷி மற்றும் DGN ஸ்வாதி ஹெர்கல் ஆகியோர் முகாமில் தன்னார்வத் தொண்டு செய்தனர்.

காஷ்மீரில் பாதுகாப்பு மற்றும் நிலைமை பற்றிய கருத்து ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்தது. ஒரு சில மருத்துவர்கள் வரமறுத்தனர். ஆனால் அதிர்ஷ்டவசமாக, புதிய குழு உறுப்பினர்களை விரைவாக நாங்கள் மாற்ற முடிந்தது. காஷ்மீரின் நிலைமை மேலளவில் எங்களுக்கு சாதாரணமாகத் தோன்றியது. அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்ததாலும், அரசு விருந்தினர் மாளிகையில் தங்கியதாலும், Dr மற்றும் ரோட்டேரியன்கள் அச்சமின்றி இருந்தனர். வந்திருந்த மருத்துவர் களுடன் அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர் களும் பணியாற்றினர்.

தொலைதூர பகுதிகளில் இருந்து வரும் நோயாளிகள் பலருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மகளிர் மருத்துவர் Dr அனில் சாகரே, அறுவை சிகிச்சை கள் செய்தது மட்டுமில்லாமல், உள்ளூர் இளநிலை அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு பயிற்சியும் அளித்தார்.

மனதிற்கு ஒரு புத்துணர்வு

ஒரு சிக்கலான அறுவை சிகிச்சை -- லேப்ராஸ்கோபிக் கோலிசி ஸ்டெக்டோமி -- ஒரு இளம் பெண்ணுக்கு செய்யப்பட்டது. பாரமுல்லா மருத்துவக் கல்லூரியின் மூத்த அறுவை சிகிச்சை நிபுணருக்குப் அந்த அறுவை சிகிச்சை கடினமாக இருந்தது. Dr குணே தனது முதல் அறுவை சிகிச்சையை முடித்துவிட்டு விரைவில் இதில் சேர்ந்தார். ஆனால் அவளுக்கு பித்தப்பையில் பிறவி குறைபாடு இருப்பதை உணர்ந்தார். மதியம் தொடங்கிய அறுவை சிகிச்சை மாலை 4 மணிக்கு முடிந்தது. அதன் வெற்றி பற்றிய செய்தி எல்லா இடங்களிலும் பரவ, ஒட்டுமொத்த அணியினரின் மன உறுதியை அது உயர்த்தியது.

லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா சோபோரில் மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார். 2022 ஆகஸ்ட்-செப்டம்பரில் தெற்கு காஷ்மீரில் இதேபோன்ற திட்டத்தை செய்யுமாறு அவர் எங்களை வலியுறுத்தினார், மேலும் நிர்வாகம் அனைத்து ஆதரவையும் வழங்கும் என்று உறுதியளித்தார்.

குடலிறக்கம், லேப்ராஸ்கோப்பி மூலம் பித்தப்பைகளை அகற்றுதல், மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள், கருப்பை நீக்கம், கண்புரை அகற்றம் உள்ளிட்ட சிக்கலான அறுவை சிகிச்சைகளை நாங்கள் செய்தோம். அதிகமான பதிவுகளைத் தொடர்ந்து முகாமை ஜூன் 2 ஆம் தேதி வரை மாவட்ட ஆணையர் போலே நீட்டித்து, 'ரோட்டரி முகாம்' முடிந்த

ஃபைசா பானோ பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையிற்கு பின்.

பின்னரும் அறுவை சிகிச்சையைத் தொடருமாறு அனைத்து மருத்துவ மனைகளுக்கும் அறிவுறுத்தினார்.

முகாமின் போது DG Dr காய் பாரமுல்லா மற்றும் லேவில் ஒரு புதிய சங்கத்தை பட்டயப்படுத்தினார். ரோட்டரியில் சேர உள்ளூர் மருத்துவர் களிடையே மிகுந்த ஆர்வம் இருந்தது. தொலைதூர கிராமங்களில் இருந்து ஏராளமான பெண்கள் ட்யூபெக்டோமிக்காக அணிவகுத்து நிற்பதைக் கண்டு நான் வியந்தேன்.

முகாமில் சுமார் 2,500 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஆப்பிரிக்காவிலோ அல்லது இந்தியாவிலோ கடந்த காலத்தில் நான் பங்கேற்ற 30-க்கும் மேற்பட்ட மருத்துவப் பணி திட்டங்களில் இவ்வளவு பெரிய வெற்றிக் கதையை நான் பார்த்ததில்லை. அதிக எண்ணிக்கையிலான அறுவை சிகிச்சைகள், மருத்துவப் பொருட்கள், உபகரணங்கள், நோயாளிகள் மற்றும் மருத்துவர்களுக்கான உணவு மற்றும் தங்கும் செலவுகள், போக்குவரத்து மற்றும் நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்களின் நீண்ட நேர வேலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால், திட்டத்தின் ஒட்டுமொத்த மதிப்பு எளிதாக ரூ.50 கோடியாக இருக்கும்.■

கல்லூரிகளில் கணினிகளை நிறுவிய கர்நாடக ரோட்டரியன்கள்

ரோட்டரி செய்திக் குழு

2021ன் தொடக்கத்தில், கர்நாடகக் கல்வித் துறை அந்த மாநிலத்தில் உள்ள ரோட்டரியன்களை அணுகி, காக்னிசன்ட் கொடையளிக்கும் 8,000 மேசைக் கணினிகளை நிறுவக் கேட்டது. "இந்தப் பணி எளிமையானது இல்லை. இதில் பலன் பெறும் 500க்கும் மேற்பட்ட கல்லூரிகள் கர்நாடக மாநிலம் முழுவதும் பரந்து விரிந்திருந்தன. அதனால், இதை நிறைவேற்றுவது சிக்கலான விஷயம். பல கல்லூரிகளில் அதுவரை முறையான கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. மென்பொருள் உரிமங்களைப் பெறுவது, ஒவ்வொரு மேசைக் கணினியையும் பரிசோதிப்பது, அவற்றைத் தனித்தனிக் கல்லூரிகளுக்கு அனுப்புவது ஆகிய பணிகள் மலைப்பாக இருந்தன. இந்தப் பணி மிகப் பெரியது என அனைவரும் உணர்ந்தோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதி, மக்கள், நல்ல திட்ட மேலாண்மைச் செயல்முறைகள் தேவைப்பட்டன" என்கிறார் PDG ராஜேந்திர ராய்.

ஆனால், கடினமான இந்தப் பணிக்கு நல்ல பரிசும் உண்டு: மூன்றே மாதத்துக்குள் இந்த மேசைக் கணினிகளை வெற்றிகரமாக நிறுவிச் சாதனை படைத்தால், இன்ஃபோசிஸ் மேலும் 12,000 கணினிகளை வழங்கும்.

இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்ட போது, RID 3190ன் மாவட்டத் தலைவர்கள் உடனடியாக அதை ஏற்றுக்கொண்டார்கள், உடனடியாக, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ராயுடன் மோகன் ராமநாதன், ஜெயராமன் சுப்ரமணியம் ஆகிய இரண்டு மூத்த ரோட்டரியன்களைக் கொண்ட ஒரு திட்டக் குழு அமைக்கப்பட்டது. மற்ற நான்கு ரோட்டரி மாவட்டங்களும் உடனடியாக இதில் இணைந்தன, அந்தந்த மாவட்டங்களின் DLCCக்கள் தலைவர்களாக அடையாளம் காணப்பட்டார்கள்.

இந்தத் திட்டத்துக்கு சஹகாரிதா என்று பெயர் சூட்டப்பட்டது. இதுவரை பாலிடெக்னிக்குகள் உள்ளிட்ட 500 கல்லூரிகளில் 27,500க்கும் மேற்பட்ட கணினிகளை (காக்னிசன்ட் வழங்கிய 12,500 மற்றும் இன்ஃபோசிஸ் வழங்கிய 15,000) இது நிறுவியுள்ளது. இவை தூக்கி எறியப்பட்ட, பழைய கணினிகள் இல்லை. இவற்றில் பெரும்பாலானவற்றில் இன்டெல் கோர் i3, சிலவற்றில் i5, சிலவற்றில் i7 செயலிகள் கூட உள்ளன, 8 GB RAM, 500 GBவன் தகடுச் சேமிப்பகத் தைக் கொண்டுள்ளன

PDG ராஜேந்திர ராயுடன் (நடுவில்) ஜெயராமன் சுப்ரமணியம், உயர்கல்வித்துறை அமைச்சர் அஸ்வத நாராயணன், மோகன் ராமநாதன், கிஷோர் ஜாகிர்தார், நாராயணப் பிரசாத் மற்றும் கர்நாடகா கல்லூரி கல்வி ஆணையர் ப்ரதீப்.

என்கிறார் சுப்ரமணியம். இவை தொடக்கத்தில் நிரலாளர்களால் பயன்படுத்தப்பட்டன. கோவிட் முடக்கக் காலகட்டத்தில் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கு இவர்களுக்கு மாற்று மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. இவை உயர் திறன் கொண்ட, செயல்படக்கூடிய கணினிகள். பொதுவாக, இந்தக் கணினிகள் ஒவ்வொன்றின் விலை (மென்பொருள் உரிமம் உள்பட) ₹30,000க்கு மேல் இருக்கும்.

இவற்றைச் சந்தை மதிப்பில் அமைத்தால் இந்தக் கணினி ஆய்வகங்களுக்கு ₹70 கோடிக்கு மேல் செலவாகியிருக்கும் என்று அவர் தொடர்ந்து கூறினார். RID 3190 ரோட்டரியன்கள் பள்ளிகளுக்குப் புதுப்பிக்கப்பட்ட கணினிகளை வழங்கும் தங்களுடைய திட்டத்தின் வழியாக மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் நல்ல தொடர்பில் இருந்தார்கள். அவர்கள் மென்பொருள் உரிமங்களை நியாயமான தொகையில் பெற்றுத்தந்தார்கள். இதனால் நிறையப் பணம் சேமிக்கப்பட்டது. 3160, 3170, 3181, 3182 மற்றும் 3190 மாவட்டங்களும் இந்தத் திட்டத்தில் பங்கேற்றன.

கணினிகள் கல்லூரி ஆய்வகம் ஒன்றில் நிறுவப்படுகின்றன.

ரோட்டராக்டர்களுடன், ஹூப்ளி தேஷ்பாண்டெ அறக் கட்டளையும் ரோட்டரியுடன் கை கோத்து இந்தத் திட்டத்துக்கு உதவியது. “விரைவில் நாங்கள் இந்தக் கல்லூரிகளில் பல ரோட்டராக்ட் சங்கங்களை அமைப்போம். இன்ஃபோசிஸ் 5,000க்கும் மேற்பட்ட பயிற்சிகளைக் கொண்ட தங்களுடைய கற்றல் பொருட்களை ரோட்டரி சின்னத்துடன் இந்தக் கல்லூரிகள் அனைத்துக்கும் வழங்குகிறது” என்று தொடர்ந்து கூறினார் சுப்ரமணியம்.

இன்ஃபோசிஸ், காக்னிசன்ட் போன்ற தொழில்நுட்பப் பெரு நிறுவனங்களுடன் ரோட்டரி இணைந்து பணியாற்றுவதைப் பாராட்டிய PRID கமல் சங்வி, இந்தத் திட்டத்தின் மூலம் ரோட்டரி 500க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களில் கால் பதித்துள்ளது என்றார்.■

மாணவிகளுக்கு சைக்கிள்களை பரிசாக வழங்கியது RID 3012

பெண்கள் பள்ளிக்கு வசதியாகப் பயணிக்க உதவும் சைக்கிள் விநியோகத் திட்டத்தை RID 3012 ஏற்பாடு செய்தது. காஜியாபாத்தில் உள்ள JKG இன்டர்நேஷனல் பள்ளியின் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 305 மாணவிகளுக்கு ரோட்டரி சங்கங்கள் சைக்கிள்களை வழங்கின. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணை யமைச்சரான, முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் V K சிங், DG அசோக் அகர்வால் முன்னிலையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

DG அகர்வால் முன்னதாக இந்து பெண்கள் இடைக் கல்லூரியின் மூன்று பள்ளிகளைச் சேர்ந்த 124 மாணவிகளுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளார்.■

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் Gen V K சிங் பெண்களுக்கு சைக்கிள் வழங்கும் விழாவில்.

DG Dr ராஜேந்திர அகர்வால், RC பாம்பே பான்ட்ரா தலைவர் ராமு வேதராமன், செயலாளர் அப்பாஸ் ஷாஹிவாலா மற்றும் ரோட்டராக்டர்களுடன் தலசீமியா விழிப்புணர்வு முகாமில்.

மும்பையில் இணைந்து பணியாற்றும் ரோட்டரி-ரோட்டராக்ட்

V முத்துகுமரன்

கோவிடால் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் மூடியிருந்த மும்பை கல்லூரிகள் மீண்டும் ஆற்றல், சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கியிருக்கின்றன. இந்நிலையில் RC பாம்பே பாந்த்ரா, RID 3141, தன்னுடைய ரோட்டராக்ட் ஆற்றலை விரிவாக்குவதற்குப் புதிய வாய்ப்புகளை நன்கு பயன் படுத்திக்கொள்கிறது. இந்தச் சங்கம் போதைப்பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துதல் பற்றிப் பாந்த்ரா மேற்கில் உள்ள RD தேசியக் கல்லூரியில் நடத்திய ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அதன் முதல்வர் Dr நேஹா ஜக்தியானி, ஊழியர்கள் 2010ல் மூடப்பட்ட தங்களுடைய ரோட்டராக்ட் சங்கத்தை மீண்டும் தொடங்க விரும்பினார்கள். ‘‘அப்போது சில காரணங்களால் அவர்களால் அதைத் தொடர்ந்து நடத்தமுடியவில்லை’’ என்றார் சங்கத் தலைவர் ராமு S வேதராமன். ‘‘எங்கள் வழங்கலைப் பார்த்தபிறகு, கல்லூரி ரோட்டராக்ட் செயல்பாடுகளை மீண்டும் தொடங்க விரும்பியது. DG Dr ராஜேந்திர அகர்வால் வருகையின்போது இந்தக் கல்லூரியில் தலசீமியா விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. அதன்பிறகு, நாங்கள் ஒரு தலைவர், ஒரு ரோட்டராக்ட் வாரியத்தைத் தேர்ந்தெடுத்தோம், அதைத் தொடர்ந்து, நாங்கள் ஜூன் மாதத்தில் “RAC RD தேசியக் கல்லூரி”யை மீண்டும் தொடங்கினோம்.’’

40 உறுப்பினர்களுடன் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கும் “இந்த ரோட்டரி சங்கம் அடுத்த சில ஆண்டுகளில் 600 புதிய ரோட்டராக்டர்களைச் சேர்க்கும் பெரிய திட்டத்தை வகுத்துள்ளது. இந்தக் கல்லூரியில் 6,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கலை, அறிவியல், பொறியியல் பிரிவுகளில் பலவிதமான பாடங்கள் வழங்கப்படுவதால், இது சாத்தியம்தான்’’ என்கிறார் வேதராமன். ஒரு நாள் தலசீமியா விழிப்புணர்வு முகாமின்போது சுமார் 100 மாணவர்கள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

RAC தந்தை அக்னெல் பொறியியல் கல்லூரி என்ற இன்னொரு சங்கம் இதயத்தை நன்கு வைத்துக்கொள்வது, நலமான வாழ்க்கை முறையைப்பற்றிய

நுண்ணுணர்வைப் பொது மக்களிடையில் உருவாக்குவதற்காக, அனைத்து வயதுக் குழுவினருக்கும் 22 கிமீ மாரத்தானை நடத்திவந்தது. "நாங்கள் ஆதரிக்கும் இந்தச் சங்கம் எட்டு ஆண்டுகளாக இயங்கிவருகிறது, பாந்த்ரா பேன்ட்ஸ்டாண்ட் பகுதியில் பிற NGOக்களுடைய ஆதரவுடன் இந்த மாரத்தானை நடத்துகிறது. சென்ற ஆண்டு (மார்ச் 2021) மாரத்தான் கலவைச் செயல்முறையில் நடத்தப்பட்டது, இதற்கு 600 பேர் இணையத்தில் பதிவு செய்தார்கள்'' என்கிறார் சங்கச் செயலாளர், இளைஞர் சேவைகள் இயக்குநர் அப்பாஸ் ஷாஹிவாலா.

பங்கேற்பாளர்கள் தங்களுடைய ஓட்டத்தைப் பதிவுசெய்வதற்குத் ஸ்ட்ராவா, நைகி செயலிகளிலும் பிற சமூக ஊடகத் தளங்களிலும் தரவேற்றினார்கள். "இந்த முறை இந்த நிகழ்ச்சி ஐந்தாவது பதிப்பாக நடைபெறுகிறது. கல்லூரிகள் திறக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை மீண்டும் தொடங்கிவிட்டதால், இதை நேரடி மாரத்தானாக நடத்துவதற்கு ஆவன செய்யப்படுகிறது'' என்றார் RAC தந்தை அக்னெல் பொறியியல் கல்லூரி துணைத் தலைவர் ரோகித் நாயர்.

சில கள நிகழ்ச்சிகள், மற்றும் கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சி ஆகியவை இந்தப் பொறியியல் கல்லூரியில் ரோட்டராக்டர்களிடையில் ஒரு புதிய ஆர்வ அலையைத் தூண்டியுள்ளன. "நாங்கள் 200 பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களை ஒரு நாள் பயணமாகக் கொத்தலிகட் கோட்டைக்கு அழைத்து சென்றோம். அது எங்களுக்கும் ஒரு மிகச் சிறந்த அனுபவமாக அமைந்தது. இரண்டாவதாக, Change is us என்ற NGO உடன் இணைந்து, ரோட்டராக்டர்கள் உள்ளிட்ட 170 தன்னார்வலர்கள் உதவியுடன் கிர்காவ்ன் சௌபாட்டி கடற்கரையிலிருந்து சுமார் 350 கிலோ எடையுள்ள குப்பையை நாங்கள் அகற்றினோம் என்கிறார் நாயர்.

சங்க செயலாளர் ஷாஹிவாலா, மருத்துவ சேவை இயக்குனர் ரத்தன் முகி மற்றும் Rtn இஷ்ரத் சையது போர்ஜஸ் ஹோம் உறுப்பினர் ஒருவருக்கு செயற்கை கால் அளித்தனர்.

இவர்கள் மாறுபட்ட ஒரு நிகழ்ச்சியையும் நடத்தினார்கள்: புகழ் பெற்ற நகைச்சுவையாளர் ரௌனக் ரஜனி நடத்திய நகைச்சுவை நிகழ்ச்சியில் 200 பேர் கலந்துகொண்டார்கள். "ஒரு சந்தையும் நடத்தப்பட்டது. எங்கள் கல்லூரி அரங்கத்தில் ராப் போன்ற பல்வேறு வகைக் கலைஞர்கள் நிகழ்ச்சி நடத்தினார்கள், இதற்குச் சுமார் 180 பேர் பதிவுசெய்து கொண்டார்கள்'' என்கிறார் அவர்.

செயற்கைக் கை, கால்கள்

ரோட்டராக்ட் சங்கங்கள் இவ்வாறு செயல்படுகையில், அவற்றின் தாய் ரோட்டரி சங்கம் மேலும் ரோட்டராக்டர்களைச் சேர்க்கவும், "வளர்ச்சிக்குப் பெரிய சாத்தியம் உள்ள'' கல்லூரி வளாகங்களில் அவர்களுடைய செயல்பாடுகளை விரிவாக்கவும் உதவும் என்கிறார் வேதராமன். 1990ல் பதிவு செய்யப்பட்ட இந்தச் சங்கத்தில் 36 உறுப்பினர்கள் உள்ளார்கள், எர்னெஸ்ட் போர்கெஸ் நினைவு இல்லத்தில், புற்றுநோயிலிருந்து பிழைத்த சுமார் 15 பேருக்குச் செயற்கைக் கை, கால்களை ஆண்டு தோறும் கொடையளித்துப் புகழ் பெற்றுள்ள சங்கம் இது. டாடா நினைவு மருத்துவமனையைச் சேர்ந்த நோயாளிகள் வலிக் குறைப்புப் பராமரிப்புக்காக இங்கு சேர்க்கப் படுகிறார்கள்'' என்றார் அவர். "நாங்கள் பல காலம் முன்பாக போர்கெஸ் இல்லத்துக்கு ரூ.5 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்களைப் பரிசளித்துள்ளோம். இப்போது, ஒவ்வோர் ஆண்டும் செயற்கைக் கை, கால் உருவாக்கத்தை ஆதரிக்கிறோம்'' என்கிறார் ஷாஹிவாலா. இந்தச் சங்கம் இதுபோன்ற செயற்கைக் கை, கால்களைச் செய்வதற்கு ஆண்டுதோறும் ரூ.1.2 லட்சத்தை ஒதுக்குகிறது.

கடந்த பல ஆண்டுகளில் இந்தச் சங்கம் சேவைத் திட்டங்களுக்காக ஐந்து மாவட்ட நல்கைகளைப் பெற்றுள்ளது, "பால்கர் மாவட்டத்தில் 30 அரசுப் பள்ளிகளில் நீர் வடிகட்டல் அமைப்புகளை நிறுவுவதற்காக $40,000 மதிப்புள்ள முதல் பன்னாட்டு நல்கைக்கு நாங்கள் விண்ணப்பித்துள்ளோம்.'' என்றார் வேதராமன்.■

புதிய பொலிவு பெற்ற கரூர் நகராட்சிப் பள்ளி

ரோட்டரி செய்திக் குழு

கரூரில் உள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் CSR மற்றும் பன்னாட்டு நல்கை ஆதரவுடன் ஒரு புதிய தொகுதியைக் கட்டியுள்ளது RC கரூர் டெக்ஸ்சிட்டி, RID 3000. இதை மாநில மின்சாரத் துறை அமைச்சர் V செந்தில்பாலாஜி சமீபத்தில் தொடங்கிவைத்தார்.

இந்தப் பள்ளி 1880ல் நடுநிலைப் பள்ளியாகத் தொடங்கப்பட்டது, 1978ல் உயர்நிலை வகுப்புகள் அறிமுகப் படுத்தப்பட்டன. “1980களில் இங்கு 4,000 மாணவர்கள் படித்தார்கள், அது இந்த நகரின் முதன்மைப் பள்ளிகளில் ஒன்றாக மலர்ந்தது. 2000ம் ஆண்டுக்குப் பிறகு, மாணவர்கள் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துவிட்டது. காரணம், இங்கு உள்ள உள்கட்டமைப்பு பழையதாகி விட்டதுதான்'' என்கிறார் இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர், இந்தப் பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் ஃஜான். இந்தப் பள்ளியில் படித்த புகழ் பெற்ற ஆளுமைகள் சிலரையும் அவர் குறிப்பிடுகிறார்: PRID C பாஸ்கர், அண்ணா பல்கலைக்கழகம் முன்னாள் துணை வேந்தர் V C குழந்தைசாமி.

2019ல், இப்பள்ளியை மேம்படுத்த உதவும் படி அப்போதைய சங்கத் தலைவர் A J சூரியநாராயணா அவர்களைக் கேட்டுக் கொண்டார் ஜான். உடனடியாக, A J சூரிய நாராயணா சங்க உறுப்பினர்களுடன் பேசி னார், இந்தச் சங்கத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடும்வகையில் இந்தத் திட்டத்தை நடத்த ஒப்புக் கொண்டார். இதற்காக PDG P கோபாலகிருஷ்ணன், முன்னாள் தலைவர்கள் ஃஜான், V ரமேஷ், L சுப்பையா, N ஆனந்தன், S இளமதி ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

இடதிலிருந்து: *சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் L ஜான், A J சூரிய நாராயண, PRID C பாஸ்கர் மற்றும் சங்கத் தலைவர் P பிரபாகரன் புதுப்பிக்கப்பட்ட பள்ளி வளாகத்தில்.*

ஜூன் 2020ல் PRID பாஸ்கர் முன்னிலையில் புதிய தொகுதிக்கான அடிக்கல் நாட்டப் பட்டது கரூர் வைஸ்யா வங்கி வகுப்பறைத் தொகுதியைக் கட்டுவதற்கு ரூ.2.06 கோடி கொடையளித்தது, அத்துடன், TRFக்கு ரூ.24 லட்சம் வழங்கியது. அறிவார்ந்த வகுப்பு வசதிகளை அமைப்பதற்கு, இப்போதுள்ள கட்டடம் மற்றும் நிலப்பரப்பைப் புதுப்பிப்பதற்கு, வகுப்பறை அமர்பொருட்கள், CCTV கேமெராக்கள், ஒரு ஜென்செட் வழங்குவதற்கு RC ஃப்ரெஷ்வாட்டர் பே, RID 9455, ஆஸ்திரேலியா ரூ 71.61 லட்சம் வழங்கியது. இதனால் மொத்தத் திட்டச் செலவு ரூ.2,77,81,610 ஆகியது.

சேதமடைந்த ஒரு பழைய பகுதியை இடித்துவிட்டுக் கட்டப்பட்ட இந்தப் புதிய KVB ரோட்டரி தொகுதியில் மொத்தம் 1,490 சதுர மீட்டர் பரப்பில் கட்டப் பட்ட இரண்டு தளங்கள் உள்ளன. இங்கு 16 வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள், ஓர் ஊழியர் அறை, மாணவர்கள், ஊழியர்கள், மாற்றுத் திறனாளிகளுக்குத் தனித்தனிக் கழிப்பறைத் தொகுதிகள், 1,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு தண்ணீர்த் தொட்டி, ஒரு தண்ணீர்ப் பம்பு ஆகியவை உள்ளன. 1909ல் வடிவமைக்கப்பட்ட மூலக் கட்டடத்தின் கட்டமைப்பு முகப்பு அப்படியே பாதுகாக்கப்பட்டது.

“இப்போது இந்தப் பள்ளி எந்த ஒரு தனியார் பள்ளிக்கும் இணையாக உள்ளது, வெவ்வேறு பொருளாதாரப் பின்னணி கொண்ட மாணவர்களுடைய கல்வித் தேவைகளை ஈடு செய்ய இதனால் இயலும்'' என்று சிரிக்கிறார் சங்கத் தலைவர் P பிரபாகரன்.■

சங்கங்களின் திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

மும்பை மருத்துவமனையில் அதி நவீன OT

DG *ராஜேந்திர அகர்வால் மருத்துவமனை அறுவை சிகிச்சை வளாகத்தை துவக்கி வைக்கிறார்.*

மும்பையில் உள்ள பிரம்மகுமாரிஸ்' பன்னாட்டு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தால் நிர்வகிக்கப்படுகிற BSES MG மருத்துவமனையின் தொகுதி அறுவைச் சிகிச்சை அரங்க வளாகத்தைப் புதுப்பிக்க RC பாம்பே ஏர்போர்ட், RID 3141, உதவியுள்ளது. இந்தப் புதிய வளாகத்தில் நான்கு அதி நவீன அறுவைச் சிகிச்சை அரங்கங்கள் உள்ளன.

சென்னையில் கலவைப் பார்வை மையம்

PDG S *முத்துப்பழனியப்பன் மற்றும் அவர் மனைவி கமலா 'Orange Hybrid Vision Centre'ல் சங்க உறுப்பினர்களுடன்.*

RC கோல்ட் கோஸ்ட், RID 9640, ஆஸ்திரேலியாவை GG கூட்டாளராகக் கொண்டு, சென்னைக்கு அருகில் கூடுவாஞ்சேரியில் பம்மல் சங்கரா கண் மருத்துவ மனையுடன் இணைந்து 60,000 பேருக்குச் சேவை புரிகிற ஒரு கலவைப் பார்வை மையத்தைத் தன் 'Orange' திட்டத்தின் கீழ் தொடங்கியுள்ளது RC சென்னை ஹால்மார்க், RID 3232.

கிராமத்தில் ரோட்டரி நலப் பராமரிப்பு மையம்

ரோட்டரி நல பராமரிப்பு மையத்தை DG *அஷோக் அகர்வால் (வலது) மற்றும்* MLA M L *படோலி துவக்கி வைக்கின்றனர்.*

சோனிபட் அருகில் உள்ள பத்கல்சா கிராமயத்தில் ரூ.16 லட்சம் செலவில் கழிப்பறைகளுடன் ரோட்டரி நலப் பராமரிப்பு மையத்தைக் கட்டிக் கிராம அங்கன்வாடியைப் புதுப்பித்துள்ளது RC குன்ட்லி, RID 3012.

ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துதல்

NH4 *மீது ராணிப்பேட்டையில் உள்ள மேம்பாலத்தை அழகுப்படுத்தியுள்ளது* RID 3231.

NH4ல் ராணிப்பேட்டைக்கு அருகில் நாள் தோறும் சுமார் 14,000 வண்டிகள் கடந்து செல்கிற போக்குவரத்துப் பாலம் ஒன்றின் சுவர்களில் மாநிலப் பண்பாட்டுச் சின்னங்களை ரோட்டரி சின்னத்துடன், ரூ.1கோடி செலவில் வரைந்துள்ளது RID 3231. "இது ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துகிறது" என்கிறார் DG நிர்மல் ராகவன்.

புனேவில் வலிப்பு நோய் அறுவை சிகிச்சைகளுக்கு ரோட்டரி ஆதரவு

ஜெய்ஸ்ரீ

21 வயது திருமணமான பெண்ணுக்கு (கோரிக்கையின் பேரில் பெயர் குறிப்பிடப்படவில்லை) அடிக்கடி வலிப்புத்தாக்கங்களால் ஏற்பட்டதால் விரக்தியடைந்த அவரது கணவரின் குடும்பத்தினர் மஹாராஷ்டிராவின் ஒஸ்மானாபாத்தில் உள்ள அவரது பெற்றோர் வீட்டிற்கு அப்பெண்ணை திருப்பி அனுப்பினர். அவர் வலிப்பு நோயால் அவதிப்பட்டு கொண்டிருந்தார். ஆனால் பின்னடைவு இருந்த போதிலும் இன்று அவரது தந்தை மகிழ்ச்சியான மனிதராக இருக்கிறார், ஏனென்றால் அந்த பெண்ணுக்கு மூளை அறுவை சிகிச்சை செய்ய அவர் முற்றிலும் குணமடைந்தார், இது அவரது சக்திக்கு அப்பாற்பட்டது. "இனி வலிப்புத்தாக்கங்கள் இல்லை, மேலும் வலிப்பு எதிர்ப்பு மருந்துகள் தேவையில்லை. என் மகள் இப்போது பயமின்றி இயல்பான, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும், மேலும் அவள் ஒரு வேலையைக் கூட தேடிக் கொள்ளலாம் என்று மருத்துவர் கூறியுள்ளார், என்று அவர் கூறுகிறார். அந்த பெண்ணின் கணவர் மற்றும் அவரது குடும்பத்தினருடன் தர்க்கம் செய்ய முயன்றாலும் தோல்வியுற்ற திருமணத்தை இக்குடும்பத்தினர் கடந்து நிம்மதியாக வாழ்கின்றனர்.

சோலாப்பூரின் அக்கல்கோட்டைச் சேர்ந்த அப்பா நிம்பர்கிக்கு, அறுவை சிகிச்சை என் மகனுக்கு மறுபிறவியைக் கொடுத்துள்ளது. இப்போது அவன் தனது மற்ற நண்பர்களைப் போல் இயல்பாகவும், வலிப்புத்தாக்குதல்களுக்கு பயப்படாமலும் இருப்பதை கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

RC புனே பேனர் RID 3131ன் உதவியால், மேற்கூறிய இருவர் உட்பட நான்கு வலிப்பு நோயாளிகள் வலிப்பு நோயிலிருந்து குணமடைந்துள்ளனர். ஐந்தாவது நோயாளியான எட்டு வயது சிறுமியின் வாழ்க்கையை மாற்றும் அறுவை சிகிச்சைக்கு விரைவில் நிதியுதவி வழங்க சங்கம் தயாராக உள்ளது.

நகரில் உள்ள தினாநாத் மங்கேஷ்கர் மருத்துவமனையுடன்

இடதிலிருந்து: Rtn *விக்ரம் ஜாதவ்,* RC *புனே பானர் தலைவர் சங்கெட் சாஃப் மற்றும்* Rtn *சத்யநாராயண கப்ரா சிகிச்சைப் பெற்ற ஒரு இளம் நோயாளி மற்றும் அவர் பெற்றோருடன்.*

இணைந்து சங்கம் ஏற்பாடு செய்த வலிப்பு நோய்பரிசோதனை முகாமைத் தொடர்ந்து இந்த நோயாளிகள் அறுவை சிகிச்சைக் காக அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் நால்வரும் முழுவதும் குணமடைந்துள்ளனர். நம்மை போல அவர்களும் இயல்பான வாழ்க்கையை வாழ முடியும், என்கிறார் 40 உறுப்பினர்களைக் கொண்ட, 11 ஆண்டுகளாக இயங்கி கொண்டிருக்கும் சங்கத்தின் தலைவர் சங்கேத் சரஃப்.

ஏழ்மையான வலிப்பு நோயாளி களுக்கு மானிய விலையில் அறுவை சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ மனையுடன் சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் நிலேஷ் குர்வாலே, வலிப்பு நோய்க்கான சிகிச்சை யைச் சுற்றியுள்ள தடைகளை உடைக்க ஆதரவைத் தேடும் போது இந்த நற்பணி தொடங்கியது. "பெரும்பாலும் மக்கள் மூளை அறுவை சிகிச்சை பற்றி பயம் கொண்டுள்ளனர். ஆனால் இது வலிப்புக்கான மிக அற்புதமான சிகிச்சையை அளிக்கிறது மேலும் 80 சதவீத வெற்றி விகிதத்தைக் கொண்டுள்ளது. மருத்துவத் துறையினரிடையே கூட அதைப் பற்றிய விழிப்புணர்வு அதிகம் இல்லை, என்று மருத்துவமனையின் நரம்பியல் துறைக்கு தலைமை தாங்கும் மருத்துவர் கூறுகிறார்.

அவரது யோசனைக்கு பஜாஜ் அறக்கட்டளை நிதியுதவி அளித்தது, மேலும் அங்கு வலிப்பு நோய் மையத்தைத் திறக்க மருத்துவமனை ஒப்புக்கொண்டது. அவரும் அவரது நிபுணர் குழுவும் வருடத்திற்கு இது போன்ற சுமார் 150 அறுவை சிகிச்சை களைச் செய்கின்றனர் என்று RC புனே பேனரின் உறுப்பினர் சுர்ஹுதா குல்கர்னி கூறுகிறார்.

அறுவை சிகிச்சைக்கு முந்தைய ஆய்வு மட்டுமே ஒரு நீண்ட செயல்முறை. "அறுவை சிகிச்சை சிக்கலானது அல்ல, மேலும் நோயாளிக்கு வலிப்பு நோய் வருவதை முதல் நாளே நிறுத்தி விடும்'' என்று Dr குர்வாலே உறுதி யளிக்கிறார். அறுவை சிகிச்சைக்குப்

சங்கத் தலைவர் சரஃப் Dr நிலேஷ் குர்வாலேவிற்கு ரோட்டரி விருது அளிக்கிறார். உடன் DGN மஞ்சு ஃபாட்கே மற்றும் Rtn அனிருதா ஜோஷி ஆகியோர் உள்ளனர்.

பிந்தைய பின்தொடர்தலில் மூன்று முறை மட்டும் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியிருக்கும். அதன் பின் "நோயாளி வாழ்நாள் முழுவதும் குணமாகிவிடுவார். வலிப்பு நோய் தானே குணமாகும் என்று மக்களிடையே பரவலான நம்பிக்கை உள்ளது. ஆனால் இது ஒரு நபரின் இயல்பான வாழ்க்கையைத் தடுக்கிறது, அவரை பெரிதும் மருந்துகளை சார்ந்தவராக மாற்றுகிறது என்று அவர் கூறுகிறார்.

மொத்த சிகிச்சைக்கு 3 லட்சம் ரூபாய் செலவாகும். மருந்துகளுக்கு மட்டும் மக்கள் மாதம் குறைந்தபட்சம் ரூ.2,000–3,000 வரை செலவிடுகிறார்கள். மருத்துவ மனைக்கு செல்வது, வருவாய் இழப்பு மற்றும் மருந்துகளின் பின் விளைவுகள் ஆகியவற்றை அதனுடன் சேர்க்கவும். "அறுவை சிகிச்சையானது உங்கள் மருத்துவ சிகிச்சையின் இரண்டரை வருட செலவிற்கு நிகராக மட்டுமே இருக்கிறது, மேலும் இது பாதுகாப்பானது மற்றும் மலிவானது.''

Dr குர்வாலே முகாமில் 25 நோயாளிகளை பரிசோதித்து அதில் 12 பேரை அறுவை சிகிச்சைக்காக அடையாளம் கண்டார். இதற்கு சங்கம் அதன் பெருநிறுவன மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களின் ஆதரவுடன் நிதியுதவி செய்யும். தற்போது சிகிச்சைக்காக சுமார் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, என்கிறார் சுர்ஹுதா.

பட்டியலிடப்பட்ட நோயாளிகளின் சிகிச்சைக்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ.2 கோடி மற்றும் நிதி கிடைப்பதைப் பொறுத்து நாங்கள் படிப்படியாக உதவி வருகிறோம். எங்களிடம் அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளன, நன்கொடைகள் வந்து குவிகிறது என்று சரஃப் உறுதியளிக்கிறார்.

"ரோட்டரி அதன் செல்வாக்கு மிக்க நபர்களின் பரந்த அமைப்பைக் கொண்டு, அவர்கள் எவ்வாறு பிறவி இதய அறுவை சிகிச்சைகளை பெரிய அளவில் மேற்கொண்டார்களோ அதை போலவே வலிப்பு நோய் பற்றி நற்செய்தியையும் பரப்ப வேண்டும். சங்கம் வலிப்பு பரிசோ தனை முகாம்களை நடத்தினால், அல்லது வலிப்பு அறுவை சிகிச்சை பற்றி பேசினால், மக்கள் நிச்சயமாக தங்கள் குழந்தைகளை நோயிலிருந்து குணப்படுத்த முன்வருவார்கள். பல ரோட்டேரியன்களும் மருத்துவர்களாக இருப்பதால் மேலும் உதவியாக உள்ளது. அவர்கள் தாக்கம் மற்றும் திறன் கொண்டவர்கள், என்று Dr குர்வாலே புன்னகைக்கிறார்.■

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஊட்டச்சத்து பற்றிய பாடங்கள்

கிரண் ஜெஹ்ரா

"நாங்கள் சாப்பிட்டதையே அவளும் சாப்பிட்டாள். எங்களால் முடிந்த போதெல்லாம் பருப்பு, அரிசி மற்றும் காய்கறிகளை கொடுத்தோம் என்கிறார் 18 மாத குழந்தை வர்ஷாவின் தாய் மகாலட்சுமி." அவளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படும் வரை அவளுக்கு போதுமான ஊட்டச் சத்து இல்லை என்று எனக்குத் தெரியவில்லை, நாங்கள் அவளை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டியிருந்தது. என் மகள் ஐந்து கிலோ எடையுடன் இருந்தாள், மருத்துவர்கள் குறைந்தது ஏழு கிலோ எடை இருக்க வேண்டும் என்று கூறினார்கள். மகாலட்சுமியின் குடும்பத்தால் ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு பெற முடியவில்லை, மேலும் "பழங்கள் மற்றும் காய்கறிகளை வாங்குவது என்பது எட்டா கனியாக இருந்தது."

பெங்களூரில் இருந்து 28 கிமீ தொலைவில் உள்ள ராஜனகுண்டேயில் உள்ள சுர்டன்புரா கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவகர் ஒருவரால் கையாளப்படும் RC பெங்களூரு பிளாட்டினம் சிட்டி (RCBPC), RID 3190ன் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டமான 'முதல் 1000 நாட்கள் திட்டத்'திற்கு அவர் அறிமுகப்படுத்தப்பட்டார். விரிவான, குடும்ப அடிப்படை யிலான முன்முயற்சி திட்டமான அது கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் மற்றும் 2 வயதுக்குட் பட்ட குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. திட்டத்தில் சேர்ந்து 12 மாதங்களுக்குப் பிறகு, வர்ஷா இப்போது ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறாள், சீராக எடை அதிகரித்து வருகிறாள், என்று புன்னகைக்கிறார் மகாலட்சுமி.

''கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு' அல்லது 'கடுமையான விரயம்' என்ற வார்த்தை இந்தியாவில் பின்தங்கிய மற்றும் கிராமப்புறங்களில் இருந்து வரும் தாய்மார்களுக்கு அந்நியமாகத் தெரிகிறது. அவர்களுக்கு ஊட்டச் சத்து பற்றிய அறிவு இல்லை என்பது மட்டுமல்லாமல், கர்ப்ப காலத்தில் ஒரு தாயின் ஊட்டச் சத்து குறைபாடு குழந்தையின் வாழ்வு மற்றும் வளர்ச்சியை எவ்வாறு ஆழமாக பாதிக்கிறது என்பது பற்றி சிறிதும் சிந்தனை இல்லை, மேலும் குழந்தையின் ஊட்டச்சத்துக்கான அணுகலும் இல்லை'' என்று ஊட்டச்சத்து நிபுணரும், RCBPCயின் உறுப்பினருமான Dr ஷோபா G கூறுகிறார். ''தாய்மார்கள் மற்றும் கைக்குழந்தைகளின் ஆரோக்கியம் என்று வரும்போது, குறிப்பாக கிராமப்புறங்களில், PHCகள் மற்றும் ஆஷா பணியாளர்கள் என்ன செய்கிறார்களோ அதைத் தாண்டி நாம் செயல்பட வேண்டும்.''

VHD காலேஜ் ஆஃப் ஹோம் சயின்ஸில் மனித மேம்பாட்டுப் பேராசிரியரான, ஷோபா, தனது

இளம் தாய் ஒருவருக்கு ஊட்டச்சத்து மிகுந்த பால் அளிக்கப்படுகிறது.

மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டத்தின் மூலம் இளம் தாய்மார்களிடம் அதிகரித்து வரும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டினை கண்டறிந்துள்ளார். “புள்ளிவிவரங்களுடன் எனது சங்கத்தை அணுகினேன், நாங்கள் உடனடியாக திட்டப் பணியைத் தொடங்கினோம்.” MCKS என்ற அறக்கட்டளையின் ஆதரவுடன் சுர்டன்புராவில் சங்கம் இரண்டு ஆண்டு திட்டத்தை தொடங்கியது.

ஆனால் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் திட்டத்தில் சேர விரும்பவில்லை. “இது அவர்களின் குழந்தையைப் பற்றியது அதனால் அவர்கள் ஆபத்தான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ள தயாராக இல்லை” என்று சங்கத்தலைவர் நிஷா பெல்லாரே கூறுகிறார். உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனமான பீப்பிள் டிரஸ்டடின் உதவியுடன், சங்கம் கிராமப்புற சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றது.

விரைவில் பிறக்கவிருக்கும் குழந்தைகளின் வாழ்க்கையின் முதல் 1,000 நாட்கள், வாழ்நாள் முழுவதும் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சிக்கான அடித்தளத்தை நிறுவ ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது என்று ஷோபா அவர்களுக்கு விளக்கினார். “பிறந்த குழந்தைகளுக்கான வளர்ச்சி குறிக்கோள்களை அளவிடுவதற்கான விளக்கப்படத்துடன் பிராந்திய மொழியில் திட்டத்தைப் பற்றிய சிற்றேடுகளை எனது மாணவர்கள் உருவாக்கினர்.”

கிராமப்புற மற்றும் நகர்ப்புற பெண்களில் 50–55 சதவிகிதத் தினர் இரத்த சோகை நிலையில் கர்ப்பமாகிறார்கள்’’ என்று ஷோபா விளக்குகிறார். இந்தச் சிக்கலைத் தீர்க்க, சங்கம் ஆஸ்பிரார் ஸ்பியர் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்தது, இரும்புச்சத்து நிறைந்த சாக்லேட்டுகள் மூலம் இரும்புச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது. எனவே, நாங்கள் சுர்தன்புராவில் இருக்கும் தாய்மார்களுக்கு சாக்லேட்டுகளை விநியோகிக்க ஆரம்பித்தோம்.

இடதிலிருந்து: *ரச்னா போடிகா, உமா கேமுகா,* Dr *பாயல் பிஸ்வாஸ் சூ, சங்கத் தலைவர் நிஷா பெல்லாரே, ஷோபா மற்றும் உப்பாஸனா சிங் திட்டத் துவக்க விழாவில்.*

அடுத்து, சங்கம், பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, பெண்களுக்கு மாதந்தோறும் நெய், கோதுமை மாவு, உலர் பழங்கள் மற்றும் கடலைகள் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பௌஷ்ஷாக் லட்டுகளை வழங்குகிறது. பல்கலைக்கழகம் அவர்களுக்கு வீட்டுக் கொல்லைப் புறத்தில் வளர்க்கக்கூடிய விதைகள் மற்றும் மரக்கன்றுகளை வழங்கியது. பெங்களூருவின் மிது அறக்கட்டளையுடன் இணைந்து, சங்கம் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கம்பளி ஸ்வெட்டர்களை வழங்கியது. மேலும், தாய்ப்பால் கொடுப்பது குறித்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தில் தாய் மற்றும் சேய் இருவருக்கும் இலவச சத்துள்ள உணவுகள், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க பால், சுகாதாரக் கல்வி, ஊட்டச்ச த்து மதிப்பீடு, ஆலோசனைகள் மற்றும் வாட்ஸ்அப் தாய்மார்களின் குழு மூலம் ஆதரவு ஆகியவை வழங்கப்படுகிறது.

ஆரம்ப தயக்கத்திற்குப் பிறகு, கிராமப் பெண்கள் இப்போது RCBPCன் குழுவிடம் தாங்கள் வீட்டில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி பேசு கிறார்கள். 19 வயதுடைய ஒரு பெண் தனது மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கப் போகிறாள், மற்றொரு பெண் தன் பிரசவத்திற்குப் பிறகு எவ்வளவு விரைவில் தன் கணவருடன் உடலுறவு கொள்ள முடியும் என்று மருத்துவரிடம் கேட்கும்படி கணவனால் கட்டாயப் படுத்தப்பட்டு, வலியிலும் அவனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று கூறி அழுதது போன்ற நிகழ்வுகளை ஷோபா கேட்டு அதிர்ச்சியடைந்தார். “கணவரிடம் தன் உணர்வுகளை வலுவாகக் கூறுமாறு நான் அவளுக்கு அறிவுரை கூறினாலும், பெண்களுக்கு அறிவுரை வழங்குவதை விட, பெண்ணின் உடலைத் தாண்டிப் பார்க்க ஆண்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன்.” என்று அவர் கூறுகிறார்.■

உங்கள் திறமைகளைப் பயன்படுத்துங்கள்

ஒவ்வோராண்டும் ரோட்டரியையும் ரோட்டரி அறக்கட்டளையையும் ஆதரிக்கிற குழுக்கள் ரோட்டரியின் வியூக முதன்மைகளைச் செயலுக்குக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகின்றன. 2023–24 ரோட்டரி ஆண்டில் ஒரு குழுவில் சேவை புரியத் தங்கள் தலைமைப் பண்புத் திறன்களைப் பயன்படுத்துவதற்குத் தகுதி உள்ள ரோட்டரியன்கள் மற்றும் ரோட்டராக்டர்களை நாங்கள் தேடுகிறோம். இந்தப் பொறுப்புகள் உங்களுடைய தொழில் சார்ந்த திறமையை மற்றும் திறன் தொகுதியைப் பகிர்ந்துகொள்ள உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகின்றன.

பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள பகுதிகளில் திறன்களைக் கொண்ட நபர்கள் விண்ணப்பம் செய்யலாம் என்று ஊக்குவிக்கிறோம். பொறுப்புகளின் எண்ணிக்கை வரம்புக்குட்பட்டது. நீங்கள் இந்த ஆண்டு தேர்வாக விட்டால், அடுத்த ஆண்டு மீண்டும் விண்ணப்பம் செய்யலாம்.

அனைத்துக் குழுக்களும் மின்னஞ்சல், மெய்நிகர் தளங்களில் உரையாடுகின்றன, பொதுவாக, ஆண்டுக்கு ஒரு கட்டாய நேரடிச் சந்திப்பு இருக்கும். குழு உறுப்பினராகக் கருதப்படுவதற்கு *on.rotary.org/application2022* என்ற இணையத் தளத்துக்கு வாருங்கள். விண்ணப்பம் செய்கிறவர்கள் *my.rotary.org*ல் 'My Rotary'யில் தங்களைப் பதிவுசெய்துகொண்டிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் 15 ஆகஸ்டுக்குள் வந்து சேரவேண்டும்.

சேவை புரிதல் ரோட்டரி உறுப்பினர்களுக்குக் கதவுகளைத் திறக்கலாம்

பன்னாட்டுக் குழு உறுப்பினராக ரோட்டரிக்குச் சேவை புரிவது பன்னாட்டுத் தொடர்புகளை, உங்கள் தொழில்துறையில் அனுபவத்தைப் பெறுவதற்கும், உங்கள் தொழில்முறைத் திறன்களைப் பயன்படுத்தி நம் அமைப்புக்கு உதவுவதற்கும் ஒரு மிகச் சிறந்த வழி ஆகும். ரோட்டரியின் முந்தைய தலைமைப் பண்பு அனுபவம் தேவையில்லை, திறன்களும் சேவை புரிகிற ஆர்வமும் இருந்தால் போதும். பன்னாட்டுத் தலைமைப் பண்பு அனுபவத்தைப் பெறுவதற்கு வழக்கத்துக்கு மாறான ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்த நான்கு ரோட்டரி உறுப்பினர்கள், இதோ:

எனெடெல்சி எஸ்கோபர்-கிங்
RC பனாமா நார்டெ, பனாமா

குழு: வியூகத் திட்டமிடல், 2020–24

தொழில்முறைப் பின்னணி: நான் என்னுடைய தொழில் வாழ்க்கையில் பெரும்பகுதியை UN/UNICEFல் செலவிட்டேன், அந்தப் பொறுப்புகளில் வியூகத் திட்டமிடல்தான் என் முதன்மைப் பணியாக இருந்தது. என் பணி அனுபவம் என்னைப் பல கண்டங்களுக்கு அழைத்துச்சென்றது. அந்த அறிவைப் பயன்படுத்தி நான் ரோட்டரிக்கு உதவலாம் என்று நான் நினைத்தேன்.

ரோட்டரி பின்னணி: நான் 2015ல் ரோட்டரியில் இணைந்தேன், என் சங்கத்தின் திட்டச் செயல்பாடுகளில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டேன், நான் படித்த உயர்நிலைப் பள்ளியில் இன்டராக்ட் சங்கம் அமைப்பதில் முக்கியப் பங்காற்றினேன். பல ரோட்டரி மாநாடுகளில் பங்குபெற்ற நான் சங்க மற்றும் மாவட்ட அளவில் அனுபவம் பெற்றேன்.

பன்னாட்டுக் குழு அனுபவத்தில் எனக்கு ஆர்வம் வந்தது ஏன்?: இந்த அனுபவம் நம் அமைப்பை இன்னொரு பார்வையிலிருந்து பார்க்க என்னை அனுமதித்தது. மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டரியன்களை நான் தெரிந்துகொண்டேன், வேறு வழிகளில் நான் அவர்களைச் சந்தித்திருக்க இயலாது.

அமண்டா வென்டிட்
RC மெல்பர்ன், ஆஸ்திரேலியா

2010ல் 26 வயதில் ரோட்டரியில் சேர்ந்த அமண்டா வென்டிட் சங்கத் தலைவராக இருந்துள்ளார், மாவட்டப் பொதுத் தோற்றத் தலைவராகச் சேவை புரிந்துள்ளார், தன் மாவட்டத்துடன் கம்போடியாவுக்கு ஒரு மனித்தத்தன்மைப் பயணம் சென்றுள்ளார், ரோட்டரி மாநாட்டு இடைவெளி நிகழ்ச்சியில், பகுதிச் சந்திப்பில் பேசியுள்ளார். ஆனால், மாவட்ட நிலையைத் தாண்டி அவருக்கு முறையான தலைமைப் பண்புப் பொறுப்புகள் ஏதும் இருக்கவில்லை.

2017ல் ஓர் எதேச்சையான உரையாடலைத் தொடர்ந்து, ரோட்டரியின் பன்னாட்டுக் குழுக்களில் சேவை செய்கிற வாய்ப்பை இவர் தெரிந்துகொண்டார். "என் தொழிமுறை அனுபவத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பை நான் உடனடியாகப் பற்றிக்கொண்டேன்."

வென்டிட் சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்புச் சிறப்பு வல்லுனராகப் பணியாற்றியுள்ளார், தொழில்முனைவோர்கள், தலைவர்களைத் தங்களுடைய பிராண்ட்களைக் கட்டமைக்க வழிகாட்டுகிறார். தொழில்துறையில் சந்தைப்படுத்தலில் சிறப்புக் கவனத்துடன் இளநிலைப் பட்டம் பெற்றபிறகு, 2005ல் இவர் சந்தைப்படுத்தல் பரப்புரைகளை வழிநடத்தி யுள்ளார். சமூக ஊடகம், வீடியோ, புகைப்படம்,

Area of Expertise	Function on Committee	Prerequisites	Openings & Commitment
Audit	Advise leadership on financial reports, internal and external auditing, and the system of internal control	Independence, appropriate business experience, and demonstrated financial literacy in accounting, auditing, banking, insurance, investment, risk management, executive management, or audit governance	**One position** for a six-year term
Communications	Advise leadership on communication with key audiences	Professional background and experience in brand strategy, strategic planning, marketing, public relations, media, or a communications-related field	**Two positions** for three-year terms
Finance	Advise the RI Board on Rotary's finances, including budgets, investment policy and sustainability measures	Professional background in a finance-related field; nonprofit experience preferred. Candidates should have experience in financial matters at the club and district levels.	**Two positions** for three-year terms
Learning	Advise leadership on Rotary's leadership training programme for Rotarians, clubs and districts with a special emphasis on training for district governors	Significant training or education experience with a preference for leadership development	**Two to four positions** for three-year terms
Operations Review	Monitor the effectiveness, and implementation of operations and all internal systems; advise the Executive Committee on compensation matters; and perform other oversight functions as requested	Experience in management, leadership development, or financial management, and a thorough knowledge of Rotary's operations. Appointments are limited to past RI directors	**One position** for a six-year term
Rotaract	Advise leadership on matters related to Rotaract	Rotarians: Experience working with Rotaract; direct experience as a mentor or Rotaract adviser or district chair. Rotaract alumni are strong candidates Rotaractors: Leadership at the club, district, or international level. Strong candidates who have served as a district Rotaract representative, organised projects, or attended a Rotaract Preconvention. Age restrictions may apply	**One to four positions** for terms of varying length
Strategic Planning	Review Rotary's strategic plan and associated measures; advise leadership on other matters of long-term significance	10+ years of experience in strategy development, monitoring and implementation, and strong understanding of RI and Rotary Foundation programmes and services	**Two positions** with four-year terms

டிஜிட்டல் உள்ளடக்கம், விளம்பரங்கள் இன்னும் பலவற்றை உருவாக்கியுள்ளார். இவர் அரசுக் கொள்கைச் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதற்குப் பெரிய அளவு நடவடிக்கை மாற்றத் திட்டங்களை நிர்வகித்துள்ளார், இளைஞர்களை ஊழியர்களாக, வாடிக்கையாளர்களாக ஈர்ப்பதுபற்றி நிறுவனங்களுக்குப் பயிற்சியளிக்கிறார்.

வென்டிட் ரோட்டரியின் தகவல் தொடர்புக் குழுவில் சேவை புரிய விண்ணப்பம் செய்வதன் மூலம் தன்னுடைய திறமையைப் பயன்படுத்தத் தீர்மானித்தார். அவர் 2018–21ல் அந்தப் பொறுப்பை வகித்தார், 2019–20ல் குழுவின் துணைத் தலைவராகச் சேவை புரிந்தார்.

வென்டிட் இதுவரையிலான தன்னுடைய ரோட்டரி அனுபவங்களில் மிகவும் பிடித்ததாகத் தகவல் தொடர்புக் குழுவில் சேவை புரிந்ததைக் குறிப்பிடுகிறார். உலகெங்குமிருந்து வரும் உறுப்பினர்களுடன் பணியாற்றிக் கற்றுக்கொள்கிற, பன்னாட்டு முன்னெடுப்புகளை நடத்துகிற, பண்பாட்டு நுணுக்கங்கள், உள்ளூர்மயமாக்கப்பட்ட திட்டக் கருத்துகள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிற இந்த வாய்ப்பு இவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

தகவல் தொடர்புக் குழுவில் இவர் நேரம் செலவிட்டதால், ரோட்டரியின் பிராண்ட் மற்றும் தகவல் தொடர்புகளைப்பற்றிய கூடுதல் பேசும் வாய்ப்புகள் கிடைத்தன, இன்னும் வயது குறைந்த உறுப்பினர்களுடன் இணைய இயன்றது. இப்போது, இவருக்குக் கூடுதல் மாவட்டத் தலைமைப் பண்பு அனுபவமும் கிடைத்துள்ளது: இவர் 9800 மாவட்டத்தில் 2022–23 ஆளுநராகச் சேவை புரிகிறார்.

வினூ சூக்லொல்ல்
RC ஃபினிக்ஸ், மொரீசியஸ்

குழு: தாவல் தொடர்புகள், 2020–23
தொழில்முறைப் பின்னணி: நான் பிராண்டிங் மற்றும் புதுமைச் சிந்தனை, வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தகவல் தொடர்பு ஆலோசகர். கடந்த 40 ஆண்டுகளாக நான் என்னுடைய சொந்த நிறுவனத்தை இயக்குகிறேன், மொரீசியஸ் தகவல் தொடர்பு நிறுவனங்கள் அமைப்பின் தலைவராகச் சேவை புரிந்துள்ளேன்.

ரோட்டரி பின்னணி: 2003ல் நான் ஃபீனிக்ஸ் ரோட்டரி சங்கத்தின் பதிவு உறுப்பினர் ஆனேன். பல ஆண்டுகளாக என் சங்கம், மாவட்டத்துக்கு (9220) மிகப் பெரிய தகவல் தொடர்புத் திட்டங்களை நான் வழிநடத்திவந்துள்ளேன். தகவல் தொடர்புக் குழு உறுப்பினராக ஆனதுடன், 2020ல் நான் பகுதி 22க்கான துணை ரோட்டரி பொதுத் தோற்ற ஒருங்கிணைப்பாளராகவும் ஆனேன்.

பன்னாட்டுக் குழு அனுபவத்தில் எனக்கு ஆர்வம் வந்தது ஏன்?: இந்தக் குழுவில் சேர்வதன்மூலம், பன்னாட்டு அளவில் பல பிரச்சனைகளைச் சரி செய்யப் பணியாற்றும் மக்களுக்குப் பொதுத் தோற்றத்தைக் கட்டமைக்கக் கிடைக்கும் கருவிகளை மேம்படுத்துவதுபற்றிய என் கவலைகளை என்னால் முன்வைக்க இயன்றது. இந்த ஆண்டு, நான் ரோட்டரி பிராண்டைக் கட்டமைத்தல் துனைக் குழுவின் தலைவராகப் பணியாற்றுகிறேன். இதை நான் என் இல்லத்தைப்போல் உணர்கிறேன், பேரார்வம் கொண்ட உறுப்பினர்கள் என்னைச் சுற்றி உள்ளார்கள். அடுத்த ஆண்டு இணைகிறவர்களும் தொடர்ந்த மேம்பாட்டின்மீது அதே ஆர்வத்தைப் பகிர்ந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

பாப்பெ பார்னெஸ்
RC ஃபேர் ஓக்ஸ் ராஞ்ச் டெக்ஸாஸ்

குழு: தணிக்கை, 2020–23
தொழில்முறைப் பின்னணி: நான் டொரன்டோ நகரத்தில் பிரைஸ் வாட்டர்ஹவுஸில் பணியாற்றினேன், பிறகு, கல்வித்துறைக்கு நகர்ந்தேன், டெக்ஸாஸ் பல்கலைக்கழகம் மற்றும் கொலராடோ பல்கலைக்கழகத்தின் கணக்கியல் திட்டங்களில் பணியாற்றினேன். பின்னர் நான் மத்திய ஆசியாவுக்குச் சென்றேன், ஓர் USAID திட்டத்தின் தொழில்நுட்பக் கணக்கியல் வல்லுனர் ஆனேன், கணக்கியல் வல்லுனர்களுக்கான ஒரு பயிற்சித் திட்டத்தை உருவாக்குவதற்காகப் பன்னாட்டு மற்றும் உள்ளூர் வல்லுனர்களுடன் பணியாற்றினேன். இந்தத் திட்டம் இப்போதும் இயங்கிவருகிறது.

ரோட்டரி பின்னணி: நான் என்னுடைய வலைப்பின்னலை விரிவாக்கவும் நாட்டின் பிற உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்திக்கவும் பிஷ்கெக், கைர்கிஸ்தான், ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தேன். அங்கு நான் எங்கள் சங்கத்துக்கு வழங்கப்பட்ட பன்னாட்டு நல்கைகளின் நிதி அம்சங்களைச் செயல்படுத்த உதவினேன், ரோட்டராக்ட் சங்கத்தின் தொடர்பாளராகச் சேவை புரிந்தேன். என் நாட்டுக்குத் திரும்பியபின், நான் ஃபேர் ஓக்ஸ் ராஞ்ச் ரோட்டரி சங்கத்தின் பதிவு உறுப்பினர் ஆனேன்.

பன்னாட்டுக் குழு அனுபவத்தில் எனக்கு ஆர்வம் வந்தது ஏன்?: சங்க நிலையைத் தாண்டிச் சேவை புரிய நான் விரும்பினேன், அதன்மூலம், வெளிநாட்டில் வசித்தபோது ரோட்டரி எனக்குத் தந்ததை ரோட்டரிக்கு வழங்க எண்ணினேன் நான் மாவட்டப் பொருளாளராக, நல்கைகள் துணைக் குழுத் தலைவராகச் செயல்புரிந்தேன். அப்போது, குழுக்களில் சேவை புரிய ரோட்டரி தன்னார்வலர்களை அழைக்கிறது என்று நான் கண்டேன். தணிக்கைக் குழுதான் என்னுடைய திறமைக்கு மிக நன்றாகப் பொருந்துகிறது என்று நான் நினைத்தேன், அந்தக் குழுவில் சேவை புரிய விண்ணப்பம் செய்தேன்.

©ரோட்டரி.

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

அன்புள்ள 2022–23 மாவட்ட ஆளுநர்களுக்கு,

உங்கள் மாவட்டங்களின் மாவட்ட ஆளுநர்களாக உங்கள் ஆண்டு தொடங்குகிறது, நம் அறக்கட்டளையை இன்னும் உயரங்களுக்குக் கொண்டு செல்லும். உங்களுடைய முயற்சிகளை RI இயக்குநர்கள், நம் பகுதிகளின் அறங் காவலர்கள் உள்ளிட்ட ரோட்டரி தலைவர்கள் ஆதரிப் பார்கள். உங்கள் பார்வைக்காக ஒவ்வொரு பகுதியிலும் உள்ள குழுக்களின் தகவல்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன.

2022–23ம் ஆண்டு உங்களுக்கு மிகுந்த வெற்றியை வழங்க வாழ்த்துகள்!

RID Mahesh Kotbagi (Zone 4 & 7)	mahesh@kotbagihospital.com
RID A S Venkatesh (Zone 5 & 6)	venky.rotary@gmail.com
TRF Trustee Dr Bharat Pandya (Zone 4,5,6 & 7)	drbspandya@gmail.com
Zone-4, EMGA Deepak Gupta	deepak_gupta41@hotmail.com
Zone-4, EPNC Dr N Subramanian	drnsubra@yahoo.co.in
Zone-4, RRFC T N Subramanian	rtn.subramanian@gmail.com
Zone-5, EMGA R Madhav Chandran	madhav.chandran@ymail.com
Zone-5, EPNC Chinnadurai Abdullah	drchinnaduraiabdullah@gmail.com
Zone-5, RRFC John Daniel	rtn.johndaniel@gmail.com
Zone-6, EMGA Rajiv Sharma	rtnrajiv3030@gmail.com
Zone-6, EPNC Shyamashree Sen	shyamashreesen.rotary@gmail.com
Zone-6, RRFC Basu Dev Golyan	bdg3292nepal@gmail.com
Zone-7, EMGA Suresh Hari	3190dgoffice2018@gmail.com
Zone-7, EPNC Bharath Kumar	pdgbharath@yahoo.com
Zone-7, RRFC Manjunath Shetty	manjunathshettym@gmail.com

TRF-Area of Focus, Major Gift Initiative Committee members

PDG Sunil Zachariah — Disease Prevention and Treatment

PDG Ashok Panjwani — Support Environment

வணக்கம் மெல்பர்ன்

2022 RI மாநாடு 8 ஜூன் அன்று ஹூஸ்டனில் நிறைவடைந்தது. கோவிட்-19 நோய்ப்பரவல் தொடங்கியபின் நடைபெறும் முதல் நேரடி ரோட்டரி மாநாடு இதுதான். இப்போது, அடுத்த ஆண்டு மாநாட்டை நடத்தவிருக்கும் நகரத்தை நோக்கி நம் கவனம் திரும்புகிறது: ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன்.

2023 மாநாடு மே 27 முதல் 31 வரை ராட் லாவெர் அரங்கம், மெல்பர்ன் மாநாடு மற்றும் கண்காட்சி மையத்திற்குள் நடைபெறும். ரோட்டரி மாநாடு மெல்பர்னில் நடைபெறுவது இரண்டாவது முறையாகும். இதற்கு முன் 1993ல் இங்கு மாநாடு நடைபெற்றது.

விக்டோரியா என்னும் தென்கிழக்கு மாநிலத்தின் கடற்கரையோரத் தலைநகரம், ஆஸ்திரேலியாவிலும் ஓசானியாவிலும் இரண்டாவது மிகப் பெரிய நகரம் மெல்பர்ன். இங்கு 5 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அத்துடன், உள்ளூர்க் குடியிருப்பாளர்களில் தொடங்கி ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்காவிலிருந்து சமீபத்தில் குடியேறியவர்கள்வரை சுமார் 140 பண்பாடுகள் மெல்பர்னில் உள்ளதாக நகர அரசாங்கம் சொல்கிறது. எகனாமிஸ்ட் அறிவுப் பிரிவு உலக அளவில் வாழ்வதற்கு ஏற்ற சிறந்த நகரங்களில் ஒன்றாக மெல்பர்னை மதிப்பிட்டுள்ளது, இதற்கு ஒரு காரணம், அதன் பண்பாட்டுப் பண்புகள்.

மெல்பர்ன் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் மேரி பாரி (Mary Barry) நிகழ்ச்சியை நடத்தும் ஏற்பாட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார். 1921 ஏப்ரலில் பதிவான மெல்பர்ன் ரோட்டரி சங்கம் ஆஸ்திரேலியாவின் முதல் சங்கமாகும். இந்த நாட்டில் இப்போது 1,000க்கும் மேற்பட்ட சங்கங்கள், கிட்டத்தட்ட 25,000 உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆஸ்திரேலியா இதற்குமுன் நான்கு ரோட்டரி மாநாடுகளை நடத்தியுள்ளது, அவற்றில் சமீபத்திய மாநாடு, 2014ல் சிட்னியில் நடைபெற்றது.

மேலும் தெரிந்துகொள்ள, பதிவு செய்ய: convention.rotary.org. பார்க்கவும்.

விதவைகளின் குழந்தைகள் கல்விக்கு நிதியுதவி

V முத்துகுமரன்

முன்னாள் ராஜ்ய சபா MP கஜ் சிங் காசோலை ஒன்றை ஒரு விதவையிற்கு வழங்குகிறார். உடன் திட்ட ஒருங்கினைப்பாளர் C P சஞ்சேதி (இடது) மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் லவேந்திர சிங் உள்ளனர்.

அன்றாட நெருக்கடிகள், கஷ்டங்கள் மற்றும் கொந்தளிப்புகளைத் தாங்கிக்கொண்டு, விதவை மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் பையன் மாயங்கின் தாயான வந்தனா ஆச்சார்யா (45) அவர்களால் நிம்மதிப் பெருமூச்சு விட முடிகிறது, சற்று சிரிக்கவும் முடிகிறது. RC ஜோத்பூர், RID 3053 இன் விதவைகளுக்கான உதவித் திட்டத்தின் (AWP) பயனாளி வந்தனா ஆவார், இத்திட்டம் விதவைத் தாய்மார்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் பள்ளிக் கட்டணம் மற்றும் பிற கல்விச் செலவுகளை ஈடுகட்ட காசோலைகளை வழங்குகிறது. எங்கள் வாழ்க்கையின் மிகவும் நெருக்கடியான நேரத்தில் இந்த பண உதவித்தொகையை கொண்டு ரோட்டரி தலையிடா விட்டால் எனக்கும் எனது மகனுக்கும் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்து நான் நடுங்குகிறேன். ரோட்டரிக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம், என்கிறார் வந்தனா.

ஜோத்பூரில் இதுவரை 750 பயனாளிகள் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் ரூ.80 லட்சம் மதிப்பிலான பண உதவியைப் பெற்றுள்ளனர். AWP ஒருங்கிணைப்பாளர் C P சஞ்செதி, RC விண்ட்சர், RID 6400, கனடா மற்றும் அதனுடன் இணைந்த கனடியன் வேர்ல்ட் எஜுகேஷன் பவுண்டேஷன் (CWEF) ஒரு உலகளாவிய தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் இத்திட்டத்தை தொடங்கினார்.

உடனடி உறவு

கனடாவைச் சேர்ந்த வயதான தம்பதி ஓம் சந்தனா மற்றும் அவரது மனைவி ஆகியோர் மார்ச் 2011ல் ராஜஸ்தானில் சுற்றுப்பயணம் செய்தனர். அவர்கள் ஜோத்பூருக்குச் செல்லும் போது ஜெய்பூர் ரயில் நிலையத்தில் உள்ள பிளாட் பாரத்தில் இருந்து ரயில் பெட்டிக்கு தங்கள் சாமான்களை மாற்றுவதற்கு உதவி நாடினார்கள். அதே ரயில் பெட்டியில் ஏறவிருந்த திட்ட ஒருங்கிணைப்பாளரின் மகன் கபில் சஞ்செதி தம்பதியினரின் சாமான்களை எடுத்துச் செல்ல உதவினார். அவர்களுடன் பயணம் செய்யும் போது, சந்த்னா தனது சட்டையில் ரோட்டரி சின்னத்தை வைத்திருப்பதைக் பார்த்த கபில்

மேலும் அவரது தந்தையும் ஒரு ரோட்டரியன், RC ஜோத்பூரின் உறுப்பினர் என்று அவருக்குத் தெரிவித்தார். RC விண்ட்சரின் உறுப்பினர்களான தம்பதிகளை கபில் ஜோத்பூரில் உள்ள எங்கள் வீட்டிற்கு அழைத்தார். நான் அவர்களை எங்கள் சங்கம் மற்றும் எங்களின் சில திட்டங்களான ரோட்டரி பள்ளி, ரோட்டரி வட்டம் மற்றும் எங்களால் செய்யப்படும் பிற சமூக முயற்சி களுக்கு அழைத்துச் சென்றேன்'' என்கிறார் சஞ்செதி.

ஜோத்பூரில் பலதரப்பட்ட திட்டங்களைச் செய்து வருவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த சந்த்னா, எங்கள் சங்கத்துடன் கூட்டுத் திட்டத்தைச் செய்ய விருப்பம் தெரிவித்தார். "சில மாதங்களுக்குப் பிறகு, இந்தியா மற்றும் கென்யாவில் உள்ள பல்வேறு பள்ளிகளில் படிக்கும் விதவைத் தாய்மார்களின் பிள்ளைகளுக்கு தனது சங்கம் செய்து வரும் பண உதவித் திட்டத்தைப் பற்றி கனடாவில் இருந்து சந்த்னா என்னிடம் தெரிவித்தார்'' என்று சஞ்செதி நினைவு கூர்ந்தார். ஜோத்பூரில் உள்ள விதவைத் தாய்மார்களுக்கு CWEF மூலம் குழந்தைகளைப் படிக்க வைக்க அவர் நிதியளிக்க விரும்பினார். ஏற்கனவே, அந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் அந்த நேரத்தில் (ஆகஸ்ட்-செப் 2011), RC விண்ட்சர் உடன் கூட்டு முயற்சியில் இந்தியாவில் 1,300 மாணவர்களின் தாய்மார்களுக்கு மானியங்களை வழங்கியது.

முதல் மானியம்

AWP ஆரம்பம் செய்வதற்கானஆவண வேலை மற்றும் பிற சம்பிரதாயங் களைத் தொடர்ந்து, 2012–13ம் ஆண்டில் ஜோத்பூரில் உள்ள ரோட்டரி பள்ளியில் படிக்கும் 31 குழந்தைகளின் விதவை தாய்மார் களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனம் ரூ.2 லட்சம் வழங்கியது. "2016 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளாக நாங்கள் இதைத் தொடர்ந்தோம், அப்போது சந்த்னா திட்டத்தில் அதிக பள்ளிகளை சேர்க்க விரும்பினார். நாங்கள் 16 ஆதர்ஷ் வித்யா மந்திர் பள்ளிகளை சேர்த்தோம். ஒவ்வொரு ஆண்டும் விதவை தாய்மார்களுக்கு 10 முதல் 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான காசோலைகளை வழங்கி வந்தோம் என்று விளக்குகிறார் சஞ்செதி. ரோட்டரி சங்கம் மற்றும் ஆதர்ஷ் பள்ளிகள் இரண்டும் AWP வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்யப்படும் மொத்த ஆண்டு மானியத்தில் 10 சதவீதத்தை பங்களிக்கின்றன.

CWEF மூலம், ஜோத்பூர் சங்கம் குழந்தைகளுக்கு அவர்களின் உயர் கல்வியை முடிக்கும் வரை நிதியளிக்கிறது. கணக்காளராக இருந்து கிராஃபைட் தொழில்முனைவோராக மாறிய சஞ்செதி (72) 32 ஆண்டுகளாக நவ்ஜோதி மனோவிகாஸ் கேந்திரா என்ற 104 குழந்தைகளை கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளியின் தலைவராக உள்ளார். 1997–98ம் ஆண்டில், ஜோத்பூரில் உள்ள மகாத்மா காந்தி மருத்துவ மனையில் நான்கு படுக்கைகள் கொண்ட ஐசியுவை (ரூ.8.5 லட்சம்) அவர் தனது மறைந்த தாய் மதன் கன்வர் சஞ்சேதியின் நினைவாக அமைத்தார், சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஆறு படுக்கைகளுடன் (ரூ.15 லட்சம்) கூடிய ஐசியுவை வழங்கியுள்ளார்.■

சுந்தரவனக் கிராமங்களுக்குக் குடிநீர்

ரோட்டரி செய்திக் குழு

RC கல்கத்தா நியூ அலிப்பூர், RID 3291, மேற்கு வங்காளத்தின் சுந்தரவனப் பகுதியில் உள்ள தக்ஷின் அக்ரதலா கிராமத்தில் தூய குடிநீரை வழங்கும் சிறிய நீர் தூய்மைப்படுத்தும் ஆலை ஒன்றை நிறுவியுள்ளது. மணிக்கு 1,000 லிட்டர் நீரைத் தூய்மைப்படுத்தக்கூடிய இந்த ஆலையில் 10 குழாய்கள் உள்ளன, இவை 300க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குத் தூய குடிநீரை வழங்குகின்றன. டாடா வேதிப்பொருள் நிறுவனத்தின் துணை நிறுவனமாகிய என்கரேஜ் சமூகத் தொழில் அறக்கட்டளை மற்றும் சுந்தரவனப் பகுதியில் உள்ள மக்களுக்காகப் பணியாற்றுகிற, சந்தேஷ்காலியின் மா சரோடா பெண்கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு அமைப்புடன் இணைந்து செய்யப்பட்ட இந்தத் திட்டத்தை DG பிரபீர் சாட்டர்ஜி தொடங்கிவைத்தார்.■

பானைகளும் பாத்திரங்களும் சொல்லும் கதை

ப்ரீதி மேஹரா

உங்கள் சமையல் பாத்திரங்கள் ஆரோக்கியமானதாக இருக்கட்டும்.

ஆரோக்கியமான மற்றும் பசுமையான சமையலறைக்கு நீங்கள் சமைக்கும் உணவு மட்டுமல்ல, சமையல் செய்யும் பாத்திரங்களும் இன்றியமையாதவை. சமையலறைச் செயல்பாடுகளில் பல்வேறு விஷயங்களை கவனிக்க வேண்டும் என்றாலும், சிறந்த சமையல் கலைஞர்கள் கூட அவற்றை புறக்கணித்து விடுகின்றனர். நீங்கள் பயன்படுத்தும் சமையல் பாத்திரங்கள் உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாக்குமா? அவை ரசாயனங்கள் அல்லது உலோகங்களை உணவில் வெளிப்படுத்தி தீங்கு விளைவிக்குமா? நீங்கள் பயன்படுத்தும் சமையல் பாத்திரங்கள் மறுசுழற்சி செய்யும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பான பொருள்களால் தயாரிக்கப்பட்டதா?

பல்வேறு வகையான பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சமையலறை பாத்திரங்களால் சில நன்மைகளும் உள்ளன, தீமைகளும் உள்ளன. அண்மைக்காலம் வரை சமையலறை பாத்திரங்களைப் பயன்படுத்துவது குறித்து போதிய கவனம் செலுத்தப் படவில்லை. ஆனாலும், இப்போது பரவலாக விளம்பரப்படுத்தப்படும், சந்தையில் கிடைக்கும் வித விதமான சமையல் பாத்திரங்களை வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வு மக்களிடையே அதிகரித்து வருகிறது.

இங்கே நாம் குறிப்பிடும் கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்கள் நீடித்து உழைப்பது மட்டுமல்ல, மறுசுழற்சி செய்யக்கூடியவை. கனமான உலோகத்தால், குறைவான ரசாயனத்தை வெளிப்படுத்தும் பாத்திரங்கள் பாதுகாப்பானவை. துருப்பிடிக்காத கைப்பிடிகளுடன், செராமிக் பூசப்பட்ட அலுமினிய பாத்திரங்கள் பாதுகாப்பானவை.

ஒவ்வொரு பொருளும் எவ்வாறு செயல்படுகிறது, நிபுணர்கள் கூறுவது என்ன என்பதை இப்போது பார்ப்போம்.

வார்ப்பு இரும்பினாலான பாத்திரங்கள் நீடித்து உழைக்கக் கூடியவை. உணவு சமைக்கும் போது அவை இரும்புக் கசிவை வெளிப்படுத்தும் என்றாலும் பாதுகாப்பானவை தான் என்கின்றனர் நிபுணர்கள். எனாமல் அல்லது கண்ணாடி பூசப்பட்ட வார்ப்பு இரும்பு பாத்திரங்களை பயன்படுத்துவது நல்லது. வார்ப்பு இரும்புக்கான அனைத்து குணங்களும் இதில் இருக்கும். ஆனாலும் உணவில் இரும்புக் கசிவு கலக்காது. மேலும் எனாமல் பூச்சு இருப்பதால் அமில உணவுகளை சமைக்கும்போது எந்த எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தாது.

நம்நாட்டு சமையலறைகளில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் (எவர் சில்வர்) பாத்திரங்கள் பிரபலமானவை. அவற்றின் விலை மலிவு, நீடித்து உழைக்கக் கூடியவை, எடை குறைவானவை, எளிதில் கழுவக்கூடியவை. அவை பாதுகாப்பானவை என்றாலும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்களை வாங்குவதற்கு முன் அதில் குரோமியம் மற்றும் நிக்கல் எந்த அளவில் கலந்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். சில பிராண்டுகளில் அதுபற்றிய விவரங்களை பாத்திரத்திலிலேயே அச்சிட்டிருப்பார்கள். எனினும் 18/8 அல்லது 18/10 என்ற அளவு பாதுகாப்பானது. அதாவது 18 சதவீதம் குரோமியமும் 8 சதவீதம் நிக்கலும் கலந்திருக்கும் அவை உணவு சமைக்கும் போது எந்த பாதிப்பையும்

ஏற்படுத்தாது. இவற்றை மறுசுழற்சி செய்யமுடியும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கண்ணாடியிலான சமையல் பாத்திரங்கள் நச்சுத்தன்மை இல்லாதவை, பாதுகாப்பானவை. ரொட்டி, கேக் போன்ற பேக்கரி பொருள்களைத் தயாரிக்க இவை வலுவாக பரிந்துரைக்கப்படுகின்றன. சில வகையான கண்ணாடி பாத்திரங்களை நாம் அடுப்பில் அல்லது ஓவனில் வைத்து பயன்படுத்த முடியும். ஆனாலும் சில குறிப்பிட்ட வகை உணவுகளை மட்டுமே இவற்றால் தயாரிக்க முடியும். நீடித்த வெப்பம் மற்றும் வெப்பநிலை திடீர் மாற்றங்களை இவற்றால் தாங்கமுடியாது என்றும் சிலர் கூறுகின்றனர். கண்ணாடி வகை பாத்திரங்கள் 100 சதவீதம் மறுசுழற்சி செய்யக்கூடியவை. உணவை சேமித்து வைப்பதற்கு சிறந்தவை என்பது கூடுதல் நன்மை.

செம்பு கலந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங் களையும் பயன் படுத்தலாம். அவற்றில் 18க்கு 8 மற்றும் 18க்கு 10 என்ற விகிதத்தில் செம்பு கலந்திருந்தால் உணவு சமைப்பதில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. மேலும் எவர்சில்வர் பாத்திரத்தின் அடித்தளம் செம்பு இருப்பதால் விரைவில் சூடாகிவிடும். சமையலை துரிதமாக முடித்து எரிசக்தியை சேமிக்க முடியும்.

நான்-ஸ்டிக் பாத்திரங்கள் பயன் படுத்தும் போது நாம் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் இவை பாலிடெட்ராப்ளூரோ எதிலின் பூச்சுகள் கொண்டவை. எனவே இவற்றில் சமையல் செய்யும் போது மரத்தினாலான கரண்டி மற்றும் தோசைத் திருப்பிகளை பயன்படுத்த வேண்டும். நீண்ட நேரம் இவை அடுப்பில் இருப்பதை தவிர்க்க வேண்டும்.

சமையலறையில் பின்பற்ற வேண்டிய சில பசுமை விதிகளும் உள்ளன. குளிர் பானங்கள், பழச்சாறுகள் அருந்தும் போது பிளாஸ்டிக் உறிஞ்சிகளைப் பயன்படுத்தாமல் உலோகத்தாலான உறிஞ்சிகளைப் பயன்படுத்துவது நல்லது. இதேபோல காகிதங்களில் தயாரிக்கப்பட்ட நாப்கின்களை பயன்படுத்துவதை விட மறுசுழற்சி செய்யப்பட்ட துணியிலான நாப்கின்களை பயன்படுத்துவது நல்லது. அவற்றை பயண நேரத்தில் மட்டும் பயன்படுத்தலாம்.

இந்திய குடும்பங்களில் தினசரி பள்ளி, கல்லூரி மற்றும் வேலைக்குச் செல் பவர்களுக்கு உணவை பேக் செய்வது அன்றாட வேலையாக இருக்கும். பசுமையான முறையில் அவற்றை பேக் செய்வது பயனளிக்கும். மும்பை டப்பாவாலாக்களின் டிபன் பாக்ஸ் சுற்றுச்சூழல் பாது காப்பானவை. முடிந்தால் அந்த வழியை நாம் பின்பற்றலாம். பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்கள் கையில் மதிய உணவுக்கு பெரிய டிபன் பாக்ஸ்களை எடுத்துச் செல்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். அவர்களுக்கு வாழை இலையில் இட்லி, சப்பாத்தி, சாண்ட்விச்களை பேக் செய்து தரலாம். உங்கள் குழந்தைகள் அலுமினிய ஃபாயில்களை விரும்பினால், மறுசுழற்சி செய்யப் பட்ட ஃபாயில்களை வாங்குவதை உறுதிசெய்யுங்கள்.

குழந்தைகளிடம் சிறுவயதிலேயே பசுமையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுவது பொறுப்புள்ள பெற்றோரின் கடமையாகும். அதை அவர்கள் சரியாகச் செய்துவிட்டால் வளரும் தலைமுறையினருக்கு பசுமையான எதிர்காலத்தை உறுதி செய்ய முடியும். மனிதர்கள் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி விடும் தன்மை கொண்டவர்கள். நாம் சுற்றுச்சுழல் பாதுகாப்புக்கு ஏற்றவாறு நமது பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டால் நமது குழந்தைகளும், வருங்கால தலைமுறையினரும் அவற்றை பின்பற்றி நடப்பார்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப் பற்றி எழுதிவருகிறார்.

இதயம் காப்போம், மாரடைப்பு வராமல் தடுப்போம்

பரத் — ஷலன் சவூர்

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 12 லட்சம் இளைஞர்கள் மாரடைப்பால் இறக்கிறார்கள் என்கிறார் Dr மன்ஜிந்தர் சாந்து. 50 வயதுக்கு மேற்பட்டவர்களும் உயிரிழக்கிறார்கள். ஆனால், அவர்களில் 30 சதவீதம் பேர் 45 வயதுக்கு கீழானவர்கள். 20 வயதானவர்கள் இப்போதே மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கன் இதயநோய் சங்கம் பரிந்துரைக்கிறது.

நோய்க்கான அறிகுறிகள்

மாரடைப்பு எப்போது வரும் என்று யாராலும் கணிக்க முடியாது. அதற்கான அறிகுறிகள் என்னவென்றால் நெஞ்சுவலி, கைகளில் வலி, மூச்சுவிடமுடியாமை, அதிகப்படியான வேர்வை, சொல்லமுடியாத வேதனை மற்றும் சோர்வு ஆகியவை. இந்த சமயத்தில் டாக்டரை அழைப்பது நல்லது. இது அஜீரணக் கோளாறா அல்லது வாயுத் தொல்லையா அல்லது இறுக்கமான ஆடை காரணமா என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தாலும், ஒரு டாக்டரை அணுகுவது நல்லது. சரியான நேரத்தில் கிடைக்கும் மருத்துவ வசதி வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும். நடிகர் சுநீல் குரோவர் இதைத்தான் செய்தார். இப்போது உடல்நலத்துடன் இன்றும் பணியில் ஈடுபடுகிறார்.

வெளிப்படையாகச் சொன்னால் இரண்டு இதய நிலைகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இதயதுக்கு ரத்தம் செல்வது தடைபடும் போது மாரடைப்பு ஏற்படுகிறது. சோடியம், பொட்டாசியம் மற்றும் கால்சியம் ஆகியவை செல்லும் வழியில் ஏற்றத்தாழ்வு ஏற்படும்போது இதயத்துடிப்பு நின்றுபோவதன் காரணமாக மாரடைப்பு ஏற்படுகிறது.

குறிப்பு: நீங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்பவராக இருந்து, தசைகளில் வலி தொடர்ந்தால் உடனடியாக மருத்துவரிடம் செல்லுங்கள். உங்களுக்கு கால்சியம் மாத்திரைகள் தேவைப்படலாம். அதை அலட்சியம் செய்யாதீர்கள்.

சமூகத்தில் நாம் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு, சரியான நேரத்தில் மருத்துவரை அணுகி சரியான வகையில் சிகிச்சை பெற்றால் நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முடியும். இதய நோயிலிருந்து விடுபட்ட ஒருவர், ஒரு குறிப்பிட்ட

காலம் வரை அவர் எதுவும் செய்யாமலிருந்தாலோ அல்லது அவரது உழைப்பு குறைவாக இருந்தாலோ, சமூகம் அவரை ஒதுக்கிவிடக்கூடாது. நம்மால் சமூகத்திற்கு எந்த பயனும் இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடக் கூடாது. தனிமை, இயலாமை, நாம் எதற்கும் பயனற்றவர் என்ற உணர்வு இதயத்துக்கு நல்லதல்ல.

இதயத்திற்கு ஏற்ற தேர்வுகள்

ஒட்டுமொத்தமாக, நமது வாழ்க்கை மேம்பாட்டுக்கு ஏற்றவாறு நமது செயல்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அதுதான் நீண்டநாள் வாழ்க்கைக்கு உதவும். உடல் ரீதியாக நாம் சுறுசுறுப்பாக இயங்கினாலே இதயத்துக்கு மகிழ்ச்சி அளிக்கும். கட்டான உடலமைப்புகள் இருந்தால் இதயத்திற்கு நாம் அதிக வேலை கொடுக்க வேண்டியதில்லை. 74 வயதில் தமக்கு நிமிடத்துக்கு 65 முறை இதயம் துடிப்பதாகவும் அதனால், 30 வயது இளைஞரைப் போல் உணர்வதாகவும் டாக்டர் தீபக் சோப்ரா தெரிவிக்கிறார். தினமும் யோகா பயிற்சி செய்வதாகவும் அவர் குறிப்பிடுகிறார். ஒரு கட்டமைப்பான உடற்பயிற்சியைச் செய்ய நேரமில்லை என்றாலும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். காரில் செல்வதைத் தவிர்த்து அருகில் உள்ள இடங்களுக்கு நடந்து செல்லுங்கள். அதேபோல மாடிக்கு படிக்கட்டுகளில் ஏறிச் செல்லுங்கள். உங்களது உடல்சக்தியில் குறைபாடு இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உடல்திறனை அதிகரிக்கச் செய்யும் வகையில் எப்போதும் ஏதாவது ஒரு செயல்பாட்டில் இருங்கள்.

குறிப்பு: செல்போனில் பேசும்போது உட்கார்ந்து கொண்டு பேசாமல், உங்கள் அறையில் நடந்துகொண்டே பேசுங்கள்.

உணவு சாப்பிடுங்கள், சாப்பாடு உங்களை தின்றுவிடக்கூடாது

உங்களுக்குத் தேவையான உணவைச் சாப்பிடுங்கள். ஆனால், சாப்பாடு உங்களைத் தின்றுவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பசுமையான காய்கறிகள், பழங்கள் உடலுக்கு நல்லது. புரதச்சத்துக்கு ஏற்ற பருப்பு வகைகளைத் தேர்ந்தெடுங்கள். முளைப்பயறுகளை பச்சை யாகவோ அல்லது வேகவைத்து சாப்பிட்டால் உடலில் அமினோ அமிலங்களை அதிகரிக்கச் செய்யும். கொண்டக்கடலை, பட்டாணியை வேகவைத்து, உப்பு சேர்த்து சுண்டல் செய்து சாப்பிடுவது நல்லது. ஆனால், வறுத்து சாப்பிடுவதை தவிர்த்திடுங்கள். பாதாம், முந்திரி போன்றவையும் உடலுக்கு நல்லது. இவற்றை பொடி செய்து தயிருடன் கலந்தும் சாப்பிடலாம்.

எச்சரிக்கை: முந்திரி, பாதாம், பிஸ்தா போன்றவைகளில் அதிக வைட்டமின் கிடைக்கும். எனவே அளவோடு சாப்பிடுங்கள். உணவு சாப்பிடும் நேரத்தில் ஓரளவு திருப்தி ஏற்பட்டால் நிறுத்திவிடுங்கள். அளவுக்கு அதிகமாக சாப்பிடாதீர்கள். மேலும் உடலுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவு வகைகள் உங்கள் பட்டியலில் முதலிடத்தில் இடம்பெற்றிருந்தாலும் தவிர்த்து விடுங்கள். அரிசி, கோதுமை, பிரெட் எதுவாக இருந்தாலும் உங்கள் விருப்பப்படி சாப்பிடுங்கள்.

நல்வாழ்வுக்கு தியானம்

தியானம், உங்களிடம் "நல்வாழ்வு" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாதையை திறக்கிறது. உடலுக்கும் மனதுக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. இரத்த அழுத்தத்தை குறைக்கிறது. நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் தடுக்கிறது. மன அழுத்தத்தை வெகுவாக குறைக்கிறது. சரியான வழிகாட்டுதலுடன் கூடிய யோக நித்திரை அமர்வுக்கு நான் பரிந்துரை செய்கிறேன்.

இதயவலியைத் தடுப்போம்!

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், எதையும் அணுகாமல், தேவைகளை பெருக்கிக் கொள்ளாமல் இருந்தாலே இதய நோய் பிரச்னைகளைத் தவிர்க்க முடியும். அதற்காக நாம் பயப்படுகிறோம் என்பது அர்த்தமல்ல. சிலவற்றைப் புரிந்துகொண்டு விவேகமாக செயல்பட்டாலே போதுமானது. எதிர்பார்த்தல், அணுமானித்தல் மற்றும் தேவைகளை கோருவது கோபத்தையும், அகங்காரத்தையும் அதிகரிக்கவே செய்யும். இதனால் இதயத்தின் செயல்பாடு அதிகரித்து நமக்கு அதிக பராமரிப்பு செலவினங்களைக் கொடுக்கும். உங்களிடம் மன்னிக்கும் தன்மை இல்லாவிட்டால், யாராக இருந்தாலும் உங்கள் மனதில் வாடகையில்லாமல் ஆக்கிரமித்துக் கொள்வார்கள் என்கிறார் எழுத்தாளர் இசபெல் ஹாலண்ட்.

இந்த எச்சரிக்கையையும் கேளுங்கள்:

உணர்ச்சிப் பெருக்கால் ஏற்படும் மனசஞ்சலம் உங்கள் உடலில் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். கோபம், பகைமை உணர்வு ஆகியவை இதயநோய் அதிகரிப்பதற்கான காரணிகளில் ஒன்று என்கிறார் Dr தீபக் சோப்ரா.

திறந்த இதயத்துடன் யோகாசனம்

நாம் நமது இருக்கையில் அமர்ந்திருக்கும் நிலையே அரைகுறையாக இருக்கிறது என்கிறார் யோகா ஆசிரியர் ஒருவர். அவை நமது மார்பு, இதயம் மற்றும் நுரையீரலின் செயல்பாட்டை சுருக்குகிறது. ஒருநாளைக்கு ஐந்து முறை செய்யவேண்டிய யோகாசன நடைமுறைகளை அவர் விவரிக்கிறார். எழுந்து நில்லுங்கள், கைகளை அகல விரியுங்கள். சிரியுங்கள். காற்று, ஆக்ஸிஜன் மற்றும் உயிருடன் இருக்கிறோம் என்கிற மகிழ்ச்சி இதயத்தை சென்றடையட்டும்.

இறுதியாக தொழில்நுட்பம் நமக்கு பேருதவியாக இருக்கிறது. அதில் பல்வேறு பொழுதுபோக்குகள் உள்ளன. மதுவுக்கும், போதைக்கும் அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபட இவற்றில் கவனம் செலுத்தலாம். உங்கள் கண்கள் அழகான இயற்கைக் காட்சிகளை ரசிக்கட்டும். கடற்கரையில் வெறும் காலுடன் நடைபோடுங்கள். பூமியில் உள்ள எதிர்மறை அயனிகள் உங்கள் உடலில் புகுந்து மன அழுத்தத்தை குறைக்க உதவும். உங்கள் இதயத்து க்கு நல்வாழ்க்கையைக் கொடுங்கள். அதை இப்போதே தொடங்குங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

Wordsworld

Behind the cover

Sandhya Rao

Surprises hide within the pages of seemingly unattractive looking books. Don't be fooled. Go beyond the jacket.

We are constantly admonished never to judge a book by its cover, yet I often catch myself doing precisely that. Mmmm, too dull. Uff, so boring. Naa, not interesting. Oho, so unsmart, the book must be even less smart. These and a whole lot of other similarly illogical thoughts present themselves when choosing books, be it at library or shop.

I remember being less picky as a child because all I wanted to do was read, 'looks' didn't matter. But yes, I preferred fat books to thin ones because they held the promise of juicy bites. This approach ruled well for a long time, right through a period of irritating intellectual snobbery. Thankfully, that stage saw a decline and gradually gave way to the habit of looking inside the book, quickly perusing the first few paragraphs — but not the last! — to see if the introduction to the novel held my attention. And of course, the size of the font used for the text mattered too: if it made my eyes scrunch up to read, then the book was set aside, oftentimes, regretfully. The text needed to be easy on the eye, large enough and with sufficient space between the lines. Incidentally, they call this space between lines 'leading' in publishing parlance. Font size and leading are sometimes compromised in order to reduce the number of pages and so bring down the price of a book.



The other thing that is bothersome is the kind of paper used for the text: sometimes it is so thin that the printing on one side is seen on the other, making it a hodgepodge to read. This is particularly true of textbooks and definitely one reason why so many children put off books. Just as we refer to transparent clothes as 'see-through', the effect of such printing is referred to as 'show-through'.

Anyway, these sidebars aside, for the potential reader, it's a balancing act between the outside and the inside, with the inside carrying the deciding vote. Judged by these standards, the front cover of *Tales from a Vending Machine* wouldn't win prizes for design, but that lacuna is more than made up for by the author who has a number of awards ratcheted up against his books. The curious fact is that Kochi-based Anees Salim had written two books prior to this one: agents and publishers had rejected both of them. In order to get over his dejection, he decided to write something light and racy. That's what he says in a 2018 interview to the *Earthen Lamp Journal*: 'The deeper the wound, the bigger the dose of writing.' This was his coping mechanism, his therapy to combat depression.



It turned out to be the perfect antidote because, as he himself says, Salim wrote this book in less than six months, found an agent in five minutes, who then sold it to a publisher in a week's time. And although he says he will never write another commercial book, this one proved to be his 'luck by chance' because thereafter, publishers lined up to add his book to their lists and his career as a writer blossomed. If you want to know how: *Vanity Bagh* received The Hindu Literary Prize in 2014, *The*

Blind Lady's Descendants won the 2015 Crossword Book Award and the Sahitya Akademi award in 2018, *The Small-Town Sea* was judged best fiction at the 2017 Bangalore Atta Galatta Litfest and won the Tata Literature Live Book of the Year Award. His latest, published in 2021, is *The Odd Book of Baby Names*. *Vending Machine* won its share of fame by being republished as *Fly, Hasina, Fly*, new cover and all!

Vending Machine is a darkly humorous novel woven around the character of Hasina Mansoor who works as a vending machine attendant at the departure lounge of the airport. She lives with her parents, twin sister, and little brother. Caught up in the dynamics of family relationships, Hasina is secretly in love with her cousin who lives upstairs, with his family. She is a peculiar character: you neither love her nor hate her nor do you understand her. But she sometimes makes you laugh out loud by the sheer ludicrousness of her observations and actions. Dig deep beneath the fluff and you hit a hard rock of hopelessness that underlines Hasina's life, but she herself has only a vague awareness of it.

Unpretentious, unambiguous, there's no real plot to Hasina's story, yet you flit with her as she watches flights land and take-off, from fantasy to reality to daydream to humdrum until you are arrested by the ridiculous. As, for instance, when she is once approached by 'a white-haired man dressed in a long kurta… he looked so sad and uprooted and — you won't believe me — was barefoot'. Your grey cells begin to engage at this stage. Overwhelmed by pity she tells him 'in a polite and lowered voice, because my nice little heart bled at the sight of people whose faces were so evidently marked by the scars of penury. "Tea is forty rupees here. Inside the plane it is free." … "You know who I am?" he asked, as if he had had a loss of memory and was not really sure of what he was doing in an airport lounge sans footwear… "I am a painter."' By now you think you know who she is talking about.

Hasina's voice goes on: 'So, my guess was close. (Of late, there had been a steady parade of people like him to Dubai, where they were building the tallest structure in the world.) … I had a vision of him standing on a rope ladder draped over a large building, clutching a rung with one hand, running a paintbrush over the wall with the other while a cruel wind tried its best to send him flying to the ground.' You do know! It's M F Husain!

Take another instance, this time involving Saddam Hussein: 'They showed the hanging all day, the same short footage over and over again; for a while I was under the impression that every time they hung him he refused to die and went defiantly back to the gallows and challenged them to hang him again.'

She feels sorry for him and sticks his picture above her bed and scrawls beneath it: 'I am young and I have a dream.' When her sister Shamla points out that Saddam never said anything like this, Hasina 'was so saddened by the hanging that I wanted to associate all good sayings with poor Saddam. "He said that just before Iraq attacked Kuwait. I read that in *Femina*."' Shamla claims Rajiv Gandhi said this when Indira Gandhi died. Anyway, 'The next day, I went to the Internet café outside the airport and searched in Google for the man who claimed to be young and have the same dream every night. We were both wrong … Those words were spoken by an American king named Martin Luther who died not very long after he had talked in public about his youth and the dream he had at night.'

Politically incorrect, darkly funny, politically and socially satiric yet grounded in harsh realities… all these layers combine to offer readers a healthy dose of perspective on life and how we live. It's a shot of perspective we could all do with in these polarising times.

The columnist is a children's writer and senior journalist

RC பாண்டிச்சேரி வொயிட் டவுன் — RID 2981

சங்கத்தலைவர் வைத்தீஸ்வரன் நலிந்த குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் படிப்பிற்கு உதவினார்.

RC மாலேகாவ்ன் ஃபோர்ட் — RID 3030

நாசிக் அருகில் உள்ள மொஹாடி-யில் பெண்களுக்கு பயிற்சியளிக்க கராத்தே முகாம் நடைபெற்றது.

RC மதுரை மிட்-டவுன் — RID 3000

சங்க உறுப்பினர்கள், ஆனெட்கள் ரூபி உணவு நிறுவனத்துக்குச் சென்றார்கள், அந்தத் தொழிற் சாலை இயங்கும் விதத்தை நேரடியாகக் கண்டு மகிழ்ந்தார்கள்.

RC இந்தூர் கிரேட்டர் — RID 3040

புணே இனாலி அறக்கட்டளை யுடன் இணைந்து நடத்தப்பட்ட செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாமில் 21 பேர் இதில் பலன் பெற்றார்கள்.

RC விசாகப்பட்டினம் — RID 3020

கிராந்தி நகரில் AG ஜகபதி ராஜூ நிதியளிப்பில் உருவான டிஜிட்டல் நூலகத்தை DG M ராம ராவ் தொடங்கி வைத்தார்.

RC ஜம்மு தவி — RID 3070

நக்ரோடா-வில் உள்ள சைனிக் பள்ளி மற்றும் அரசுப் பெண்கள் பள்ளிக்கு DGE டாக்டர் துஷ்யந்த் சவுத்ரி முன்னிலையில் குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டன.

செய்திகள்

RC **உக்லானா மண்டி** — RID 3090

பாரத் விகாஸ் பரிஷதுடன் இணைந்து, 10 பேருக்கு ரூ.30,000 செலவில் செயற்கைக் கை, கால்கள் பொருத்தப் பட்டன.

RC **சித்தார்த் நகர்** — RID 3120

பணியாளர்களின் பிள்ளைகளுக்குப் பைகள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பொருள் பொதிகள் வழங்கப்பட்டன.

RC **மீரட் உமங்** — RID 3100

DG ராஜீவ் சிங்கால், CMO டாக்டர் அகிலேஷ் மோகன் முன்னிலையில் வர்தமான் கல்விக் கழகப் பள்ளியில் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்து முகாம் நடத்தப் பட்டது.

RC **லோனாவாலா** — RID 3131

பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் முன்னெடுப்பாக, இயற்கை எழில் மிக்க இரண்டு இடங்களில் ரோட்டரி, சங்கச் சின்னங்களுடன் செல்ஃபி இடங்கள் நிறுவப்பட்டன.

RC **ஆக்ரா** — RID 3110

உலகப் புகையிலை இல்லா நாளை முன்னிட்டு, பலிவால் பூங்காவில் புகையிலைப் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

RC **அகமத்நகர் பிரியதர்ஷினி** — RID 3132

தட்டச்சு பயிற்சி பெற சங்கம் ஒரு நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு ரூ.20,000 உதவிப்பணம் அளித்தது.

RC தானே டௌன்-டவுன் — RID 3142

ஜுவென்டஸ் நலப் பராமரிப்பு நிறுவனத்தின் ரூ.20 லட்சம் CSR நிதி வழியாக ஒரு பள்ளியில் அமைக்கப் பட்ட மூன்று வகுப்பறைகளை DG டாக்டர் மயூரேஷ் வர்கெ தொடங்கி வைத்தார்.

RC பெங்களூர் சவுத் — RID 3190

இந்தச் சங்கம் ஆதரிக்கிற மூத்த குடிமக்கள் சங்கம் தன்னுடைய பொதுத் தோற்ற முன்னெடுப்பு களின் ஒரு பகுதியாக ரோட்டரியின் நான்கு வழிப் பரிசோதனை, ஏழு கவனப் பகுதிகளைக் கொண்ட, சுற்றுச்சூழலுக்கு இதமான 4,000 துணிப் பைகளை வழங்கியது.

RC குண்டூர் விகாஸ் — RID 3150

கோவிட் நோய்ப் பரவலைத் தடுக்கிற முன் கள வீரர்களுடைய முயற்சி களைத் தொடர் வதற்காக, ரூ.1.8 லட்சம் மதிப்புள்ள இரு சக்கர மருத்துவ உதவி வண்டி ஒன்று கொடையளிக்கப் பட்டது.

RC கொச்சின் பீச்-சைட் — RID 3201

RCC ஆதரவுடன் ஒரு கால்பந்துப் போட்டி நடத்தப் பட்டது, வெற்றி பெற்ற VHS பனங்காட்டிற்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

RC ஹோனாவர் — RID 3170

பார்வைக் குறைபாடு கொண்டவர் களுக்கான தேசியப் பெண்கள் சதுரங்கப் போட்டி ஒன்று நடத்தப் பட்டது. இதில் சுமார் 60 பேர் பங்கேற்றார்கள்.

RC அலப்பி க்ரேட்டர் — RID 3211

250 மாணவிகளைக் கொண்டு சங்கம் கடற்கரையில் போர்களை தடுக்கும் விழிப்புணர்ச்சி நடனத்தை நடத்தியது.

செய்திகள்

RC **திருநெல்வேலி சப்அர்ப்ஸ்** — RID 3212

ராமேஸ்வரம் தூர்தர்ஷன் அலுவலகத்தில் சங்கத் தலைவர் முரளிதரன், செயலாளர் T V சுரேஷ், பிற உறுப்பினர்கள் முன்னிலையில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

RC **பிலாஸ்பூர் குவீன்ஸ்** — RID 3261

உலகப் புகையிலை இல்லா நாளைப் பற்றிய விழிப் புணர்வை உண்டாக்கு வதற்காக, குழந்தைகளுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

RC **ஆர்ச்சிட் சிட்டி ஷில்லாங்க்** — RID 3240

ராஜ் பவனின் தர்பார் அரங்கில் இந்தச் சங்கம் நடத்திய தொழில் சார்ந்த சிறப்பு விருதுகளை மேகாலய ஆளுநர் சத்யபால் மாலிக் வழங்கினார்.

RC **புபனேஸ்வர் ஃபிளமிங்கோ** — RID 3262

திருநங்கையர் பிரச்சனைகளைப் பற்றிய கருத் தரங்கினை சங்கத்தலைவர், Dr ஸ்மிதா சின்ஹா முன்னிலையில் நடத்தியது, இதில் LGBTQ + சமூகத்தைச் சேர்ந்த வல்லுனர்கள் பேசினார்கள்.

RC **பொகாரோ மிட்-டவுன் கப்பிள்ஸ்** — RID 3250

பொகாரோ மாவட்டத்தின் பின்ட்ரஜோரா கிராமத்தில் கண் மருந்தகம் திறக்கப்பட்டது, நோயாளி களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

RC **கல்கத்தா வெஸ்ட் ரிட்ஜ்** — RID 3291

RC கல்கத்தா மகாநகருடன் சேர்ந்து நடத்திய கண் பரிசோதனை முகாமில் 10 கண் புரை நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

The **ROTARY ACTION PLAN**

ENHANCE PARTICIPANT ENGAGEMENT

A CONVERSATION WITH ISAAC B. OWOLABI

"We need to do everything we can to say, 'We're thankful you're here. You matter to us.'"

Learn what your club can do at **rotary.org/actionplan**

Q. What do we mean by enhancing participant engagement?

ISAAC: Simply put, we enhance participant engagement when we meet people where they are, rather than just assuming they'll find a way to fit in. It goes far beyond saying, "Come on in! You're welcome!" Focusing on participants is far more proactive.

Q. Why is this such an important part of the Action Plan?

ISAAC: Rotary has offered me many opportunities to get involved, to learn new skills, and to lead. But I've also met a lot of people who feel there is no room for them to serve in Rotary. And we know we have a challenge when it comes to retaining members.

That's why making a concerted effort to engage participants is important. When participants don't find experiences that feel personally and professionally relevant, when they don't feel seen as individuals, they go elsewhere — and they have plenty of choices.

Q. Why are we talking about participants instead of Rotary members?

ISAAC: The word *participants* encompasses Rotary and Rotaract members as well as all others who engage in Rotary activities, such as family members, friends, and alumni. Thinking in terms of participants gets us to a new mindset. We begin to look at every encounter as an opportunity to show others what Rotary can do — and what they can do with us.

Q. What can clubs do to focus more on participants?

ISAAC: One word: Listen. As leaders in our professions and communities, we already know how important it is to listen — and how much effort it takes to listen in ways that feel genuine and authentic to those around us. We need to apply that same skill and determination to our Rotary involvement.

MEET ISAAC B. OWOLABI. A professor emeritus of business and marketing and also an ordained minister, Owolabi is a member of the Rotary Club of Asheville-Biltmore, North Carolina, and a past governor of District 7670.



Don't just give people a list of things you want to accomplish and ask them to check a box. Instead, ask participants if they're feeling engaged and heard, and if Rotary is meeting their expectations — and listen to what they say.

Another important step is to make sure everyone who engages with us knows that we value their participation. We need to do everything we can to say, "We're thankful you're here. You matter to us."

Q. You're a big believer in surveys. Why are they a useful tool for enhancing engagement?

ISAAC: Surveys are a relatively easy way to identify strengths and weaknesses. In my club, we conduct surveys every year to ask members how they want to be engaged and what community projects they are interested in. I'd also urge clubs to measure member engagement and satisfaction regularly so you can better understand what people are getting out of their Rotary experience.

But don't stop with your club. Consider surveying your community or sponsoring a town hall meeting where people can provide feedback about your projects and share their own ideas. When we engage with the community more broadly, we become known as the people who spot opportunities for positive change.

Let's make sure we see, value, and hear people. When we do that, we make Rotary stronger.

Rotary

சுறுசுறுப்பான போட்டிகளுக்கு விதிகளை இறுக்குங்கள்

TCA சீனிவாச ராகவன்

இந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபன் முடிவடைந்த போது ஒருவர் என்னிடம் போட்டிகளைப் பார்த்தீர்களா என்று கேட்டார். இல்லை என்று நான் கூறினேன். ஏனெனில் களிமண்ணில் விளையாடும் பிரெஞ்ச் ஓபன், டென்னிஸ் திறமையை காட்டிலும், ஒருவரின் சகிப்புத்தன்மையை பரிசோதிப் பதற்கான போட்டி என்பதே என் கருத்து. இது போன்ற கருத்துக்கள் ஒவ்வொருத்தருக்கும் வேறுபட்டாலும் இந்நிலைக்கு பெரிய குற்றவாளி, மேற்கத்திய நாடுகளில் விதிகளை உருவாக்குவதற்கான ஆவேசம் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் எல்லாவற்றிலும் மேலும் மேலும் விதிகளை உருவாக்க விரும்புகிறார்கள். பொதுவாக, இந்த விதிகள் நன்றாக இருந்தன என்று தான் நான் சொல்ல வேண்டும்.

ஆனால் விளையாட்டுத் துறையில் அந்த விதிகள் வெவ்வேறு விளையாட்டுகளை சலிப்பூட்டுவதாக மற்றும் கணிக்கக்கூடியதாக மாற்றுகிறது. கிரிக்கெட், ஹாக்கி, டென்னிஸ்,கால்பந்து அல்லது எந்த விளையாட்டாக இருந்தாலும், கடந்த அரை நூற்றாண்டில் மேற்கத்திய நாடுகளால் உருவாக்கப்பட்ட விதிகள் அதன் மேல் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவாக, இன்று பல போட்டிகள் இருந்தும் நான் குறைவான போட்டிகளையே பார்க்கிறேன். விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பது எனக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் முதலில் பிரச்சனைக்கு காரணம் நான் தான் என நினைத்தேன். ஆனால் படிப்படியாக நான் காரணம் அல்ல விதிகளின் விலங்குகள் போட்டியின் சுறுசுறுப்பை கட்டுபடுத்தியுள்ளது என உணர்ந்தேன்.

நான் பல விதிகளின் சிக்கலில் மட்டும் இப்போது கவனம் செலுத்த உள்ளேன். இடப்பற்றாக்குறை காரணமாக நான் மிகவும் விரும்பும் இரண்டு விளையாட்டுகளான கிரிக்கெட் மற்றும் டென்னிஸ் பற்றி மட்டுமே கூற போகிறேன். மற்ற விளையாட்டுகளுக்கு நீங்கள் இதேபோன்ற பயிற்சியை செய்து விதிகள் போட்டியின் அளவை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதை அறியலாம். இந்த விதிகள் விளையாட்டுகளை ஜடம் போன்ற நிலைக்குக் குறைத்துள்ளன.

முதலில் கிரிக்கெட்டை எடுத்துக் கொள்வோம். 1970களின் இறுதி வரை, போட்டிகளை நிர்வகிக்கும் விதிகள், முக்கியமாக பந்து வீச்சாளர்களை நிர்வகிக்கும் விதிகள் மிகக் குறைவு. இந்த விதிகள் நோ பால், வைட் மற்றும் LBW. இதனால் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்தன. பின்னர் படிப்படியாக விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இவை சிறிய மாற்றங்கள் - நான் தங்களை விவரங்களுடன் சலிப்படைய செய்யமாட்டேன் - இது பேட் - பால் போட்டியை சீரற்றதாக மாற்றும் விளைவை ஏற்படுத்தியது. வீச்சாளர்களின் பந்துகள் அடிபடு வதை மக்கள் காண விரும்புவதால், ஆட்டம் அதிகளவில் பேட்டிங் சார்ந்ததாக மாறியது. இதற்கான காரணம் டி.வி. இங்கிலாந்து பேட்ஸ்மேன் WG கிரேஸ் தன்னை ஆட்டம் இழக்க செய்த பந்து வீச்சாளரிடம் ‘‘மக்கள் நான் பேட்டிங் செய்வதைப் பார்க்க வந்துள்ளனர், நீங்கள் பந்து வீசுவதைப் பார்க்க அல்ல’’ என்று கூறி மைதானத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. இது நடந்தது 100 ஆண்டுகளுக்கு முன்பு. ஒரு நீண்ட கதையை சுருக்கமாகக் கூறுகிறேன், கிரிக்கெட்டின் மிகக் குறுகிய விதி புத்தகம் - 200 பக்கங்களுக்கு மேல் நீளமானது. நீங்கள் அதை இங்கே காணலாம். https://www.lords.org/mcc/the-laws-of-cricket/players-conduct

டென்னிஸிலும் இதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. அனைத்து வகையான வரம்புகளும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன, அவை விளையாட்டு மூளையை மழுங்கடிக்கும் வகையில் சலிப்பானதாக ஆக்கியுள்ளன. பிரெஞ்ச் ஓபன் அப்படிப்பட்ட சலிப்பின் தந்தை. டென்னிஸ் வேகமான விளையாட்டாக இருந்தது. இப்போது அது ஒரு மெதுவான பவர் கேம், ஏனெனில் பந்துகள் கொஞ்சம் பெரிதாக்கபட்டுள்ளது, ஆட்டத்தளத்தின் தரமும் வேறுபட்டுள்ளது. விம்பிள்டனில் அவர்கள் புல்லை வித்தியாசமாக வெட்டுகிறார்கள். டென்னிஸ் ராக்கட் பெரியவை மற்றும் மிகவும் இலகுவானவை, ஆனால் பெரிய பந்துகள், வெவ்வேறு உணர்திறன், கனமான களிமண் மற்றும் புல்வெளி கட்டுப்பாடுகளின் விளைவை முழுமையாக அவற்றால் ஈடுகொடுக்க முடியவில்லை. அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியன் ஓபன் ஆகியவை சற்று சிறப்பாக உள்ளன, ஏனெனில் அங்குள்ள ஆட்டத்தளங்கள் வீரர்களுக்கு உகந்தவையாக இருக்கிறது. டிவி சேனல்கள் அதிக விளம்பர வருவாயைப் பெற போட்டிகளை மழுங்கடித்து அவற்றை நீண்ட காலம் நீடிக்கச் செய்வது மட்டுமே அவற்றின் ஒரே விளைவு என்றால், இந்த மாற்றங்கள் அனைத்தும் ஏன் அவசியம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எனவே எனக்கு ஒரு ஆலோசனை தோன்றுகிறது. 1960கள் மற்றும் 1970களில் இருந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு திரும்புவோம். போட்டிகள் சுறுசுறுப்பாக மாறுமா இல்லையா என்று பார்ப்போம். இல்லை என்றால் நான் தவறு என்று ஒற்றுக்கொள்வேன். ஆம் எனில், அனைவருக்கும் நன்மையே.■

உங்கள் சந்தாவைப் புதுப்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது

ரோட்டரி நியூஸ் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதிசெய்ய, உங்கள் வருடாந்திர சந்தாவைப் புதுப்பிக்கவும்.

ரூ.480-அச்சு | **ரூ.420 - மின் பதிப்பு**

குறிப்பு: ரோட்டரி இதழுக்கான சந்தா விருப்பப்படி அல்ல, கட்டாயமாகும். RIயின் விதிகள் படி சந்தா செலுத்தாததற்காக சங்கங்கள் விலக்கப்படலாம்.

ஆன்லைனில் பணம் செலுத்துவதற்கான எங்கள் வங்கி விவரங்கள்: HDFC Bank, Montieth Road, Egmore, Chennai, Rotary News Trust, SB A/c No 50100213133460; IFSC HDFC0003820. G-Pay மூலமாகவும் சந்தாக்களை செலுத்தலாம். (QR குறியீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது).

- UTR எண், சங்கத்தின் பெயர், தலைவர்/செயலாளர் பெயர், தொகை மற்றும் பரிமாற்ற தேதியை rotarynews@rosaonline.orgல் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அல்லது 9840078074 என்ற எண்ணுக்கு WhatsApp செய்யவும். உறுப்பினரின் பெயருடன் மொழி விருப்பத்தை (ஆங்கிலம், இந்தி அல்லது தமிழ்) குறிப்பிடவும்.
- சந்தா படிவத்தை இங்கே பதிவிறக்கவும்: *https://rotarynewsonline.org/wp-content/uploads/2022/01/Subscription-Form-22-23.pdf.* அனைத்து சங்கத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு ஜூன் மாதத் தில் படிவம் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். புதிய சங்கங்கள் சந்தா பெறுவதற்கு எங்களைத் தொடர்பு கொள்ள சங்க அதிகாரிகள் ஆலோசனை வழங்கவும்.
- சங்க நிர்வாகிகள், சங்க உறுப்பினர்களின் நிலையில் ஏற்படும் மாற்றம் மற்றும் உறுப்பினர்களின் அஞ்சல் முகவரியில் ஏற்படும் மாற்றம் ஆகியவற்றை தொடர்ந்து எங்களுக்கு தெரிவித்து, சீரான மற்றும் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.

  அனைத்து உறுப்பினர்களின் பெயர்கள், PIN குறியீடு, மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் ID உள்ளிட்ட முழுமையான அஞ்சல் முகவரி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். அதனுடன் டிடி/காசோலையும் இணைக்கப்பட வேண்டும்.
- தனிப்பட்ட உறுப்பினர்கள் தங்கள் இதழை தொடர்ந்து பெற, தங்கள் சங்கத்தின் சந்தா பட்டியலில் தங்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யவும்.
- தங்கள் பகுதியில் அஞ்சல் கோளாறுகள்/தாமதங்கள் இருந்தால், சங்கங்கள் மொத்தமாக அனுப்புதல் முறையை தேர்வுசெய்யலாம். தயவு செய்து எங்களை தொடர்பு கொள்ளவும்.

Rotary Club of ..... RI District .....

Name of the President/Secretary .....

Address .....

.....

.....

City ..... State ..... PIN

STD Code ..... Phone: Off. ..... Res. .....

Mobile ..... E-mail .....

Cheque/DD No. ..... Dated ..... for Rs. .....

Drawn on .....

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

Print version ☐ **e- Version** ☐

	English	Hindi	Tamil
No. of Copies			

For every new member the pro-rata is ₹40 a month.

Scan here to pay

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

ADMISSIONS 2022-23 OPEN

FOR : UG/PG/Ph.D./D.Litt./D.Sc. & PROFESSIONAL PROGRAMMES

PSYCHOMETRIC TESTING AVAILABLE FOR VOCATIONAL AND CAREER COUNSELLING

Scholarship for Meritorious/ National Level Sports Achievers

IIS (deemed to be UNIVERSITY) JAIPUR
Accredited by NAAC
FORMERLY ICG

PROGRAMMES OFFERED

https://icfia.org/iisu/psychometrictest

UNDERGRADUATE PROGRAMMES

- B.A.
- B.A. Hons.
- B.Sc.
- B.Sc. Hons.
- B.Com.
- B.Com. Hons.

SPECIALIZED PROGRAMMES

- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/ Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA, UK.

UG - PROFESSIONAL PROGRAMMES

- **B.A.** (J.M.C.)
- **B.F.A.**
- **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics and Artificial Intelligence)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc.** (Fashion Design)
- **B.Sc.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **BBA** (Aviation and Tourism Management)

BACHELOR OF VOCATION (B.Voc.) PROGRAMMES*

- **B.Voc.** (Office Management and Secretarial Practices)
- **B.Voc.** (Banking and Financial Services)
- **B.Voc.** (Entrepreneurship and Business Innovation)
- **B.Voc.** (Digital Marketing)

*UGC Approved

INTEGRATED PROGRAMMES

- **B.A. B.Ed.***
- **B.Sc. B.Ed.***
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

*NCTE Approved

CO-EDUCATIONAL PROGRAMMES
@ IISU Block, ISIM Campus, Mahaveer Marg, Mansarovar

- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.C.A.** (Bachelor of Computer Applications)
- **B.B.A.** (Bachelor of Business Administration)
- **B.Lib.Sc.** (Bachelor of Library and Information Science)
- **M.A.** (Digital Media and Communication)
- **M.C.A.** (Master of Computer Applications)
- **M.B.A. (Dual Specialization, Trimester based)**- Marketing, Finance, Production and Operation Management HR, IB, IT

POST GRADUATE PROGRAMMES

- **M.A.**- English, History, Economics, Psychology, French, Sociology, Geography, Mathematics, Political Science, Statistics, International Relations, Public Administration
- **M.Sc.**- Zoology, Chemistry, Microbiology, Botany, Biotechnology, Psychology, Environmental Science, Geography, Mathematics, Physics, Economics, Statistics
- **M.Com.** - Accounting & Taxation, Business Studies, Financial Studies

PG - PROFESSIONAL PROGRAMMES

- **M.A.**- Journalism & Mass Communication
- **M.A. /M.Sc.** (Yogic Sciences)
- **M.A./M.Com./M.Sc.** (Fashion Design)
- **M.A./M.Com./M.Sc.** (Jewellery Design)
- **M.F.A.** - Applied Art (Graphic Design/Illustration), Print Making, History of Art, Painting, Sculpture (Portraiture, Creative Sculpture)
- **M.S.W.** (Master of Social Work)
- **M.Sc. Home Science** - Clothing and Textiles, Foods and Nutrition, Human Development
- **M.B.A. (Semester Based)** Human Resource Management; International Business; Retail Management; Tourism & Travel Management; Finance; Advertising & Brand Management; Business Analytics; Innovation, Entrepreneurship and Venture Development

MBA/MCA AICTE Approved

RCI APPROVED PROFESSIONAL DIPLOMA IN CLINICAL PSYCHOLOGY

RESEARCH PROGRAMMES

- **Ph.D.** : Admission through Research Entrance Test.

RET (RESEARCH ENTRANCE TEST) : 27.08.2022

Faculty of Arts and Social Sciences
English, Journalism & Mass Comm., Economics, History, Pol. Science, Sociology, Fine Arts, Fashion & Textiles, Mathematics, Psychology, Physical Education, Education, Statistics, Geography

Faculty of Science
Environmental & Life Science (Zoology, Botany, Environmental Science, Biotechnology, Microbiology), Chemistry, Computer Science, Fashion & Textiles, Home Science, Mathematics, Physics, Psychology, Statistics

Faculty of Commerce and Management
Commerce, Management

- **D.Sc./D.Litt.**

DISTINGUISHING FEATURES

- Hostel Facilities Available
- Extra & Co-Curricular Activities
- Placement Support
- NCC
- Wi-Fi Enabled Campus
- NSS
- Extension Activities
- Sports
- Conveyance Facility, covering all parts of Jaipur including remote areas

FOR MORE INFORMATION :
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302020
Rajasthan (INDIA)
+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750
admissions@iisuniv.ac.in
www.iisuniv.ac.in

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT
ARTS & SOCIAL SCIENCES 9358819994
SCIENCE 9358819995
COMMERCE & MANAGEMENT 9358819996

PREPARATORY CLASSES ALONG WITH UG/PG PROGRAMMES

▸ Civil Services ▸ NET ▸ USCMA

SHORT TERM COURSES

- Cyber Security and Cyber Law (Online)
- Certificate Course in Textile Design

CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES, 3-LEVEL CERTIFICATE/DIPLOMA/ADVANCED DIPLOMA ALONG WITH DEGREE PROGRAMMES